2013, September 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013



## வல்லாதிக்க அரசியலில் ஒரு புதிய ஒழுங்கு


தேசியவாத விசச்சுழலுக்குள் மீண்டும் நாடு சிக்கும் அறிகுறி

ஜனாதிபதியிடம் நவிபிள்ளை கூறியது என்ன?

மோடி விவகாரத்தில் தடுமாறும் திராவிடக்கட்சிகள்

சீமான் திருமணமும் சிறகடித்த அரசியலும்

மாலைதீவு தேர்தல் சொல்லும் சேதி



## விக்னேஸ்வரன் அப்படி என்னதான் சொல்லிவிட்டார்?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்மை குறைப்பாட்டினை நீக்கி புதுத்தெம்புடன் புத்துணர்ச்சியூட்டுகின்றது

**Vigomax FORTE**

## சந்தோசமான தாம்பத்திய உறவிற்கு...


**விகோமெக்ஸ் போர்டே**

- ஆண்மை குறைபாடு
- தாம்பத்திய உறவில் ஆர்வமின்மை
- உளவியல் ரீதியான ஆண்மை குறைபாடு
- தாம்பத்திய உறவில் பலவீனம்
- நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆண்மை குறைபாட்டிற்கும் உகந்தது




பாவனை முறை
(காலை, இரவு சாப்பாட்டிற்கு பிறகு ஒரு மாத்திரை விகிதம்)

ஒரு வில்லையின் விலை 20/- ரூ.



**Vigomax FORTE**

விநியோகிப்போர்
**Harcourts (Pvt) Ltd.,**
**14, Station Road, Dehiwala.**
**0773 936 068, 0773 833 450**

நாடு பூராகவும்முள்ள சகல மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதர்கள் தங்களது அநீதிக்கான அதிகாரமாக மாத்திரமே சிந்தனையைப் பயன்படுத்துகிறார்கள். தங்களது சிந்தனையை மறைப்பதற்காக மாத்திரமே பேச்சைப் பயன்படுத்துகிறார்கள்.

- வால்டயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலம்
2013, செப்டெம்பர் 16 - 30
பக்கங்கள் - 68




63 தங்க மீன்கள்
திரை விமர்சனம்



22 கூட்டமைப்பு குறிதவறுகிறதா?
- என்.சத்தியமூர்த்தி

11 விக்னேஸ்வரன் அப்படி என்னதான் சொல்லிவிட்டார்?
- பேராசிரியர் சி.சிவசேகரம்

34 மோடியை எதிர்த்து நிற்க ராகுல் துணிச்சல் கொள்வாரா?
- எம்.பி.வித்தியாதரன்



41 உலக வல்லாதிக்க அரசியலில் ஒரு புதிய ஒழுங்கு
- குமார் டேவிட்

14 ஏட்டிக்குப் போட்டி தேசியவாதத்திற்குள் மீண்டும் நாடு
- கலாநிதி ஜெஹான் பெரேரா



57 தலிபான்களின் குண்டுக்கு பலியான சுஷ்மிதா பானர்ஜி



25 மோடி விவகாரத்தில் தடுமாறும் திராவிடக்கட்சிகள்
- எம்.காசிநாதன்

47 அவுஸ்திரேலிய ஆட்சி மாற்றம்
- கலாநிதி சந்திரிகா சுப்பிரமணியன்

16 இலங்கையின் காஷ்மீரும் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமும்
- சாந்தி சச்சிதானந்தம்

28 டாக்டர் ராமதாஸின் இனவாதமும் சாதிவாதமும்
- அ.மார்க்ஸ்

60 முடிவுக்கட்டத்தை எட்டுகிறதா டெஸ்ட் கிரிக்கெட்?
- சிவகணேசன்

44 மாலைதீவு தேர்தல் சொல்லும் சேதி



31 சீமான் திருமணமும் சிறகடித்த அரசியலும்



54 சுனிலா அபேசேகர
- மதுசூதனன்



66 கடைசிப் பக்கம்
மேமன் கவி


*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# விக்னேஸ்வரனும் தமிழக கட்சிகளும்

வடமாகாண சபைத்தேர்தல் பிரசாரங்கள் மும்முர மாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் சென்னையில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலத் தினசரி யான 'இந்து'வின் கொழும்பு செய்தியாளருக்குப் பேட்டியொன்றை வழங்கியிருந்தார். இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழகத்தின் அரசியல் சக்திகள் கடைப்பிடிக்கின்ற அணுகுமுறைகள் குறித்துக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு அவர் அளித்த பதில் தமிழகத்திலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் இருக்கக்கூடிய சக்திகள் சிலவற்றின் கடுமையான கண்டனத்துக்குள்ளாகியிருந்தது.

'தமிழக அரசியல்வாதிகள் தங்கள் சொந்த நலன்களுக்காக இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்துகிறார்கள். இரண்டு அல்லது மூன்று கட்சிகளிடையே எமது பிரச்சினைகள் டெனிஸ் பந்து போன்று அங்கும் இங்கும் அடிக்கப்படுவது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இதனால் நாம் தான் பாதிக்கப்படுகின்றோம். தமிழகத்தில் உள்ள அரசியல் வாதிகள் எமது பிரச்சினைக்கு நாட்டுப் பிரிவினை தான் தீர்வு என்று கூறும் போது இங்குள்ள சிங்களவர்கள் ஆத்திரப்படுகிறார்கள். இந்தியாவுடன் சேர்ந்து நாம் தனிநாடொன்றை உருவாக்கப் போகின்றோம் என்று அவர்களில் பலர் அஞ்சுகிறார்கள். தமிழகத்தில் கூறப்படுகின்றவற்றால் நாம் பாதிக்கப்படுகின்றோம். உணர்ச்சிவசமான பேச்சுக்களினால் நாம் பாதிக்கப்படக் கூடிய நிலை தோன்றுகிறது' என்பதே விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்து.

எமது பிரச்சினை தொடர்பில் தீவிர மான நிலைப்பாட்டை எடுத்திருக்கின்ற சில தமிழக அமைப்புக்களும் புலம்பெயர் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உள்ள சில அமைப்புக்களும் இலங்கைத் தமிழர்களுக்கு உரிமையும் அதிகாரமும் கிடைக்க வேண்டுமென்று குரல் கொடுத்துப் போராடுகிற சக்திகளை விக்னேஸ்வரன் அவமதிப்பதாக கண்டனம் தெரிவித்தன. கூறிய கூற்றை அவர் வாபஸ் பெற வேண்டுமென்றும் அவை கோரிக்கை விடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. கிளம்பிய சர்ச்சைக்கு தனது பிரதிபலிப்பை தமிழ் ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்திய விக்னேஸ்வரன் தமிழக சக்திகள் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதை அவமதிப்பது தனது நோக்கமல்லவென்றும் அவர்கள் நடத்துகின்ற போராட்டங்களை மதிப்பதாகவும் தெரிவித்தார். இந்துவின் செய்தியாளர் தன்னிடம் பல கேள்விகளைக் கேட்டதாகவும் அவற்றுக்கெல்லாம் தான் அளித்த பதில்களையும் விளக்கங்களையும் அப்பத்திரிகை பிரசுரிக்காமல் தமிழக அரசியல் கட்சிகளைப் பற்றி தெரிவித்த கருத்துக்களை மாத்திரம் வெளியிட்டிருந்ததாகவும் விக்னேஸ்வரன் விசனம் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் தமிழர்களின் அவலங்கள் நீங்க வேண்டுமென்பதற்காக இதய சுத்தியுடன் - எந்தவிதமான சந்தர்ப்பவாத நோக்கமுமின்றி குரல் கொடுக்கின்ற சக்திகள் தமிழகத்தில் நிறையவே இருக்கின்றன. அவற்றை அவமதிக்கின்ற நோக்கம் விக்னேஸ்வரனு க்கு நிச்சயமாக இருந்திருக்காது. எமது பிரச்சினைக்கான தீர்வு எதுவாக இருக்கவேண்டும் என்று தமிழகத்தில் உள்ளவர்கள் யோசனைகளை முன்வைப்பது தொடர்பில் அவர் தெரிவித்த கருத்தில் எந்தத் தவறும் இல்லை என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும்.

தமிழகத்தில் உள்ள பிரதான திராவிட இயக்கக்கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையை தங்களுக்கிடையிலான அரசியல் போட்டாபோட்டியின் அடிப்படையில் அணுகுவதில்லை என்று எவராலும் கூறமுடியுமா? தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கலைஞர் கருணாநிதிக்கு எதிராகப் பயன்படுத்த முடியுமென்றால், அதனால்வரக்கூடிய விளைவுகளையும் பொருட்படுத்தாமல் எந்தப்பிரச்சினையையும் பயன்படுத்தத் தவறுவதில்லை. அதேபோன்றே ஜெயலலிதாவுக்கு எதிராகப் பயன்படுத்த முடியுமென்றால் கருணாநிதியும் எந்தப் பிரச்சினையை யும் தவறவிடுவதில்லை.

திராவிட இயக்க அரசியலின் துரதிர்ஷ்டவசமான இந்த எழுதப்படாத விதிக்கு இலங்கைத் தமிழர்களின் அவலங்கள் கூட விதிவிலக்கானதாக இருப்பதில்லை. இதை முன்னரும் சில சந்தர்ப்பங்களில் நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இவற்றைக் கூறும்போது இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துப் போராடுகிற சக்திகளை அவமதிப்பதாகவோ அல்லது கொச்சைப்படுத்துவதாகவோ அர்த்தப்படுத்துவது சரியான அணுகுமுறையல்ல.

தமிழகத்தின் அரசியல் சக்திகள் எமது இன நெருக்கடியுடன் தொடர்புடைய விவகாரங்களில் கடைப்பிடிக்கக் கூடிய அணுகுமுறைகளோ, முன்வைக்கக் கூடிய கோரிக்கைகளோ இலங்கையில் தமிழ் மக்களுக்கு நெருக்கடிகளை அதிகரிக்கச் செய்பவையாக அமையக்கூடாது என்று கூறுவதில் என்ன தவறு இருக்கிறது.

சில தமிழக அரசியல் தலைவர்கள் தங்களுடைய அரசியல் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி உணர்ச்சிகளைக் கிளறக்கூடியதாகவும் யதார்த்த நிலைமைகளுக்கு முரணாகவும் முன் வைக்கக்கூடிய கோரிக்கைகள் இன்றைய சூழ் நிலையில் இலங்கை மண்ணில் நிலவும் உண்மைகளை உணர்ந்து கொண்டவையாக இல்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான அரசியல் தீர்வு கிட்ட வேண்டுமென்று தமிழகத்தின் எந்தவொரு அரசியல் தலைவருமோ, கட்சியுமோ மானசீகமாக விரும்புவதாக இருந்தால், இலங்கையில் தமிழ் மக்களினால் ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்டிருக்கக் கூடிய அவர்களின் அரசியல் பிரதிநிதிகளினால் (சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்களுக்குப் பொருத்தமான முறையில்) முன்னெடுக்கப்படக்கூடியதாக இருக்கும் நிலைப்பாடுகளுக்கும் செயன்முறைகளுக்கும் ஆதரவு தரவேண்டுமேயன்றி தங்கள் மனம் போன போக்கில் தீவிர மான கோரிக்கைகளை, தீர்வுயோசனைகளை முன்வைத்து குரல் கொடுத்து நிலைவரங்களை மேலும் மோசமாக்கிவிடக்கூடாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## மெட்ராஸ் கபே விமர்சனம்

சமகாலத்தின் கடந்த இதழில் வெளியான காசிநாதனின் 'மெட்ராஸ் கபேயின் கதை ஜெயின் கமிஷன் கரு' என்ற கட்டுரையை ஆர்வமுடன் படித்தேன். ஆனால், காசிநாதன் மெட்ராஸ் கபே படத்தைப் பார்க்காமல் அதைப் பார்த்தவர்களின் கருத்துகளை மட்டும் தெரிவித்திருந்ததால் நடுநிலையான தொரு விமர்சனத்தை கட்டுரையில் காண முடியவில்லை.

தமிழக தமிழின உணர்வாளர்களும் தமிழக காங்கிரஸ்காரர்களும் இருவேறு துருவங்கள் என்பதால் மெட்ராஸ் கபே பற்றிய உண்மைத் தன்மை வெளிப்படாது.

அத்துடன் காசிநாதன் அப்படத்தைப் பார்க்காததால் அவரால் அப்படம் தொடர்பில் தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸின் தலைவர் இளஞ்செழியன் கூறிய கருத்து தொடர்பில் விமர்சிக்க முடியாத நிலையில் இருந்துள்ளார் என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

எனவே, காசிநாதன் மெட்ராஸ் கபே படத்தை திருட்டு வி.சி.டி.யிலாவது பார்த்து விட்டு ஒரு நடுநிலையான விமர்சனத்தை முன்வைக்க வேண்டுமென எதிர்பார்க்கிறேன். ஏனெனில், தமிழக தமிழின உணர்வாளர்கள் மட்டுமல்ல இலங்கையில் மெட்ராஸ் கபே படத்தைப் பார்த்த தமிழர்களும் அப்படம் ஈழத்தமிழரையும், அவர்களின் போராட்டத்தையும் கொச்சைப் படுத்துவதுடன், எந்தவித பொருத்தப்பாடும் இல்லாத வகையில் கதை பின்னப்பட்டிருப்பதாகவும் கூறுகின்றார். எனவே, சமகாலத்தில் ஒரு சரியான விமர்சனம் வரவேண்டும்.

எம்.பிரவீணன், வெள்ளவத்தை.

## துரதிர்ஷ்டவசமான நிலைமை

ஆபிரிக்க இலக்கியத்தின் தந்தை சினுவா ஆச்சிபி பற்றிய தகவல்களைத் தந்த மதுசூதனனுக்கு நன்றி. நான் ஒரு இலக்கிய ஆர்வலராக இருந்த போதிலும் இப்போதுதான் சினுவா ஆச்சிபி பற்றியும் அவரின் இலக்கியப் பணி பற்றியும் அறிந்து கொண்டேன். இப்படிப்பட்டவர்கள் தொடர்பில் எமது தமிழ் இலக்கியத்துறையில் அதிகம் பேசப்படவேண்டும். ஆனால், அவ்வாறானதொரு நிலை இல்லாதது எமது துரதிர்ஷ்டமே.

கே.கரிகாலன்,
கோவில்குளம், வவுனியா

## ஊடக தர்மத்தின் இலட்சணம்

நவிபிள்ளை தொடர்பில் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்த கருத்து சிங்களவர்களுக்கு மட்டுமல்லாது முழு இலங்கையர்களுக்குமே தலைக்குனிவை ஏற்படுத்தியிருந்தது. இதில் மேர்வின் சில்வா மட்டும் தவறிழைக்கவில்லை. அச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து முதல் பக்கத்தில் வெளியிட்ட சிங்கள, ஆங்கில ஊடகங்களும் தமது

## பாலா தம்பு

முதுபெரும் தொழிற்சங்கவாதியான பாலா தம்புவின் பேட்டியொன்றை நீண்ட காலத்திற்குப்பிறகு தமிழில் வாசிக்கக்கூடிய வாய்ப்பை சமகாலத்தின் ஆகஸ்ட் 16-30 இதழ் தந்தது. அந்த பேட்டியை கண்ட ஆய்வாளர் அகிலன் கதிகாமருக்கு நன்றிகள். இடதுசாரிக் கருத்துக்கள் பெருமளவிற்கு இப்போது கவனிக்கப்படாது விட்டாலும் இன்றைய நெருக்கடிமிக்க உலகில் இடதுசாரிச் சிந்தனைகளுக்கு இருக்கக்கூடிய பொருத்தப்பாட்டை அவரின் பேட்டி மூலம் அறியக்கூடியதாகவிருந்தது. தொடர்ந்தும் இத்தகையவர்களின் பேட்டிகள் வெளிவரட்டும்.

ஆர்.சசிகரன், தெல்லிப்பழை

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவருப்பான பரபரப்பை மட்டும் நோக்கமாகக் கொண்டிருந்தனவே தவிர சிறிது கூட பொறுப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை.இது தொடர்பில் குசல் பெரேரா தனது கட்டுரையில் தெரிவித்த கருத்துகள் உண்மையில் பாராட்டுக்குரியவை. மேர்வின் சில்வா விடயத்தில் ஆங்கில, சிங்கள ஊடகங்கள் எப்படி செயற்பட்டிருக்க வேண்டுமென அவர் கூறியுள்ளமைதான் ஊடகதர்மத்திற்கு இலட்சணம்.

அ.விநாயகம், தாவடி, யாழ்ப்பாணம்

## பிள்ளையின் வருகையும் இலங்கை அரசும்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான விஜயத்தைத் தொடர்ந்து எவ்வாறான மாற்றங்கள் அரசியல் அரங்கில் ஏற்படும் என்ற எதிர்பார்ப்புடன் கடந்த சமகாலம் சஞ்சிகையைப் புரட்டியபோது கலாநிதி ஜெஹான் பெரேரா எழுதியுள்ள கட்டுரை என்னைக் கவர்ந்தது. சர்வதேச சமூகத்தின் அக்கறைகளைப் புதுப்பித்திருக்கும் நவிபிள்ளையின் விஜயம் என்ற தலைப்பில் வெளிவந்திருக்கும் இந்தக் கட்டுரையில் கட்டுரையாளர் முன்வைத்திருக்கும் கருத்துகள் முக்கியமானவை.

'தீர்வு இலங்கைக்குள் இருந்தே வரவேண்டியிருக்கும். சர்வதேச சமூகத்திடமிருந்து மட்டும் தீர்வு வரப்போவதில்லை. சர்வதேச சமூகம் நெருக்கடியைக் கொடுக்கும் ஒரு பாத்திரமாக மட்டுமே செயற்படும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க வலுவானதும் சுயாதீனமானதுமான ஒரு பொறிமுறை அவசியம்' என கட்டுரையாளர் குறிப்பிட்டிருப்பது யதார்த்தமானது. அதேவேளையில் தீர்வுக்கான அழுத்தங்கள் சர்வதேச சமூகத்திடமிருந்து மட்டுமன்றி உள்நாட்டிலிருந்தும் உருவாக வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தக் கட்டுரையில் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு அம்சம், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த புத்திஜீவி ஒருவர் இந்தக் கருத்துகளை முன்வைத்துள்ளார் என்பதாகும். தீர்வு முயற்சிகளுக்கும், சர்வதேச சமூகத்தின் ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கும் தடையாகவுள்ள சிங்களவர்கள் இந்தக் கருத்துகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

போர் வெற்றி என்ற பொறிக்குள் உள்ள அரசாங்கமும் இந்தக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ஜெஹான் பெரேரா போன்ற சிங்கள புத்திஜீவிகளின் கருத்துக்கள் இதில் ஏதாவது மாற்றங்களைக் கொண்டுவருமா என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

அவ்வாறான மாற்றம் ஒன்றை சிங்கள சமூகத்திடமும் ஆட்சியாளர்களிடமும் ஏற்படுத்த முடியாவிட்டால், சர்வதேசத்தின் அழுத்தங்களும் நெருக்குதல்களும் தொடரும் என்றுதான் எதிர்பார்க்க வேண்டும்.

எம்.இராஜேஸ்வரன், ஜெயா வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு -04.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 06
2013, செப்டெம்பர் 16 – 30

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



ஒடுக்குமுறையாளரின் ஆற்றல் வாய்ந்த ஆயுதம் ஒடுக்கப்படுபவர்களின் சிந்தனையே.
- ஸ்ரீவ் பிகோ

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

எவ்வளவு காலத்துக்கு என்னால் அரசியலில் ஈடுபடக்கூடியதாக இருக்கும்? இப்போது எனக்கு 74 வயது. விரைவில் 75 வயதை அடையவிருக்கிறேன். சட்டத்துறையில் விரிவுரையாளராக, சட்டத்தரணியாக, பிறகு நீதிபதியாக, உயர் நீதிமன்ற நீதியரசராக மிகவும் கண்ணியமான வாழ்க்கையை வாழ்ந்தவன் நான். இலக்கியத்துறையிலும் சமூக சேவைகளிலும் சமயப்பணிகளிலும் ஈடுபடுவதில் திருப்தி கண்டவன் நான். அரசியலில் நான் ஒருபோதும் இருந்ததில்லை. அரசியல் என்னிடம் வந்தது. எனது உதவியை நாடிவந்தவர்களுக்காக நான் அரசியலில் ஈடுபட்டிருக்கிறேன். அவர்களுக்கு உதவுவேன். அரசியல் எனக்கு எந்தப் பயனையும் தர முடியாது.



நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

வடக்கில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவது தவறு. அது மிகைப்படுத்தப்பட்ட கூற்று. இராணுவத்தில் உள்ளவர்களின் முழுத்தொகையும் சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரமாக இருக்கும்போது வடக்கில் எவ்வாறு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் படைவீரர்கள் இருக்க முடியும்? வடக்கில் ஒரு இலட்சத்து 50ஆயிரம் படைவீரர்கள் இருக்கிறார்கள் என்றால், நாட்டின் ஏனைய பகுதிகள் முழுவதிலும் வெறுமனே 30 ஆயிரம் படைவீரர்களா இருக்கிறார்கள். சரியான விபரங்களைத் தெரிந்து கொள்ளாமல், சர்வதேச சமூகத்தை தவறாக வழிநடத்துவதற்காக கூட்டமைப்பினர் பிழையான எண்ணிக்கை விபரங்களைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.



யாழ்ப்பாண இராணுவத் தளபதி
மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை நாட்டைவிட்டு புறப்படுவதற்கு முன்னதாக வெளியிட்ட அறிக்கை தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகும். 2 கோடி 10 இலட்சம் சனத்தொகையைக் கொண்டதும் 62 ஆயிரம் கிலோமீற்றர் விஸ்தாரம் கொண்டதுமான ஒரு நாட்டில் இருந்து தனியாளினால் இவ்வளவு தகவல்களைத் திரட்ட முடியுமா?



பிரதமர் டி.எம்.ஜெயரத்ன

சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பில் பிறந்து வளர்ந்தவர். கொழும்பிலேயே படித்தவர். தமிழ்த்தேசியக்கூட்டமைப்புத் தலைவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த எவருமே போரில் கொல்லப்படவில்லை. வறிய குடும்பங்களின் பிள்ளைகளை இன்னொரு போருக்குள் இழுத்துவிடவே கூட்டமைப்பின் தலைவர்கள் விரும்புகிறார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பு பிரதானமாக தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களையே உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. அவர்கள் போரில் ஈடுபட்ட இரு தலைமுறையினரை இழந்துவிட்டார்கள். அதே நிலைமை தொடர வேண்டுமென்றே கூட்டமைப்புத் தலைவர்கள் விரும்புகிறார்கள்.



வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச

உலகில் உள்ள சுமார் 200 நாடுகளில் 15 தொடக்கம் 20 வரையான நாடுகள் மாத்திரமே பால்மா வகைகளை பயன்படுத்துகின்றன. ஏனைய நாடுகளில் உள்ள மக்கள் உடன்பாலையே குடிக்கிறார்கள். உலகில் உள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளில் எந்தவொன்றுமே பால்மாவகைகளைப் பயன்படுத்துவதில்லை.



சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

இராணுவத்தின் பிரசன்னத்தினாலும் வெளியார் செல்வாக்கினாலும் தமிழர்களின் கலாசாரம் பாதிக்கப்படுகிறது என்று கூறப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. வடக்கில் இடம்பெறுகின்ற துரித அபிவிருத்தி நடவடிக்கைகளினாலும் தமிழ்க் கலாசாரம் பாதிக்கப்படவில்லை. வெளிநாடுகளில் இருந்து வருபவர்களின் செல்வாக்கினாலேயே அது பாதிக்கப்புடுகிறது. புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்களைப் பின்பற்ற முயற்சிப்பதனாலேயே வடக்கில் உள்ள சிறுவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். கறுப்புக் கண்ணாடி அணிந்து கொண்டிருப்பவர்கள் சகலதையும் எதிர்மறையாகவே பார்க்கிறார்கள்.



குமரன் பத்மநாதன் (கே.பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# ஜனாதிபதியிடம் நவிபிள்ளை கூறியது என்ன?



அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசிய போது கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்திருக்கும் நாட்டின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவின் சிலையையும் அங்கு பறக்கவிடப்பட்டிருக்கும் பௌத்த கொடியையும் அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டாரா?

இதுபற்றி ஒரு சர்சசை மூண்டிருக்கின்ற போதிலும், உண்மையில் நடந்தது என்ன என்பதை எந்தத்தரப்பினருமே தெளிவுபடுத்துவதாக இல்லை.

ஞாயிறு பத்திரிகையொன்றுக்கு பேட்டியளித்த பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதியின் இளைய சகோதரருமான கோதாபய ராஜபக்ஷ டி.எஸ்.சேனநாயக்க சிலையையும் பௌத்த கொடியையும் அப்புறப்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதியிடம் நவநீதம்பிள்ளை கேட்டுக்கொண்டதாகத் தெளிவித்திருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உண்மையில் நவநீதம்பிள்ளை கூறியதுதான் என்ன என்பதை தெளிவுபடுத்திக்கொள்ளும் முகமாக அவருக்கு கடிதமொன்றை எழுதியிருந்தார். சேனநாயக்காவின் சிலையை சுதந்திரசதுக்கத்திலிருந்து அகற்றுவதற்கு ஏற்கனவே திட்டமிட்டிருக்கும் அரசாங்கம் அதற்கு ஒரு காரணம் கற்பிப்பிப்பதற்காக ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் பெயரைப் பயன்படுத்தி ஒரு கதையை இட்டுக் கட்டுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

இதனிடையே, சிலையையும் கொடியையும் அகற்ற வேண்டுமென்று ஜனாதிபதியிடம் நவநீதம்பிள்ளை கூறியதாகத் தெரிவிக்கப்படுவதை அவரின் பேச்சாளர் மறுத்திருப்பதாக ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கொழும்பில் செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்திருந்தார். நவநீதம்பிள்ளையின் பேச்சாளர் இந்த மறுப்பை எழுத்து மூலமல்ல வாய்மூலமே தெரிவித்ததாகவும் அத்தநாயக்க கூறத் தவறவில்லை.

எதிர்கட்சித் தலைவர் எழுதிய கடிதத்துக்கு நவநீதம்பிள்ளை இன்னமும் பதில் அனுப்பவில்லை. ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் முடிவுக்குப் பிறாகாவது தனக்கு பிள்ளை பதில் அனுப்புவார் என்று எதிர்ப்பார்ப்பதாக விக்கிரமசிங்க இரண்டு காரணங்களுக்காகவே அவருக்குத் தான் கடிதம் எழுதியதாகக் குறிப்பிட்டிருக்கிறார். காலிமுகத்திடலில் இராணுவத் தலைமையகம் முன்னர் அமைந்திருந்த நிலத்தில் பிரமாண்டமான ஷங்கிரிலா ஹோட்டல் நிர்மாணிக்கப்படுவதால் அங்குள்ள முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சிலையை அகற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அதேபோன்றே சுதந்திர சதுக்கத்தில் உள்ள டி.எஸ்.சேனநாயக்கவின் சிலையையும் அகற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறதா என்று சந்தேகிப்பதாக கூறியிருக்கிறார்.

(19ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# சிரிய எதிரணி மேற்குலகின் ஆதரவை இழக்கும் ஆபத்து

சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தின் இரசாயன ஆயுதங்களை இல்லாதொழிப்பதற்கு ரஷ்யாவுடன் இணக்கப்பாடொன்றைக் கண்டதன் மூலமாக அமெரிக்கா தங்களைக் கைவிட்டுவிட்டதாக சிரிய எதிரணியினர் கவலையடைந்துள்ளனர். ஆனால், அவர்கள் தங்களைப் புதிய யதார்த்த நிலைவரங்களு க்கு இசைவான முறையில் மாற்றிக் கொள்ள முடியாவிட்டால், மேற்குலகின் ஆதரவை இழக்கும் ஆபத்து இருப்பதாக இராஜதந்திரிகள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

அமெரிக்காவிடமிருந்து சிரிய எதிரணியினரைத் தனிமைப்படுத்தியிருக்கும் பிளவு இரண்டரை வருடகால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச முயற்சிகளை தடம்புரட்டும் ஆபத்தைக் கொண்டிருக்கிறது என்று இராஜதந்திர மற்றும் எதிரணி வட்டாரங்கள் கூறின.

போர்க்களத்தில் ஒரு ஸ்தம்பித நிலை ஏற்பட்டிருக்கிறது. அசாத் இரசாயன ஆயுதங்களைப் பயன்டுத்தியமைக்காக அவரைத் தண்டிப்பதற்கு இராணுவ ரீதியாகத் தலையிடுவதன் மூலம் அமெரிக்கா தங்களுக்கு வாய்ப்பான முறையில் நிலைவரத்தைத் திருப்பும் என்று கிளர்ச்சியாளர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

தலைநகர் டமாஸ்கஸில் கிளர்ச்சியாளர்களின் பகுதியில் ஆகஸ்ட் 21 இல் அரசாங்கப் படைகள் நச்சுவாயுவைப் பயன்படுத்தி மேற்கொண்ட தாக்குதலில் நூற்றுக்கணக்கானவர்கள் பலியானார்கள். இதைத் தொடர்ந்து அசாத்தின் இரசாயன ஆயுதங்களை நிர்மூலம் செய்வதற்கு வாஷிங்டனுக்கும் மாஸ்கோவுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டதையடுத்து திரைமறைவுத் தகராறுகள் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன. இதில் சவூதி அரேபியாவும் துருக்கியும் சிரிய எதிரணியின் பக்கம் நிற்பதாகத் தோன்றுகிறது.


ஜோன் கேரியும் சேர்ஜி லவ்ரோவும்

பரந்த அரசியல் இணக்கத் தீர்வொன்று காணப்படக் கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கக் கூடியதென்று அமெரிக்கா நம்புகின்ற இந்த உடன்பாடு அசாத்தின் படைகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் சாத்தியத்தைக் குறைத்திருக்கிறது. அமெரிக்கா தாக்குதல் நடத்தும் பட்சத்தில் அசாத் இராணுவ ரீதியில் பலவீனமடைந்து புதிய சமாதான மகாநாட்டில் பங்கேற்க நிர்ப்பந்திக்கப்படுவார் என்று எதிரணியினர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எனவே, வாஷிங்டன் திடீரென்று தங்களுக்கும் தெரியாமல் போக்கை மாற்றிக் கொண்டதால் எதிரணியினர் ஆத்திரமடைந்திருக்கிறார்கள். அசாத்தின் படைகள் மீது எந்த நேரத்திலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்று எதிரணியில் பிரதான பிரிவினராக விளங்கும் சிரிய தேசிய கூட்டணியின் (Syrian National coalition) தலைவர்களுக்கு அறிவித்த ஒரு வாரகாலத்தில் அமெரிக்கா அதன் போக்கை மாற்றி ரஷ்யாவுடன் இணக்கப்பாட்டுக்கு வந்தது என்று கூட்டணி வட்டாரங்கள் மூலம் அறியக் கூடியதாக இருந்தது.


எதிரணியின் அபிப்பிராயத்தின் படி, ரஷ்யாவுடனான அமெரிக்காவின் உடன்பாடு அசாத் அரசாங்கத்தின் இருப்புக்கு நியாயப்பாட்டை வழங்குவதாக அமைகிறது. இதன் மூலமாக சிரியக் கிளர்ச்சியின் இலக்கு மலினப்படுத்தப்படுகிறது. அத்துடன் எந்தவொரு பேச்சுவார்த்தையின் முடிவிலும் அசாத் பதவியில் இருந்து அகற்றப்படக்கூடிய சாத்தியப்பாட்டையும் குறைக்கிறது.

அசாத்தை பதவியில் இருந்து அகற்றுவதென்பது சிரியாவில் மாற்றத்துக்கான தனது இலக்காக இன்னமும் இருக்கின்ற போதிலும், அவரின் இரசாயன ஆயுதங்களைக் கையாளுவதென்பதே முதலில் முக்கியமானதாகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சிலதினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

இராஜதந்திர ரீதியில் முன்னுரிமை கொடுக்கப்படுகின்ற விவகாரங்கள் மாற்றமடைந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையைக் கையாளுவதில் சிரிய தேசியக் கூட்டணி நெகிழ்வுத் தன்மையைக் காண்பிக்காவிட்டால், எதிரணி மேற்குலகின் ஆதரவை இழக்கக் கூடும் என்று இஸ்தான்புல்லில் அண்மையில் நடைபெற்ற எதிரணியின் பிரதான கூட்டமொன்றை அவதானித்த இராஜதந்திரிகள் கூறுகிறார்கள். ■ *(ராய்ட்டர்ஸ்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரன் அப்படி என்னதான் சொல்லிவிட்டார்?



நமது நிலைமை கடினமானது. நமக்கு பிற ரின் நட்பும் ஆதரவும் தேவை. அதை நல்ல மனதுடன் தருபவர்கள் நமக்கு ஆணை யிட முயல்வதில்லை. நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஆணையிடுவோர் எமது உண்மையான நண்பர்கள் இல்லை.

உள்நாட்டு அரசியல்



பேராசிரியர்
சி.சிவசேகரம்

சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தேசியவாத அரசியலுக்குள் இழுத்துவரப்பட்ட காரணம் என்னவென்று இப்போது புதிதாக மீளாராய்வுகள் நடக்கின்றன. சம்பந்தப் பட்ட அனைத்துக் கட்சியினருக்கும் உடன் பாடான ஒரு பிரதான வேட்பாளராக அவர் இருந்தார் என்பது போக அவர் தேர்தலில் இறங்க உடன்பட முன்பிருந்தே அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பிர தம வேட்பாளராக வர வேண்டும் என ஊட கங்களும் ஊக்குவித்தன. அதற்குப் பின் னால் யார் இருந்தார்கள் என்று புதிதாகத் துப்புத்துலக்க முற்படுகிற நமது நிபு ணர்க ளுக்குப் பழைய உண்மைகள் இப்போது நினைவில் இரா.

தூர விலகிச் செல்லத்தான் காதல் அதிகமா கிறது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். 'தேசப்பற்றும்' கொஞ்சம் அம்மாதிரித்தான் போலத் தெரிகிறது. இப்போது தமிழ் மக்கள் உள்ள மன நிலையில், யாராவது வந்து இந் தாருங்கள் தமிழீழம் என்று வழங்குவார் களானால், அதை அவர்கள் மகி ழ்வுடன் ஏற்க வாய்ப்புண்டு. ஆனால், என்ன விலை கொடுத்தாவது தமிழீழத்தைப்பெறலாம் என்று பலர் நினைத்திருந்த காலம், போர் முடிவதற்கு முன்னரே போய்விட்டது. இந் தப் பின்னணியில், புலம்பெயர்ந்த தமிழரி டையே உள்ள மேட்டுக்குடிகள், இப்போது எப்படியாவது தமிழீழத்தைப் பெற்றுத் தரப் போவதாக அங்கே போக்குக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை இங்கே உள்ள யாரும் நம்புவதாக நான் நினைக்கவில்லை. ஆனாலும் அது சிங்களப் பேரினவாதிக ளுக்கு மிகவும் வசதியாக உள்ளது. எனவே அவர்களுடைய புலம்பெயர்ந்த தமிழீழத் தேசப்பற்றும் மேற்குலக அரசாங்கங்களின் வெளியுறவுக் கொள்கை மீதான தமது செல் வாக்குப் பற்றிய புனைவுப் பிரகடனங் களும் இலங்கை அரசாங்கம் சிங்கள மக்க ளுக்குப் புலிப் பூச்சாண்டி காட்ட உதவுகின்றன. தேசிய இனப்பிரச்சினையின் தீர்வைத் தட்டிக் கழிப்பதற்கான வாய்ப்பை அவை வலுப்படுத்துகின்றன. உண்மையி லேயே அவர்களு க்கு ஒரு தமிழீழம் வேண் டும் என்றால், அவர்கள் என்றுமே வந்து வாழ எண்ணாத ஒரு தாய்நாடு வேண்டும் என்றால், அதை அவர்களே போராடிப் பெற் றுக்கொள்ளட்டும். ஆனால், இங்கே உள்ள வர்கள் அதை அவர்களுக்காகப் போராடிப் பெற வேண்டும் என்பதும் அவர்கள் சொல்வழி நடந்தே எதையும் பெற வேண் டும் என்பதும் நாம் எவரும் ஏற்கத் தகாதவை.

நம் நிலைமை கடினமானது. நமக்குப் பிற ரின் நட்பும் ஆதரவும் தேவை. அதை நல்ல மனதுடன் தருவோர் நமக்கு ஆணையிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல்வதில்லை. நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஆணையிடுவோர் உண்மையான நண்பர்களில்லை. எனவே தான், விக்னேஸ்வரன் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் நாம் என்ன செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவதை எதிர்த்துப் பேசியுள்ளமை வரவேற்கத்தக்கது. இதைச் சொல்லும் முதலாவது தமிழ்த் தேசியப் பேச்சாளர் அவரல்ல. எனினும், தமிழ் மக்களிடையே அவரைப் பற்றி ஏற்பட்டுள்ள எதிர்பார்ப்பும் உற்சாகமும் அந்தக் கருத்துக்கு வலுவூட்டியுள்ளன. இது நிச்சயமாக புலம்பெயர்ந்த தேசப்பற்றாளர்களுக்குக் கசப்பூட்டுகிறது.

அதைவிட அதிகமாக நமது கடும் தமிழ்த்தேசியவாதிகளில் சிலரைச் சினக்க வைத்தது தமிழக அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதத்தை அவர் சாடியுள்ளமை தான். ஈழத் தமிழரின் இன்னல்கள் தமிழக மக்களை வருத்துகின்றன. அவர்கள் நடுவே தாம் எதையாவது செய்ய வேண்டும் என்று எண்ணுவோர் பலர் உள்ளனர். அந்த வகையில், புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் போன்று அவர்களிடமும் ஒரு ஆழமான அக்கறையும் நெஞ்சத்துடிப்பும் உண்டு. ஆனால், என்ன செய்வது எனச் சரியான முடிவை அவர்கள் எடுப்பதானால், இங்குள்ள நிலைமைகளை விளங்க வேண்டும். இங்கே உடனடியாக இயலுவது எது எனவும் நீண்ட காலத்தில் உதவுவது எது எனவும் அவர்கள் விளங்க வேண்டும். அவர்கள் தாமாக எதையும் செய்யக்கூடிய சூழல் அங்கு இல்லை. தமிழகத்தின் சிறிய, பெரிய தமிழ்த்தேசியவாதக் கட்சிகள் யாவும் அதைத் தமக்குச் சாதகமாக்குகின்றன.

கருணாநிதியினதும் தி.மு.க.வினதும் நாடகங்களை அவரது நாடறியும். நாமும் அறிவோம். ஜெயலலிதாவினதும் அ.இ.அ.தி.மு.க.வினதும் நாடகங்கள் அதிகம் வேறுபட்டனவல்ல. அவருடைய அறிவிக்கப்படும் கனவு தமிழீழமல்ல என்பதை விட்டால், ஈழத் தமிழருக்காக முதலைக் கண்ணீர்வடிக்க அவருக்கும் நன்றாக இயலும். அவர்களில் எவரும் புதுடில்லியில் அதிகாரத்திற் பங்காளிகளாக இருந்தபோது எப்படி நடந்து கொண்டுள்ளனர் என்பதை நாம் அறிவோம். கோபாலசாமியினதும் ம.தி.மு.க.வினதும் கதையும் அது தான் என்பதை விளங்குவதில் நமக்குச்சிரமம் இருக்கலாம். ஆனால், பத்துப் பதினைந்து ஆண்டுகள் முன்பு ம.தி.மு.க. டில்லியில் அதிகாரத்தில் பங்கேற்றிருந்த போது என்ன செய்தது என்பது நமக்கு நினைவிருக்க வேண்டும்.

அவர்களுடைய சில வீராவேச உரைகளுக்கு ஈழத்தமிழ் ஏடுகள் வழங்கும் முக்கியத்துவத்திற்கு மேலாகச், சிங்கள ஏடுகள் ஏன் முக்கியம் தருகின்றன என்பது நமக்கு விளங்க வேண்டும். அவர்களை விடத் தீவிரமாக வீராவேசமும் இனவெறியும் கக்குகிற உரைகளை வழங்குவோர் உள்ளனர். அவர்கள் வெறுமனே தமிழீழ ஆதரவுடன் நிற்பதில்லை. தமிழகத்தில் வாழும் தமிழரல்லாத உழைக்கும் மக்கள் அனைவரையும் வெறுப்புடன் நோக்குகிறவர்களாகவும் அவர்கள் உள்ளனர். அதை விடவும், உலகளாவிய தமிழர் ஒற்றுமையைப் பேசும் அதே வேளை, உள்ளூரில் மிக மோசமான சாதிய அரசியல் நடத்துவோராகவும் உள்ளனர். இவ்விடயங்கள் நமது ஊடகங்களில் பேசப்படுவதில்லை.

இவ்வாறானோர் ஈழத் தமிழருக்கு ஆதரவு என்ற பெயரில் பேசுகிற வெறித்தனமான சொற்களும் அப்பாவிச் சிங்களவருக்கு எதிரான வன்செயல்களும் எந்த வகையிலும் நம் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு தேட உதவா. அதைவிடத் தமிழரை மேலும் தனிமைப்படுத்தவும் சிங்களப் பேரினவாதத்தை வலுப்படுத்தவுமே அவை உதவுவன. இக்கருத்தை நேர்மையான தமிழ் இடதுசாரிகளும் முற்போக்காளர்களும் எப்போதிருந்தோ சொல்லி வந்துள்ளனர். எனினும், விக்னேஸ்வரனிடமிருந்து ஆணித்தரமாக அது வந்துள்ளமை நமது தீவிர தமிழ்த் தேசப்பற்றாளர்களை அதிர வைத்திருக்கிறது.

விக்னேஸ்வரனின் நேர்காணலில் அவர் சொன்னவற்றில் முக்கியமான சில பகுதிகள் நீக்கப்பட்டு 'இந்து' நாளேட்டில் வெளியானவை பற்றி 'இந்து' பத்திரிகை நிறுவனத்தையும் அதன் பொறுப்பாளரான என்.ராமையும் அறிந்தோர் வியக்க எதுவுமில்லை. 'இந்து'வின் விஷமம் மட்டு

> தமிழகத்தில் இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுக்கின்றவர்களில் சிலர் உலகளாவிய தமிழர் ஒற்றுமையைப் பேசும் அதேவேளை உள்ளூரில் மிக மோசமான சாதிய அரசியல் நடத்துவோராகவும் உள்ளனர். இந்த விடயங்கள் நமது ஊடகங்களில் பேசப்படுவதில்லை. நமது கடும் தமிழ் தேசியவாதிகளில் சிலரை சினக்க வைத்தது தமிழர் அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதத்தை விக்னேஸ்வரன் சாடியுள்ளமைதான்

மன்றி 'ஜூனியர் விகடன்' போன்ற ஏடுகளின் பொறுப்பின்மையும் ஏற்படுத்தியுள்ள பிரச்சினைகள் பற்றி விக்னேஸ்வரன் அறியாமலிருக்க நியாயமில்லை. ஒரு நேர்காணலைப் பிரசுரிக்க முன்பு அதன் பிரதியைத் தன்னிடம் காட்டி உடன்பட்ட பின்பே பிரசுரிக்க வேண்டும் என வற்புறுத்தும் தேவையை இனியாவது அவர் உணர்வாரென நம்புகிறேன். எவ்வாறாயினும் அவர் சொன்ன கருத்துகளின் பெறுமதியை நாம் மறுக்கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது.

இன்னொரு விதமாகச் சொல்வதானால், அவருடைய ஒவ்வொரு சொல்லும் அவருடைய எதிரிகளால் மட்டுமன்றி ஆதரவாளர்கள் எனப்பட்டோராலும் ஐயத்துடன் அல்லது அச்சத்துடன் கவனிக்கப்படுகின்றன. எனவே பிற வட பிரதேச த.தே.கூ.பிரமுகர்கள் போல் வாய்க்கு வந்தபடி பேசுவது அவருக்குக் கேடானது. பேசுவதில் மட்டுமன்றி அது எவ்வாறு பிரசுரமாகிறது என்பதிலும் அவருக்கு மிகுந்த கவனம் தேவை.

அவர் சொன்ன விடயத்தில் 'தமிழக மக்களின் அன்பையும் ஆதரவையும் மதிக்கிறோம்' என்ற பகுதி இந்துவில் தற்செயலாக விடுபடவில்லை. பன்னிரண்டு ஆண்டுகள் முன்பு என்னையும் சிங்கள எழுத்தாளர் ஒருவரையும் திருவனந்தபுரத்திற் செவ்வி கண்ட 'இந்து' நிருபர், நாமிருவரும் பேரினவாத அரசை விமர்சித்துச் சொன்னவற்றைப் பிரசுரிக்காமல் விட்டதை இப்போது நினைவு கூருகிறேன்.

விக்னேஸ்வரனின் பல கருத்துகளுடன் நான் உடன்படமாட்டேன். அவருடைய பழைமைவாதமும் மூட நம்பிக்கைகளின் விளிம்பில் நிற்கும் சில 'ஆன்மிகக்' கருத்துகளும் எனக்கு அறவே உடன்பாடற்றவை. அவருக்குப் பாராளுமன்ற அரசியலில் உள்ள நம்பிக்கை எனக்கு இல்லை. அனைத்திலும் முக்கியமாக, அவர் சர்வதேசச் சமூகத்தின் மீதும் இந்தியா மீதும் வைத்துள்ள நம்பிக்கைகளை விட மோசமான மூடநம்பிக்கை அவரிடம் இல்லை என்பது என்னுடைய கருத்து. ஆனால், அதற்காக அவரை ஒரு வல்லரசினதோ இன்னொரு வல்லரசினதோ எடுபிடி என்று சொல்லத்துணியமாட்டேன். த.தே.கூட்டமைப்பின் கட்சித் தலைமைகளை இந்திய அரசாங்கம் ஆட்டிவைப்பதைப் பற்றி நாம் அறிவோம். கூட்டமைப்பிலிருந்து சிலர் ஓரங்கட்டப்பட்டதற்கு இந்திய அரசாங்க நெருக்குவாரங்களே காரணம் எனவும் அறிவோம். விக்னேஸ்வரனுக்கு அவ்வாறான விடயங்களிற் பங்கு

> தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் விடுதலைக்கு காட்டுகிற பாதையில் மக்கள் போராட்டத்திற்கு இடமில்லை. பிரமுகர் அரசியலும் பிறநாட்டு ஆதரவும் தமிழ் மக்களின் விடுதலையை வெல்ல இது வரை உதவவில்லை. இனியும் உதவா. விக்னேஸ்வரன் இந்த உண்மையையும் ஆராய்ந்தறிந்து மக்களிடம் அதையும் சொல்லும் தைரியத்தை விரைவில் புலப்படுத்துவாரானால் மெச்சத்தக்கவராவார்

இருந்ததாகக் கூற இயலாது. எனவே நமக்கு ஏற்பில்லாத ஒரு கருத்தைச் சொன்னதற்காக எவருக்கும் நோக்கம் கற்பிப்பதும் முத்திரை குத்துவதும் சமூகப் பொறுப்புள்ளோர் செய்கிற காரியங்களல்ல.

தமிழக அரசியல்வாதிகள் பலரும் புலம்பெயர்ந்த தமிழரின் தலைவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளுகிற சில குழுக்களும் செய்வதென்ன? தாங்கள் பரிந்துரைக்கிற விடயங்களின் விளைவுகள் தம்மை எவ்வாறு பாதிக்கமாட்டா என்று நன்கு அறிந்துகொண்டே, இலங்கையில் உள்ள தமிழரும் தமிழ்த்தேசியவாதத் தலைமைகளும் என்ன செய்ய வேண்டும் என்றும் தேசிய இனப்பிரச்சினைக்கு இன்னது தான் தீர்வு எனவும் பரிந்துரைக்கிறார்கள். அது நமக்கு நல்லதல்ல. இதைத் தெளிவாகவும் தைரியமாகவும் சொன்ன முதலாவது தமிழ்த் தேசிய அரசியற் பிரமுகராக விக்னேஸ்வரன் இருப்பதை நாம் வரவேற்க வேண்டும்.

இந்தியாவும் மேற்குலகும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைப் பற்றிய அக்கறையுடையவையல்ல. அவை தமிழரின் அவலத்தைத் தமது தேவைகட்காகப் பயன்படுத்துகின்றன. அவற்றைப் பற்றி ஈழத் தமிழ்த் தலைமைகளின் எதிர்பார்ப்புகள் எவ்வாறு இருந்தாலும், அவை தமிழ் மக்களின் போராட்டம் பற்றி நேரடியான பரிந்துரைகளை முன்வைக்காததுடன், அவற்றின் நிலைப்பாடுகள் தமிழ் மக்களின் தேவைகளுடன் எத்தொடர்பும் அற்றவை என்றளவில் நாம் அவற்றுக்கு பரிந்துரைக்க அதிகம் இல்லை. இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நம்மில் எவரும் கோருவதைக் கூட, அவை தமக்கு வசதியான முறையிலேயே பயன்படுத்துகின்றன. அவற்றிடம் அவற்றின் திருகுதாளங்களைப் பற்றிப் பேசுவதன் மூலம் த.தே.கூ. எதையும் சாதிக்க இயலாது. ஆனால், தமிழ் மக்கள் இந்தியாவையும் மேற்குலகையும் நம்ப வேண்டுமென்ற பொய்யை அவர்கள் தொடர்ந்தும் சொல்லி வருகிறார்கள். அவை பற்றிய எதிர்பார்ப்பு விக்னேஸ்வரனிடமும் உள்ளது. அது விமர்சிக்க வேண்டியது.

த.தே.கூ., விக்னேஸ்வரனை தனது குறுகிய நோக்கங்கட்காகவே களமிறக்கியது என்பதை விக்னேஸ்வரன் அறிவார் என நினைக்கிறேன். அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்குக் காட்டுகிற பாதையில் மக்கள் போராட்டத்துக்கு இடமில்லை. பிரமுகர் அரசியலும் பிறநாட்டு ஆதரவும், தமிழ் மக்களின் விடுதலையை வெல்ல இது வரை உதவவில்லை. இனியும் உதவா.

விக்னேஸ்வரன் இந்த உண்மையையும் ஆய்ந்தறிந்து மக்களிடம் அதையும் சொல்லும் தைரியத்தை விரைவிற் புலப்படுத்துவாராயின் மிக மெச்சத்தக்கவராவார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



கலாநிதி ஜெஹான் பெரேரா

# ஏட்டிக்குப்போட்டியான தேசியவாத விசச்சுழலுக்குள் மீண்டும் நாடு சிக்கும் அறிகுறி

**சகல மக்களுமே ஏனைய சமூகங்களின் அடிப்படைப் பிரச்சினைகளை, அச்சங்களை, எதிர்பார்ப்புக்களை கூடுதலான அளவுக்கு புரிந்து விளங்கிக் கொள்ள வேண்டியது மூன்று தசாப்த கால போருக்கு பின்னரான காலகட்டத்தில் மனக்காயங்களை குணப்படுத்துவதற்கான செயன்முறைகளின் தொடக்கப்புள்ளியாக அமைய முடியும்**

இலங்கையில் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு இனநெருக்கடி தொடர்பில் இடம்பெற்றிருக்கக் கூடிய அரசியல் நிகழ்வுகளில் மிகவும் முக்கியமானது என்றால் அது வடமாகாண சபைத்தேர்தல் நடத்தப்பட்டமையேயாகும் என்பதிற் சந்தேகமில்லை. இந்தத் தேர்தல் நடைபெறுமா என்று சந்தேகம் நிலவிய காலகட்டமொன்று இருந்தது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைத் தவிர, அரசாங்கத்தின் வேறு எந்த முன்முயற்சியுமே தமிழ் மக்களின் அக்கறைக்குரிய அரசியல் பிரச்சினைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. நெருக்கடியின் அடிப்படைக் காரணிகளைக் கையாளக்கூடிய ஆணைக்குழுவின் விதப்புரைகளும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதேயாகும்.

இனநெருக்கடியின் அடிப்படைக் காரணிகளைக் கையாளுவது தொடர்பில் முன்னேற்றம் எதுவும் இல்லாத சூழ்நிலையில், வடமாகாணத்தில் ஒரு மாகாண சபை அமைக்கப்படுவது சாத்தியமான சிறந்த முன்னோக்கிய நகர்வேயாகும். ஏனைய 8 மாகாணங்களில் வாழுகின்ற மக்கள் அனுபவிக்கின்ற அதே அதிகாரங்களே வடமாகாணசபை மூலம் அங்கு வாழுகின்ற மக்களுக்குக் கிடைக்கும். மாகாணசபைகளுக்கு மிகவும் குறைந்தளவு அதிகாரங்களே பரவலாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. பரவலாக்கப்படக்கூடிய அதிகாரங்களையும் வளங்களையும் அதிகரித்துக் கேட்பதற்கு ஏனைய மாகாணங்களுடன் இணைவதற்கு இது வடமாகாணத்துக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கும். ஏனைய மாகாணங்களும் கூடுதல் அதிகாரங்களைப் பெறுவதற்கு விரும்பும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ்மக்கள் மீது காட்டப்பட்ட பாரபட்சம் இனநெருக்கடியின் அடிப்படைக் காரணிகளில் பிரதானமான இடத்தைப் பிடிக்கிறது. நாட்டின் ஏனைய பகுதி மக்கள் அனுபவிக்கின்ற (பரவலாக்கப்பட்ட) அதே அதிகாரங்களை வடபகுதி மக்கள் எந்தளவுக்கு அனுபவிப்பார்களோ அந்தளவுக்கு பாரபட்சமும் குறைவானதாக இருக்கும். எனவே, வடக்கில் மாகாணசபை நிறுவப்படுகின்றமை நல்லிணக்கத்துக்கான ஒரு செயற்பாடாக அமைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. 1987 ஜூலையில் இந்திய- இலங்கை சமாதான உடன்படிக்கையைக் கைச்சாத்திடும்போது ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன கூறிய வார்த்தைகள் எவ்வளவு சரியானவை என்பதை இப்போது தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. 'இந்த இளந்தளிரை' பாதுகாக்குமாறு அவர் மக்களை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். வடமாகாணசபை பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு இளந்தளிர்.

மாகாணசபைத் தேர்தல் பிரசார காலத்தில் சர்ச்சைகள் தோன்றியிருக்கலாம். அது தவிர்க்க முடியாததே. இனப்பிளவுகள் இருக்கின்ற நாடுகளிலே மக்களிடம் வாக்குகளைக் கேட்கின்ற அரசியல்வாதிகள் இனத்துவ தேசியவாத உணர்வுகளைக் கிளறுவதற்கு முனைகிறார்கள். ஒவ்வொருவரும் தனது சொந்த இனமே மகத்தானது என்றும் அல்லது தனது சொந்த இனமே பெரிதும் அச்சுறுத்தப்படுகின்றது என்றும் கூறி தேசியவாத உணர்வுகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளறுவது இலகுவானது. அரசாங்கமும் எதிர்க்கட்சி யும் மக்கள் செல்வாக்கைப் பெறுவதற்கு போட்டி போட்டுக் கொண்டு தேசியவாதத்தைப் பயன்படுத்துவது என்பது இலங்கையில் இனநெருக்கடியின் வரலாறாகும். நாட்டில் அமைதி, சமாதானத்துக்கு பங்கம் ஏற்படுவதையும் பொருட்படுத்தாமல் அவர்கள் இதைச் செய்துவந்திருக்கிறார்கள். தேர்தல் பிரசார காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனமும் அதன் கூட்டங்களில் உரையாற்றியவர்கள் வெளிப்படுத்திய கருத்துக ளும் வாக்குகளைப் பெறுவதில் இனத்துவ தேசியவாதத்திற்கு இருக்கின்ற வலிமையில் எமது அரசியல்வாதிகளுக்கு இருக்கின்ற நம்பிக்கையை வெளிக்காட்டியது. சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை, கொலையுண்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீதான புகழுரை, போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணை வேண்டுமென்ற கோரிக்கை என்பன இதில் உள்ளடங்குகின்றன. இவற்றின் எதிர்வினைகளைத்தேர்தல்கள் நடைபெற்ற ஏனைய இரு மாகாணங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. பலம் வாய்ந்த அரசாங்கமொன்றுக்காகவும் நாட்டுப் பிரிவினைக்கு எதிராகவும் வாக்களிக்குமாறு வடமேல் மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் அரசாங்கம் மக்களைக் கேட்டுக்கொண்டது.

தேர்தல் பிரசாரங்களின் போது ஏட்டிக்குப் போட்டியாக தேசியவாத அரசியல் உணர்வுகள் கிளப்பப்பட்டதன் விளைவாக அரசியல் சமுதாயத்தில் ஏற்பட்ட அதிகரித்த துருவமயமாதலை தேர்தலுக்குப் பிறகு வெற்றி கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். வடமாகாணத்தில் மாத்திரமல்ல, ஏனைய எட்டு மாகாணங்களிலும் கூட மாகாணசபைமுறை வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் கூடுதலான அதிகாரங்களும் வளங்களும் மாகாணசபை முறைக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இதில் காணி, பொலிஸ் அதிகாரங்களும் உள்ளடங்கும். அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் ஏற்கனவே இந்த அதிகாரங்கள் இருக்கின்றன. அவை நாட்டு அரசியலமைப்பின் ஒரு அங்கமாக இருக்கின்றன. இந்த அதிகாரங்கள் வழங்கப்படுவதை மாகாண சபைகளினால் உறுதிப்படுத்த முடியாது. கூடுதல் அதிகாரங்களையும் வளங்களையும் பெறுகின்ற இலக்குகளைச் சாதிப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு மாகாண சபைகளுக்குத் தேவை.

> இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையை 1987 ஜூலையில் கைச்சாத்திட்ட போது மாகாண சபை முறையை ஒரு இளந்தளிர் என்று வர்ணித்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அதை பாதுகாக்க வேண்டும் என்று மக்களை வலியுறுத்தினார். வட மாகாணசபை இன்று பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு இளந்தளிர்

அதற்கு விட்டுக்கொடுப்பு மற்றும் நம்பிக்கை உணர்வு அவசியமானதாகும்.

மற்றவரை எதிரியாக நடத்துவதும் கண்டனம் செய்து அவருடன் பணியாற்ற மறுப்பதும் இலகுவானதாகும். பல்லின மற்றும் பன்முக தாராள சமுதாயமொன்றில் வாழ்வதற்கு விட்டுக்கொடுப்பும் இணக்கப் போக்கு உணர்வும் தேவையாகும். பன்முக சமுதாயத்தில் ஒரு சமூகம் அல்லது ஒரு குழு (நாடொன்றில் அல்லது பிராந்தியமொன்றில்) பெரும்பான்மை எண்ணிக்கையில் இருந்தாலும் கூட, தான் விரும்புகின்ற வகையில் தீர்மானத்தை எடுக்க முடியாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம் பிள்ளை இலங்கையில் இருந்த போது சிவில் சமூகக்குழுக்களின் பிரதிநிதிகளுடன் குறுகிய நேர சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அவர் நெல்சன் மண்டேலாவின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினார். அமைதி, சமாதானத்துக்காக சில வேளைகளில் நாம் விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும் என்பதை மண்டேலா நடைமுறையில் உலகிற்குக் காட்டினார். அவரைப் போன்ற தலைவர்கள் எமது நாட்டுக்கும் தேவை.

சகல மக்களுமே ஏனைய சமூகங்களின் அடிப்படைப் பிரச்சினைகளை, அச்சங்களை, நம்பிக்கைகளை, எதிர்ப்பார்ப்புகளை கூடுதலான அளவுக்கு புரிந்துவிளங்கிக்கொள்ள வேண்டியது மூன்று தசாப்த கால போருக்குப் பின்னரான கால கட்டத்தில் தேசிய நல்லிணக்கத்துக்கான-காயங்களைக் குணப்படுத்துவதற்கான செயன்முறைகளின் தொடக்கப் புள்ளியாக அமையும். பெரும்பான்மைத் தேசியவாதமும் சிறுபான்மைத் தேசியவாதம் ஒன்றை மற்றது போஷித்து வளர்க்கின்ற விசச் சுழலுக்குள் மீண்டும் நாட்டு மக்கள் அகப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இது மிகவும் கவலைக்குரியதாகும். உணர்வுகளினால் பிளவுபட்டுப்போயிருக்கும் நாட்டை மீள ஐக்கியப்படுத்துவதற்கு- வேறுபட்ட சமூகங்கள் ஒன்றை மற்றது புரிந்துணர்ந்து கொண்டு வாழ்வதற்கு அவசியமான பண்புகளைப் பற்றியும் தந்திரோபாயங்களைப் பற்றியும் பொது மக்களுக்குப் போதிப்பதில் அரசாங்கத்துக்குப் பிரதான பொறுப்பு இருக்கிறது. இதற்காக அரசாங்கத்தின் தலைமைத்துவம் அதன் வசமிருக்கும் அரசு இயந்திரத்தையும்

*(19ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்




# இலங்கையின் காஷ்மீரும் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமும்

அறுபது வருடங்களாக சொன்னதைத்தான் வட மாகாண சபைத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கோரியிருக்கின்றோமே தவிர புதிதாக எதையும் கூறவில்லை என்று சுமந்திரன் எம்.பி. அளித்த விளக்கம் சாது ரியமிக்க அரசியலாகத் தெரியவில்லை. மாறி வரும் அரசியல் சூழ்நிலைகள் எதிர்ப்பு சக்திகளைக்கூட நேச சக்திகளாக மாற்றுகின்றன. இவற்றை தமது குறிக்கோளுக்கு சாதகமாக பயன்படுத்தும் வல்லமை அரசியல் கட்சிகளுக்கு இருக்க வேண்டும்.



சாந்தி சச்சிதானந்தம்

இக்கட்டுரை வெளிவரும்போது மாகாணசபைத் தேர்தல்கள் முடிவடைந்து வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்பட்டிருப்பார்கள். எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தெற்கிலும் வடக்கிலும் ஏற்படுத்திய கண்டன அலைகளின் நிமித்தம் அதனை சற்றே ஆழமாக நோக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. இந்த விஞ்ஞாபனம் விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையினைத் தோண்டியெடுப்பதாகத் தெற்கும், மாகாண சபையின் கையாலாகாத் தன்மையினை மறைத்து இல்லாத நம்பிக்கைகளைத் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவிப்பதாக குறிப்பாக வடக்கின் சிவில் சமூகக் குழுவும் தமது ஆட்சேபனைகளை ஆவணப்படுத்தியிருக்கின்றன. இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் இப்படியானதொரு விஞ்ஞாபனத்தை வெளியிட்டது என ஆராய்வது பயனுள்ளதாகும்.

யுத்தம் முடிந்தவுடன் அரசியல் தீர்வு என்று கூறிய ஜனாதிபதி, தமிழ் மக்கள் முன்வைத்த ஒரே தீர்வு இனவழிப்பாகும். நான்காவது ஈழப் போரினை இந்த அரசு முன்னெடுத்த விதம் அது எந்தவித சலுகையையுமோ உரிமையையுமோ தமிழ் மக்களுக்குக் கொடுக்க முடியாத அளவுக்கு அதனகத்தில் ஓர் இராணுவமயப்படுத்தப்பட்ட தீவிரவாதப் போக்கினை வேரூன்ற வைத்துவிட்டது. காணி பறிபோதல், பௌத்த மயமாக்குதல், அரசு மேற்கொள்ளும் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் வடக்கையும் கிழக்கையும் துண்டாடவும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தவும் உபயோகிக்கப்படுதல், இவையாவும் தமிழ் மக்களின் மனோநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்தி விட்டன. அரசு தரும் 'அபிவிருத்தி'யினை வைத்துக் கொண்டு தாம் எப்படியாவது முன்னேறலாம் என்கின்ற நப்பாசையுடன் கூட வாழ முடியாத தன்மையை ஏற்படுத்தி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பின்னணியில், பொதுபல சேனா போன்ற பௌத்த தீவிரவாதக் குழுக்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்ட வன்முறையும் வெறுப்புச்சித்தாந்தமும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தினை சந்தேகமற நியாயப்படுத்துவனவாகத் திரும்பின. விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் நாங்கள் உங்களுடன் நின்றோம், எல்லைப் படைகளாக உதவினோம், எமது மொழி இயலுமையைக் கொண்டு புலனாய்வு உத்தியோகத்தர்களாக எத்தனையோ துப்புத் துலக்கினோம், நீண்ட ஊடுருவல் தாக்குதல் வீரர்களாக வன்னிக்குள் பல சாகசங்கள் புரிந்தோம், அதற்குள் மறந்து விட்டீர்களாவென எத்தனை விதமாக முஸ்லிம் தரப்பினர் ஊடகங்களிலும் சிங்கள ஆட்சியாளர்களுடன் நேரிலும் வாதாடியிருப்பர். ஆனால், இக்காரணிகளெவையும் அச்சமூகத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை அதற்குக் கொடுக்கவில்லை. இது தமிழ் மக்களுக்கு அடுத்த பாடமாகிற்று. இவற்றின் விளைவினால் தமிழ்ச் சமூகம் தற்சமயம் ஓர் போராட்ட அலையினால் எழுச்சி கொண்டு வருகின்றது என்றால் மிகையாகாது.

தாம் எப்பொழுதும் அஹிம்ஸாவாதிகளாக இருந்திருக்கின்றனர், விடுதலைப்புலிகள் அவர்களது பயங்கரவாத அணுகுமுறையினால்தான் தோற்கடிக்கப்பட்டனர், ஒன்றிணைந்த நாட்டினுள்ளே தமிழ் மக்களுக்கான தீர்வு, மாகாணசபையின் மூலம் படிப்படியாகத் தமிழ் உரிமைகளை வென்றெடுப்பது என்றபடி ஒரு மென் தேசியவாதப் போக்குடன் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த மாகாணசபைத் தேர்தலை ஆரம்பத்தில் அணுகிற்று எனலாம். அதன் பிரதம வேட்பாளர் நீதியரசரும் அதே போன்ற மிதவாதப் போக்கைத்தான் கடைப்பிடிக்கக் காணப்பட்டார். ஆனால், தேர்தல் பிரசாரங்களுக்காகக் களத்தில் இறங்கிய பொழுதுதான் தமிழ் மக்களின் நாடித் துடிப்பு அவர்களுக்குப் புரிய ஆரம்பித்தது போலிருக்கின்றது. அவர்கள் கடுந்தேசியவாதப் போக்கினைக் கைக்கொள்ளத் தள்ளப்பட்டார்கள். ஆரம்ப காலத்திலிருந்து தேர்தல்கள் நெருங்கும் காலம் வரையிலான கூட்டமைப்பின் தேர்தல் கூட்ட உரைகளை ஆராய்ந்து பார்த்தால் இந்தப் போக்கு புலப்படும். அதன்படியே அதன் விஞ்ஞாபனமும் இறைமையானது மக்களின் பாற்பட்டது, அவர்களின் சம்மதத்துடனேயே கொழும்பு அரசு அவர்களை ஆளமுடியும் என்கின்ற துணிச்சலான பிரகடனத்துடன் களத்தில் விடப்பட்டது.

எவ்வளவுதான் கடுந்தேசியவாதப் போக்கினைக் கைக்கொண்டாலும், நடைமுறையில் அதனைச் செயற்படுத்துவதற்கான மூலோபாயங்களை அது வகுக்கும்போதுதான் அதன் உள்ளக இயலுமைகள் அங்கு தொழிற்பட ஆரம்பிக்கின்றன. உண்மையில் மக்களை சகல பிரதேசங்களிலும் அணி திரட்டும் பொறிமுறைகளை வைத்திருந்தால்தான் இப் போக்கிற்கு ஈடு கொடுக்கலாம். ஆனால், தமிழ்த் தேசியக்கூட்டமைப்போ அதன் அங்கத்துவக் கட்சிகளோ இப்பொறிமுறைகளுக்கான கட்சிக் கட்டமைப்புகளைக் கொண்டிருக்கவில்லை. பிரதேசம்தோறும் இயங்கும் குழுக்கள், மக்கள் மத்தியிலான தொடர்ந்த விழிப்புணர்வுப் பிரசாரங்கள், முக்கிய விடயப்பிரச்சினைகள் தொடர்பான கட்சிக் குழுப் பிரதிநிதித்துவமும் நடவடிக்கைகளும், இவையாவும் வீரியத்துடன் இயங்கக் கூடிய அதிகாரப் பரவல் ஆகியனவே இங்கு அவசியமான பொறிமுறைகளும் கட்சிக் கட்டமைப்புகளுமாகும். கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் அனைத்தையும் நோக்கினால், அவை ஒரு தலைவரின் கீழோ அல்லது ஒரு சின்னஞ் சிறிய குழுவினரின் கீழோ அவர்களின் ஆட்சிக்குட்பட்டதாகவே இயங்குகின்றன என்பதை உணரலாம். புதிய தலைமைத்துவங்கள் தோன்றவோ வளர்க்கப்படவோ இங்கு வழியேயில்லை. இளைஞர்கள், விவசாய, மீன்பிடித்தொழிலாளர்கள், நிபுணர்கள், பெண்கள், வர்த்தகர்கள் எனப் பல்வேறு சமூகக் குழுக்களின் பிரத்தியேகப் பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய அமைப்புகள் அதற்குள் கிடையாது. சமகால அரசியலை மக்கள் புரிதலுக்குரிய அரசியல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஒருபோதும் செயற்படுத்தப்படுவதில்லை. அதற்கான ஊடகங்களும் அவை வசம் கிடையாது. இந்த நிலையில் மக்களை ஓர் தொடர்ந்த கடும் போராட்டத்திற்காக அணி திரட்டுதல் எப்படி சாத்தியப்படும்? இதன் காரணத்தினால்தான் த.தே. கூட்டமைப்பு தனக்கு வெகுகாலம் பரிச்சயமான ஒரே கோட்டில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. அந்தக் கோடுதான் சர்வதேச (இந்திய - அமெரிக்க) சமூகத்தின் ஆதரவைக் கோரலும், புலம் பெயர்ந்த தமிழர்களின் ஆதரவைக் கோரலுமாகும். அதன் விஞ்ஞாபனத்தின் பழைய வரலாறு ஒப்புவிக்கும் நீண்ட முன்னு

> **தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தனக்கு வெகுகாலம் பரிச்சயமான ஒரே கோட்டிலேயே பயணித்துக்கொண்டிருக்கிறது. சர்வதேச சமூகத்தினதும் புலம்பெயர் தமிழர்களினதும் ஆதரவைக் கோருதலே அந்தக்கோடு. பழைய வரலாறை ஒப்புவிக்கும் விஞ்ஞாபனத்தின் நீண்ட முன்னுரையும் சுயநிர்ணய வலியுறுத்தும் வாசகங்களும் அதன் மொழியாடலும் இந்தத் தரப்பினருக்காகவே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையும், சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் வாசகங்களும் அதன் மொழியாடலும் இந்தத் தரப்பினருக்காக உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என அனுமானித்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய முறையில் அரசியல் பணிகள் மக்கள் மத்தியில் ஆழப்படுத்தப்படாத காரணத்தினால், இவ் விஞ்ஞாபனத்தின் கொள்கைத் திட்டங்களும் மேலோட்டமாகவே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று கூறப்படுகின்றதே தவிர, அவற்றிற்கான மூலோபாயங்களோ, அவற்றை செயற்படுத்த முடியாவிடில் ஒரு குறித்த கால எல்லைக்குள் என்ன மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதோ தெளிவில்லை.

தென்னிலங்கையில் இவ்விஞ்ஞாபனத்திற்கெதிராகத் தோன்றிய எதிர்ப்பலைகளுக்குப் பதில் கொடுக்கும் போது, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், 'நாம் 60 வருடங்களாகச் சொன்னதைத்தான் இங்கு கூறியிருக்கின்றோமே தவிர, புதிதாக எதனையும் கூறவில்லை' என விளக்கமளித்திருந்தார். ஒரே கதையினைத்தான் கூட்டமைப்பு 60 வருடங்களாகக் கூறி வருகின்றது என்பது சாதுரியம் மிக்க அரசியல் இல்லை என்பது இக்கட்டுரையாளரின் கருத்தாகும். மாறி வரும் அரசியல் சூழ்நிலைகள் எதிர்ப்புச் சக்திகளைக்கூட நேச சக்திகளாக மாற்றுகின்றன. இவற்றை தமது குறிக்கோளுக்கு சாதகமாகப் பயன்படுத்தும் வல்லமை எந்த அரசியற் கட்சிக்கும் இருக்க வேண்டும். அதற்கேற்ப அதன் மூலோபாயங்களும் மொழியாடல்களும் மாற்றமடைந்தே தீரவேண்டும். இன்று தென்னிலங்கையில் அவ்வாறான மாற்றங்கள் தென் படுகின்றன. ஒரு பக்கத்தில், இனவாதத்தின் தொழிற்பாட்டினால் விடுதலைப்புலிகளை அழித்ததற்கான நன்றியுணர்வும் ஆதரவும் அரசுக்கு இருந்தபோதிலும், மறுபக்கத்தில், தமிழ் மக்களை ஒடுக்கிய அதே அரச இயந்திரம் தம்மீதும் அடக்குமுறையைக் கட்டவிழ்க்கும் அனுபவத்தினை சிங்கள மக்கள் உணரத் தொடங்கியிருக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில், அவர்களை இனவாதப்படுகுழிக்குள் மீண்டும் தள்ளாது, தமிழ் மக்கள் பக்கம் சார்ந்து கொள்ளச் செய்யும் முயற்சி தமிழ் மக்களின் அரசியல் இலக்குகளை அடைவதற்கு ஏதுவாக்கும்.

'ஐக்கிய இலங்கைக்குக் கீழ்' என த.தே.கூட்டமைப்பு தனது கொள்கைப் பிரகடனத்தில் கூறுகின்றது. ஆனால், ஐக்கிய இலங்கை என்பதன் தாற்பரியம் என்ன என்பது அதன் விஞ்ஞாபனத்தைப் படிக்கும்போது புரியவில்லை. அது முழுவதுமே தமிழ் மக்களைப் பற்றியும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களைப் பற்றியுமாகவே இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி, தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்திற்கு ஐக்கிய இலங்கை தொடர்பான புது அர்த்தங்களை அது கற்பித்திருக்க முடியும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது, அவர்களின் உரிமைக்கான போராட்டம் என்பதனை விடவும், ஸ்ரீலங்கா அரசினை ஜனநாயகமயப்படுத்தும் போராட்டமாகவே கொள்ளப்படவேண்டும். சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு அரசியல் அதிகாரத்தினை மென்மேலும் மத்தியப்படுத்திக்கொண்டு வரும் இந்த அரசுக்கெதிராக இடதுசாரிக் கட்சிகள் கூடப் போராடவில்லை, தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களுந்தான் போராடினார்கள். அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற ஜனநாயக விரோதச் சட்டங்களுக்கெதிராக தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களுமே போராடியிருக்கின்றனர். இவற்றினால் பாதிக்கப்பட்ட ஜே.வி.பி இயக்கம்கூடப் போராடவில்லை. இன்று இந்த அரசு இராணுவமயப்படுத்தப்படலுக்கெதிராக தமிழ் மக்களே மீண்டும் போராட்டத்தினை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், அதன் பயனாக சிங்களப் பிரதேச மக்களும் அவர்களின் தொழிற்சங்க இயக்கங்களும் பாதிக்கப்படுகின்றன என்பது கண்கூடு. வடக்கில் இராணுவம் மக்களின் காணி பறிபோதலுக்குக் காரணமாயிருப்பது போலவே தெற்கிலும் நிகழுகின்றது. அனுராதபுர மாவட்டத்தில் மட்டுமே கிட்டத்தட்ட 30 இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டு அங்குள்ள வறிய விவசாயிகள் பலரின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு புறம் பௌத்த பிக்குகளின் அதிகாரத்தின் கீழும் மறுபுறம் இராணுவ அரசின் ஆக்கிரமிப்பின் கீழும் அல்லாடும் அந்த மக்களுக்கு தமிழ் மக்களின் போராட்டம் மட்டுமே ஓர் உந்து சக்தியாக இருக்கின்றது.

**விஞ்ஞாபனத்தின் கருத்தியல் ரீதியான வார்த்தைப் பிரயோகங்கள் சிங்கள மக்களின் மனங்களில் குடியிருக்கும் பயங்களைக் கிளறிவிடும் வாய்ப்புகளையே சிங்கள அரசியல்வாதிகளுக்கு வழங்குகின்றது. இது மகிந்த ராஜபக்ஷ அரசின் வெற்றிக்கே மீண்டும் மீண்டும் இட்டுச் செல்கிறது**

இந்த நிலையில், கருத்தியல் ரீதியான தீவிரமான வார்த்தைப் பிரயோகங்கள் சிங்கள மக்களின் மனங்களில் குடியிருக்கும் பயங்களைக் கிளறிவிடும் வாய்ப்புகளையே சிங்கள அரசியல்வாதிகளுக்கு வழங்குகின்றது. இது மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் தேர்தல் வெற்றிக்கே மீண்டும் மீண்டும் இட்டுச் செல்லுகின்றது. ஒரு ஜனநாயகத் தேர்தலில் வெற்றி பெற்ற அரசிற்கெதிராக எந்த சர்வதேச சமூகமும் நடவடிக்கை எடுப்பது மிகக் கடினமான காரியம் என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தினை தென்னிலங்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்க உரிமைப்போராட்டங்களுடனும் வெலிவேரிய மக்களின் போராட்டத்துடனும் இணைத்துப் பேசி அதனை இலங்கை அரசினை ஜனநாயக மயப்படுத்தும் போராட்டமாக உருவகித்திருந்தால் இதன் எதிர்வினை வேறாக இருந்திருக்கும். தென்னிலங்கையின் மாகாணசபை உறுப்பினர்களும் அதற்கான முழு அதிகாரங்களும் தமக்கு வேண்டும் என்று குரல் எழுப்பக்கூட முடியாத நிலையில் அவர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் போராட்டமாக தமிழ் மக்களின் போராட்டத்தினைச் சித்தரித்திருக்கலாம். இதை விடுத்து, திரும்பவும் எதிரும் புதிருமாகப் பிரியும் அரசியலுக்கு இது வழிவகுத்து விட்டது துரதிர்ஷ்டமே. சுமந்திரன் கூறியதுபோல 60 வருடங்களாகப் பண்ணிய அரசியலையே திரும்பப் பண்ணியிருக்கின்றோம்.

எப்படியிருப்பினும், இவ்விஞ்ஞாபனத்தினை 1976ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஒப்பிடலாம். எவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய போராட்ட உணர்வின் விளைவாக அது தோன்றியதோ அவ்வாறே இது தோன்றியிருக்கின்றது. கிட்டத்தட்ட இலங்கையின் காஷ்மீராக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உருவாகிக்கொண்டு வருகின்றன. அத்துடன், இனியும் கொழும்பில் இருந்து கொண்டு வடக்கில் அரசியலில் ஈடுபடும் வழக்கத்தையும் இது மாற்றக்கூடும். ஏற்கனவே, சி.வி.விக்னேஸ்வரன் கொழும்புக்குத் திரும்புவதற்கு அனுமதிக்கமாட்டோம் என பொதுபல சேனா அறிக்கை விட்டிருக்கின்றது. சென்ற வாரம், இலங்கை இந்திய நட்புறவுச் சங்கத்தின் தலைவர் நீலகண்டன் அச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் ஆற்றிய உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுபல சேனா அவருடைய அலுவலகத்துக்கு முன் சிறிய ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் நடத்தியிருக்கின்றது. இங்கிருந்து கொண்டு அரசியல் பணிகள் செய்வதன் ஆபத்தினையும் இச்சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன. சுருங்கக்கூறில் ஒரு நூற்றாண்டு கால தமிழ் மிதவாத அரசியலின் போக்கு சிங்களத் தீவிரவாத நிர்ப்பந்தத்தினால் மாற்றமடைய ஆரம்பித்திருக்கின்றது. ■

---

*(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

நவநீதம்பிள்ளை இலங்கையில் இருந்து புறப்பட்டு பத்துநாட்கள் கழித்தே பாதுகாப்புச் செயலாளர் பத்திரிகைப் பேட்டியில் சிலை, கொடி விவகாரத்தை குறிப்பிட்டிருக்கிறார் என்றும் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நாத்தாண்டியாவில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி ராஜபக்ஷ, அண்மையில் இந்த நாட்டுக்கு வருகைதந்த ஒருவர் பௌத்த கொடியை அகற்றுமாறு கேட்டதாகக் கூறியதாக குறிப்பிட்ட விக்கிரமசிங்க, ஜனாதிபதி அப்போது நவநீதம்பிள்ளையின் பெயரைக் குறிப்பிடவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். பௌத்த கொடியை



அகற்றச் சொன்னவர் யார் என்பதை பகிரங்கப்படுத்த வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பு என்று விக்கிரமசிங்க கூறினார்.

தான் கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்ற கருத்தொன்று தொடர்பில் இலங்கையில் அரசியல் சர்ச்சையொன்று மூண்டிருக்கும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் எழுதிய கடிதத்துக்கு இன்னமும் நவநீதம்பிள்ளை ஏன் பதில் அனுப்பவில்லை என்று ஒரு கேள்வி எழுகிறது. அதேவேளை, அரசாங்கம் இதுவிடயத்தில் இரு பொருள்படுதலுக்கு இடமின்றி நிலைவரத்தைத் நாட்டுமக்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

நவிபிள்ளையின் அலுவலகம் இறுதியாக விடுத்த அறிக்கையொன்றில் இலங்கையில் அவருக்கு எதிரான அவதூறுப் பிரசாரமொன்று முன்னெடுக்கப்படுவது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளதே தவிர, டி.எஸ். சேனநாயக்க சிலை, பௌத்தக் கொடி சர்ச்சை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. ■

---

*(15ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

வெகுஜன ஊடகங்களையும் பயன்படுத்த வேண்டும். இதுவிடயத்தில் வடக்கில் முன்னணியில் நின்று செயற்பட வேண்டியது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலையாக கடமையாகும். தமிழ் மக்களுக்கு அந்தப் பண்புகளைக் கூட்டமைப்பின் தலைவர்கள் போதிக்க வேண்டும்.

வடமாகாணத்தின் முதலமைச்சராக வருகின்ற உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு வலுவான தார்மீக சக்தியைக் கொடுக்கக் கூடியவராக விளங்குகிறார் என்பதிற் சந்தேகமில்லை. இந்த நிலைமை எதிர்காலத்திலும் தொடர வேண்டும். வடமாகாண சபையின் எதிர்கால நிருவாகம் கண்ணியமான -தரமிக்க அரசியல்வாதிகளை உள்ளடக்கி, நாட்டின் ஏனைய பகுதியும் பின்பற்றக்கூடிய முன்னுதாரணத்தை வகுக்க வேண்டும். அதிகாரங்களும் உரிமைகளும் அளிக்கப்பட்டால் மாகாணசபைகளினால் வலுவான சிவிலியன் நிறுவனங்களைத் தோற்றுவிக்க முடியும். சமூக மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்கு அத்தகைய சிவிலியன் நிறுவனங்கள் மிகமிக அத்தியாவசியமானவையாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏ. பீர்முகம்மது

மதவிரோத வன்முறைகளுக்கு எதிரான முஸ்லிம் சமூகத்தின் பிரதிபலிப்புகளை ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் கனதியான முறை யில் விளக்கிக்கூறத் தவறிய முஸ்லிம் தலைமைகள்

# நவிபிள்ளையின் வருகையும் மௌனம் காத்த முஸ்லிம் தலைமைகளும்

உள்நாட்டு அரசியல்


ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை அவர்கள் இலங் கைக்கு வருகை தந்தவேளையில், தனது சமூகம் எதிர்நோக்கும் பிரச்சி னைகளை முன்னிலைப்படுத்த முஸ் லிம் தலைமைகள் தயங்கி (தவறி) யுள்ளன என்ற அபிப்பிராயம் தற் போது முன்வைக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் இடம்பெறப் போகும் எந்தவொரு சர்வதேச வினா வுதல்களும் தீர்வுகளும் நவிபிள்ளை யின் அறிக்கையிலிருந்தே தெறிப்புச் செய்யப்படும் என்பதை விளங்கிக் கொண்ட நிலையிலேயே இவ்வா றான அவதானிப்புகள் மேலெழுகின் றன. முஸ்லிம் தரப்பினரின் வெளிப் படுத்தல்கள் சிலவற்றைத் தொகுத் துப்பார்க்கின்றபோது மேற்படி அபிப் பிராயங்கள் புறந்தள்ள முடியாதவை என்றே பலரும் கருதுகின்றனர்.

நவிபிள்ளையின் வருகைக்குச் சில தினங்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் முஸ் லிம் கட்சியொன்றின் தலைவர் என்ற வகையில் அல்லாமல் நீதியமைச்சர் என்ற வகையில் சந்தித்துக் கலந்துரை யாட தனக்குச் சந்தர்ப்பம் கிடைத் துள்ளதாகவும் நாட்டின் நற்பெயரு க்கு பாதிப்பு ஏற்படாதவகையிலேயே தனது கருத்துகள் அமையும் என்றும் கூறினார். அமைச்சர் இவ்வாறு குறிப் பிட்டதன் மூலம் 'முஸ்லிம் சமூகம்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்கும் பிரச்சினைகளை' முன்வைத்து அரசாங்கத்தைச் சங்கடத்துக்குள் வீழ்த்த தான் விரும்பவில்லை என்பதைக் கூறி தனக்குத் தானே ஒரு பாதுகாப்புக்கோட்டினையும் வரைந்து கொண்டார் என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

சந்திப்பு இடம்பெற்றபோது பள்ளிவாசல்கள் தாக்கப்படுவதுபற்றி உயர்ஸ்தானிகர் வினவியுள்ளார். 'இது தொடர்பில் முஸ்லிம் அமைச்சர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளோம். நல்லதொரு பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்' என்று இராஜதந்திரமாகப் பதில் அளித்துள்ளார் அமைச்சர்.

அதேவேளை, கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட 240 இற்கும் மேற்பட்ட மனித உரிமை மீறல்களை 33 பக்கங்களில் தயாரித்து அமைதியான முறையில் கையளித்துவிட்டு கடமையை முடித்துக் கொண்டது. முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவைப்பெற்ற கட்சியின் 'அறிக்கைக் கையளிப்பு' சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கப் போதுமானதல்ல என்பதே பலரதும் கருத்தாகும்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்பது அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையிலான மற்றொரு அரசியல் கட்சி ஆகும். இக்கட்சியின் செயலாளர் நாயகத்தினால் நவநீதம்பிள்ளை நாட்டைவிட்டுச் சென்ற பிறகு அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதில் உயர்ஸ்தானிகரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு உரியவர்களிடம் கேட்டதாகவும் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு அடுத்த நிலையில் முஸ்லிம் மக்களின் வாக்கு வங்கியைக் கொண்டுள்ள குறிப்பாக வடபுலத்தில் ஆதரவுத் தளத்தினைக் கொண்டிருக்கும் ஒரு கட்சி தனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டபோது மாற்றுநடவடிக்கை ஒன்றினைத் தேட . முனையாதது முஸ்லிம்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர் அதாவுல்லா தலைமையில் தேசிய காங்கிரஸ் என்ற கட்சி செயற்படுகின்றது. பாராளுமன்றத்தில் ஒரு ஆசனம் உண்டு. கட்சியின் பெயரில் முஸ்லிம் என்ற சொல்லே இடம்பெறக்கூடாது என்று கருதுகின்ற ஒரு கட்சி இது. நவநீதம்பிள்

**நவிபிள்ளையின் வருகையை முஸ்லிம் தலைமைகள் பயன்படுத்திய தவறிய நிலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் பற்றி அம்மையாருக்கு தெளிவாக விளக்கிக்கூறியிருப்பதாகத் தெரிகிறது**

ளையின் வருகை தொடர்பில் அவர் எந்தக் கருத்தும் வெளியிட்டதாகத் தெரியவில்லை. இவ்வாறே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்ற முஸ்லிம் அமைச்சர்களோ மற்றவர்களோ நவிபிள்ளையின் வருகையைப் பயன்படுத்துவது தொடர்பில் கருத்து எதனையும் முன்வைக்கவில்லை.

முஸ்லிம் தலைமைகள் நவிபிள்ளையின் வருகையை சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தத் தவறியுள்ள (அல்லது தயங்கிய) நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி அம்மையாருக்குத் தெளிவாக விளக்கியுள்ளதான செய்தியும் உண்டு. புத்தளம் பள்ளிவாசலுக்குள் பொலிஸார் புகுந்து முஸ்லிம்களைச் சுட்டபோது முஸ்லிம் தலைவர்கள் வாய்மூடி மௌனமாக இருந்தனர். அப்போது தந்தை செல்வநாயகம் பாராளுமன்றத்தில் முஸ்லிம்களுக்காக ஓங்கிக் குரல்கொடுத்ததை இச் செயற்பாடு நினைவுக்குக் கொண்டு வந்தது.

இவ்வாறே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மதவழிபாட்டுத் தலங்களின் பிரச்சினைகள் பற்றி நவிபிள்ளை வினவியுள்ளார். அவ்வேளை, குழுவில் ஒருவராகக் கலந்துகொண்ட கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம்.முசம்மில் சில விளக்கங்களைக் கொடுத்துள்ளார்.

மத விரோத வன்முறைகளுக்கெதிரான முஸ்லிம் சமூகத்தின் பிரதிபலிப்புகளை மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரிடம் முஸ்லிம் தலைமைகள் கனதியானமுறையில் வெளியிடத் தவறியுள்ளன என்பது மேலுள்ள கூற்றுகளிலிருந்து தெளிவாகின்றன. நவநீதம்பிள்ளையின் வருகை பயனுள்ளதாக அமையுமா அல்லது வெறும் நம்பிக்கையாகவே இருந்துவிடுமா என்ற ஐயங்களுக்கும் அப்பால் எதிர்கால வரலாற்றுப் பதிவுகளுக்காகவாவது 'உருப்படியான' காரியங்களை மேற்கொண்டிருக்கலாம் என்பதுதான் பெரும்பாலான முஸ்லிம்களின் ஆதங்கமாகும். இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்டுவரும் உரிமை மீறல்கள், இனவாத அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் போன்றவற்றிற்கு எதிராக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசத்தின் எல்லைகளுக்கப்பால் நிலைகொண்டுள்ள கண்காணிப்பு நிறுவனங்களின் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகும். அவ்வாறில்லாமல் அறிக்கைகளுக்குள்ளேயே தங்களை மட்டுப்படுத்திக்கொள்வதன் மூலம் முஸ்லிம் தலைமைகள் தங்களை வலுப்படுத்திக் கொள்ளலாமே தவிர சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பது கடினம். 1905ஆம் ஆண்டு துருக்கி தொப்பிக்காகப் போராடிய அன்றைய முஸ்லிம் தலைமைகளிடமிருந்து அணுகுமுறைகளையும் அநுபவங்களையும் உள்வாங்கி நீண்ட காலத்திட்டத்தின் அடிப்படையில் சமூகத்தை வழிநடத்தும் தலைமைகளையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குறி தவறுகிறதா கூட்டமைப்பு?



என்.சத்தியமூர்த்தி

முதலாவது வடமாகாண சபைத் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டிருந்த தேர்தல் அறிக்கை, எதிர்பார்த்தது போல் சர்ச்சையைக் கிளப்பியது. எந்த ஒரு நாட்டிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் வெளியிடப்படும் அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் போல் இல்லாது, கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை, தங்களது மக்களின் அன்றாடத் தேவைகளையும், அவற்றை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் குறித்தும் ஒரு வார்த்தை கூடக்கூறவில்லை. மாறாக, அந்த அறிக்கை, முழுக்க முழுக்க அரசியல் சார்ந்து, இனப்பிரச்சினை குறித்த கூட்டமைப்பின் கவலைகளையும், கருத்துகளையும் மட்டுமே பிரதிபலிப்பதாக உள்ளது. இதுவே, தமிழ் மக்கள், அதிலும் குறிப்பாக வட மாகாண.மக்கள், மிகவும் கவலைப்பட வேண்டிய விடயம்.

கடந்த பல தசாப்தங்களாகவே, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ்த் தலைமைகள் அரசுடன் சேர்ந்து செயல்படாமையை ஒரு விரதமாகவே கடைப்பிடித்து வந்துள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் பயந்து, கட்டுப்பட்டு அவர்கள் நடக்க வேண்டிய சூழ்நிலை உருவான பின்னர், அதுவே காரணமாகவும் நியாயமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் கூறப்பட்டது. என்றாலும், இனப்போர் முடிந்துவிட்ட காலகட்டத்திலும் ஒரு சில தமிழ் இனத் தலைவர்கள் மட்டுமே அரசுடன் சேர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். பெருவாரியான இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று கருதப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் அரசின் எதிர்க்கட்சியாக இல்லாமல் 'எதிரிக்கட்சி'யாகவே செயல்பட்டு வருகிறார்கள் எனலாம்.

இது, இனப்போருக்கு முந்தைய காலகட்டத்தில் இருந்து தொடரும் தமிழ் மக்களின் மனப்போக்கும் அதன் காரணமாக தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் தர்மசங்கடத்தின் தொடர்ச்சியும்தான். அதாவது, 'இனப்பிரச்சினை' மட்டுமே தமிழ் அரசியல் தலைமைகளின் ஒரே குறிக்கோள் என்றும் அதுவும் அரசுக்கு எதிரான நிலைப்பாடு மட்டுமே ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றும், ஒரு மனப்போக்கிற்கு தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே மயக்கமடித்துக் கொண்டுள்ளனர். அதற்கு ஒத்து ஊதியே, தமிழ் அரசியல் தலைமைகளும், தங்களது அவசியத்தையும் அதற்குண்டான அவசரத்தையும் புரிந்துகொள்ளாமலே செயலாற்றி வந்துள்ளன.

### மாய வலை?

'தமிழ்த் தேசியவாதிகள்' என்று தங்களுக்குத் தாங்களே முத்திரை குத்திக் கொண்டு செயலாற்றி வரும் அறிவுஜீவிகளைப் பொறுத்தவரையில் அரசுடன் செயலாற்றி, தங்களாலான வகையில் தங்கள் மக்களுக்கு அரசு திட்டங்களின் பயன்கள் சென்றடைய வகைசெய்யும் தமிழ் அரசியல் தலைவர்கள் 'இனத் துரோகிகள்'. அவர்களது கடந்தகாலப் போராளி அடையாளத்தையும், அவர்களில் சிலரது தற்கால ஊழல் செய்யும் அரசியல் தன்மையையும், அவர்களது அரசியல் சித்தாந்தம் மற்றும் செயல்பாடுகளோடு ஒட்ட வைத்துப் பார்த்து, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வது 'தமிழ்த் தேசியவாதிகளின்' பொழுது போக்காகவே மாறிவிட்டது.

தற்போது, பெருவாரி தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று கருதப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தகைய மாயவலையில் தன்னைத் தானே சிக்கவைத்துக் கொண்டு, வெளியே வர மனமில்லாமல் அதனுள்ளேயே உழன்று கொண்டிருக்கிறது. அதன் காரணமாகவே, கண்ணில் தெரியும், தமிழ் மக்களின் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைகள் கூட்டமைப்பினரின் கண்களுக்கு இன்னமும் தெரிவதில்லை. மாறாக, தமிழ் மக்களின் பிரச்சினை எதுவாயினும் அதனை இனப்பிரச்சினையின் ஒரு அலகாக மட்டுமே பார்ப்பதற்கு அவர்கள் தங்களை பழக்கப்படுத்திக்

> இனப்பிரச்சினை தீர்வு மட்டுமே தமிழ் அரசியல் தலைமைகளின் ஒரே குறிக்கோள் என்றும் அதுவும் அரசுக்கு எதிரான நிலைப்பாடு மட்டுமே ஏற்றுக் கொள்ளத்தக்கது என்றும் என மனப்போக்கிற்கு தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே மயக்கமடித்துக் கொண்டுள்ளனர். அதற்கு ஒத்து ஊதியே தமிழ்த் தலைமைகளும் செயலாற்றி வந்துள்ளன

கொண்டு பல ஆண்டுகளைக் கழித்து விட்டனர். இதன் காரணமாகவே, கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில், அரசின் அன்றாடப் பணிகள் குறித்து மறந்துபோயும் ஒரு வார்த்தை கூட இல்லை. தமிழ்ச் சமூகத்தின் முக்கிய தேடுதலான உயர் கல்வி மற்றும் அன்றாடம் அவசியமான மருத்துவ வசதி போன்றவை எது குறித்துமே கூட்டமைப்பு தலைமை அன்று முதல் இன்று வரை பேசியதே இல்லை. இன்று, வடமாகாண தேர்தல் முடிந்து அரசு கட்டிலில் அமரும் வாய்ப்புத்தோன்றியுள்ள நிலையிலும் இத்தகைய கருத்தோட்டம் அவர்களுக்கு தோன்றாதது வருத்தப்பட வேண்டிய விடயம்.

### கிடைக்கவுள்ள வாய்ப்பு

இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினையை முன்னிறுத்தி அரசியல் செய்வதை நிறுத்த வேண்டும் என்றல்ல பொருள். மாறாக, இனப்பிரச்சினை என்பது அரசியல் சித்தாந்தம் சார்ந்தது, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை, அரசு சார்ந்தது என்ற வித்தியாசத்தை கூட்டமைப்புத் தலைமை தற்போதும், அதன் வட மாகாண அமைச்சர்கள் பிறிதொரு காலகட்டத்திலும் உணர்ந்து செயலாற்ற வேண்டியது அவசியம். அதற்கு தங்களைத் தயார்படுத்திக்கொண்டு, அதனை பழக்கப்படுத்திக் கொள்ளவும் அவர்கள் தயாராக வேண்டும்.

இனப்போர் காரணமாக கை இழந்தோர், கால் இழந்தோர், வீடு இழந்தோர், குடும்பத்தலைவர்(களை) இழந்தோர் என்று பல்வேறு தரப்பு மக்களுக்கும் ஆவன செய்வதற்கு அரசு ஏறும் வாய்ப்புக்கிடைக்கவுள்ள நிலையில், அந்த வாய்ப்பை முழுவதுமாக பயன்படுத்திக்கொள்வது அவசியம். அதற்கு இடையூறாகும் வகையில் தற்போதைய அரசியலமைப்பும் அதிகாரப் பகிர்வும் அமைந்துள்ளதா என்பதனை ஆராய்ந்து அறிந்து கொள்வதும் அவசியம். அதற்கான வாய்ப்பே தற்போதைய தேர்தல் முடிவாக அமையலாம்.

அரசு கட்டிலில் சில மாதங்களாவது இருந்தாலே, மக்களின் தேவைகள் குறித்தும் அதனைச் செயல்படுத்தும் விதங்கள் குறித்தும் கூட்டமைப்பு தலைவர்களுக்கும், குறிப்பாக மாகாண அமைச்சர்களுக்கும் தெளிந்த அறிவு ஏற்படும். அதன் அடிப்படையில், தேவை என்றால், தற்போது கோரும் அதிகாரங்களுடன் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை அவர்கள் கோரலாம். இல்லை என்றால், தங்களது தற்போதைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கைகளை காலகட்ட அடிப்படையில் சுருக்கிக் கொள்ளவும் அவர்கள் பழகிக் கொள்ளலாம். அதற்கும் அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அது குறித்தும் தங்களது உண்மையான கருத்துகளைக் கூறுவதற்கும் அவர்கள் அப்போது தயங்கக் கூடாது.

அடிபட்டவனுக்குத்தான் வலி தெரியும் என்பார்கள். இனப்பிரச்சினை குறித்தும், இனப்போர் குறித்தும் அந்த வலியை தமிழ் மக்களும் தமிழ்க் கூட்டமைப்பும் அறிந்து உணர்ந்துள்ளார்கள். ஆனால், அரசு சார்ந்த செயலாற்றலும் அதோடு ஒட்டிய செயல்பாடுகளும் செயல்படுத்தல்களும் இருசாராருக்குமே புதியது



**இனப்பிரச்சினையை முன்னிறுத்தி அரசியல் செய்வதை நிறுத்த வேண்டும் என்று கூறமுன்வரவில்லை. இனப் பிரச்சினை என்பது அரசியல் சித்தாந்தம் சார்ந்தது. அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை அரசு சார்ந்தது என்று வித்தியாசத்தை கூட்டமைப்பின் தலைமை உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியம். அதற்கு அவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்**

எனலாம். இளைய தலைமுறை தமிழர்களைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினை குறித்த அரசியல் பேச்சுகளையும் இனப்போரின் கொடூர, குரூர விளைவுகளையும் மட்டுமே அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அன்றாட கட்டளையின் கீழ் மட்டுமே வாழ்ந்து வந்துள்ள அவர்கள், அன்றாட வாழ்க்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினால் தங்களுக்கு கிடைக்கும் பயன்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்து கிடைக்காமலே போன திட்டங்களின் பயன்பாடு ஆகியவற்றை அறிந்து, உணர்ந்துகொள்ள கால அவகாசம் தேவை. அப்போது மட்டுமே, அரசியல் தீர்வுகளின் அலகுகள் குறித்து அவர்களாலும் அலசி ஆராய்ந்து, அன்றைய சூழ்நிலையில் அவசியமான கோரிக்கைகளை முன் வைக்க முடியும்.

இது தவிர, தமிழ்க் கூட்டமைப்பு தலைமை அச்சப்பட்டு, அவசரமாக எடுக்க வேண்டியுள்ள வரன்முறை வடிவமைப்புகள் சில உள்ளன. கடந்த பல தசாப்தங்களாக தமிழ்த் தேசியவாதிகள் அரசில் அமைச்சர்களாக இடம் பெறாததினாலோ என்னவோ, அவர்களைச் சார்ந்துள்ள மக்கள், லஞ்சம்-ஊழல் போன்ற அரசு தலைமைகளையும் அமைச்சுகளையும் சார்ந்த மானுட தவறுகளையும், அவை சார்ந்த சட்ட-குற்றங்களையும் அறியாமலே வாழ்ந்து வந்துள்ளார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கோட்பாடுகளும், செயல்பாடுகளும் கூட தமிழ் மக்களின் தனிநபர் ஒழுக்கத்தை ஒட்டியே இருந்தன.


ஆனால், போர் முடிந்துவிட்ட தற்போதைய காலகட்டத்தில், புதிய கூட்டமைப்பு அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் இரண்டாம் கட்ட கட்சித்தலைவர்கள் தனிநபர் ஒழுக்கத்திற்கு எத்துணை மரியாதை செலுத்துகிறார்கள் என்பது கண்டறியப்பட வேண்டியது. அது போன்றே, அரசு மற்றும் அமைச்சராக எந்தவித அனுபவமும் இல்லாத கூட்டமைப்பு அமைச்சர்களால், தங்களது கடமைகளைச் சரிவர செயல்படுத்த முடியுமா என்பதும் கேள்விக்குரியதே.

எது எப்படியோ இந்த இரு பிரச்சினைகளுக்கும் இப்போதிருந்தே விடை காணகூட்டமைப்புத் தலைமை ஆவன நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல், தங்களது அமைச்சர்களின் செயல்பாடு காரணமாக கூட்டமைப்பின் மீது தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கை குறையத் தொடங்கலாம். அவ்வாறான சூழ்நிலையில், அந்தச் சரிவைச் சரிசெய்யும் விதமாக, 'அதிகாரப் பரவல்' குறித்த அரசியல் போராட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு கூட்டமைப்பு தூண்டப்படலாம். அல்லது, கூட்டமைப்பே துண்டாடப்படலாம். இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான செயல்திட்டத்தை கூட்டமைப்பின் வட மாகாண முதலமைச்சர் (முன்னாள் உச்ச நீதி மன்ற நீதிபதி) விக்னேஸ்வரன் வடிவமைத்திருப்பார் . என்று எதிர்பார்க்கலாம். அல்லது, அதுபோன்ற திட்டங்களை வடிவமைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருப்பார் என்றும் கருதலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி விவகாரத்தில் முடிவெடுக்க முடியாமல் தடுமாறும் திராவிடக்கட்சிகள்



ஜெயலலிதாவுடன் அரசியல் ரீதியாக நெருக்கமாக இருப்பவர் மோடி. பிரதமர் வேட்பாளராக அவர் நியமிக்கப்பட்டதை ஜெயலலிதா வெளிப்படையாக பாராட்டவில்லை. தி.மு.க.வும் கூட இதுவரை மோடிக்கு எதிராக நேரடியாக கருத்து எதையும் கூறவில்லை

தமிழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட பாரதீய ஜனதாவின் பிரதமர் வேட்பாளரான குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி திருச்சி ரயில்வே மைதானத்தில் பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார். தமிழகத்தில் நடைபெற்ற பா.ஜ.க.மகாநாடு தமிழகத்தில் அக்கட்சியின் இமேஜை உயர்த்திப்பிடிக்க உதவ வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் தலைவர்கள் செயற்படுகிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பாரதீய ஜனதாக் கட்சியின் வளர்ச்சி மிக பிரமாண்டம் என்று சொல்ல முடியாது. அந்தக் கட்சிக்கு வாஜ்பாய் புகழ் உச்சியில் ஒரு மரியாதை கிடைத்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் போட்டி போட்டுக் கொண்டு வாஜ்பாயை ஆதரித்தன. அது தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தேய்பிறையைக் கண்ட காலம். அதுவே, பா.ஜ.க.விற்கு வளர்பிறையாக மாறியது. ஆனால், தமிழக பா.ஜ.க. தலைவர்கள் அ.தி.மு.க.வுடன் நெருக்கமாக இருக்க வேண்டும் என்ற சிந்தனைச் சிதறலின் காரணமாக தமிழக பா.ஜ.க. வாக்கு வங்கி வற்றிக் கொண்டு போனதே தவிர பெருகவில்லை. 1998 பாராளுமன்றத் தேர்தலில் 8 சதவீத வாக்குகள் வரை பாரதீய ஜனதாக் கட்சியால் திராவிடக் கட்சிகளுக்குக் கிடைத்தன

சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்





என்ற நிலைமை மாறி, கடந்த சட்டமன்றத் தேர்தலில் (2011) வெறும் 2.22 சதவீத வாக்குகளுக்குள் அகில இந்தியக் கட்சியான பா.ஜ.க. சுருங்கிப் போய்விட்டது. தமிழகத்தில் அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகிய இரு கட்சிகளுக்குள் யார் இந்துத்துவா வாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியைப்பகிர்ந்து கொள்வது என்ற பரபரப்புப் போட்டியில் பா.ஜ.க. விற்கு பாதகம் நேர்ந்ததுதான் மிச்சம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் குஜ ராத் முதல்வராக இருக்கும் நரேந்திர மோடிக்கு இப்போது தமிழகக் கிரா மங்களில் கூட முன்பு வாஜ்பாய்க்கு இருந்தது போன்ற 'மயக்கம்' தெரிகி றது. ஆனால், வாஜ்பாய் அளவிற்கு வசீகரமாக மோடியால் பேச முடிய வில்லை என்பது மட்டுமே குறையாக இருக்கிறது. மற்றப்படி கிராமப்புறங் களில் நூறு நாள் வேலைத் திட்டத்தில் பணிபுரியும் பெண்கள் கூட, 'மோடி நல்லா செய்யுறாராமே. அவருக்குத் தான் ஒரு முறை ஓட்டுப் போட்டுப் பார்ப்போமே' என்ற சிந்தனை சிறக டித்துப் பறக்கிறது. ஆகவே, மோடி யின் திருச்சி விசிட் பா.ஜ.க.விற்கு ஒரு திருப்புமுனையாக அமையமுடி யுமா? என்பதுதான் இப்போது வாக் காளர்கள் முன்பு இருக்கும் சிம்பிள் கேள்வி. ஏனென்றால், மோடியைப் பொறுத்தவரை தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் அரசியல் ரீதியாக நெருக்கமாக இருப்பவர். இவரது பதவியேற்பு விழாவிற்கு அவரும், அவரது பதவியேற்பு விழாவிற்கு இவரும் மேடைகளில் காட்சியளித்த வர்கள். ஆனால், மோடியை பா.ஜ.க. வின் தேர்தல் பிரசாரக் குழுத் தலைவ ராக நியமித்தபோது உடனே பாராட் டிய தமிழக முதல்வர், இப்போது பிரதமர் வேட்பாளராக மோடி அறி விக்கப்பட்டுள்ள நிலையில் வெளிப் படையாகப் பாராட்டவில்லை. அதே நேரத்தில் நரேந்திரமோடியைப் பொறுத்தமட்டில் அண்டை மாநில மான ஆந்திராவில் உள்ள ஹைதரா பாத் கூட்டத்தில் கூட 'தமிழக அர சின் நிர்வாகத் திறமையைப் பாராட்டி னார்' என்பது குறிப்பிடத்தக்கது.

நரேந்திரமோடி பிரதமர் வேட்பாள ராக களத்தில் நிற்கும் சமயத்தில் அவ ருக்கு தமிழகத்தில் இயற்கை கூட் டாளி அ.தி.மு.க.தான். ஆனால், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெய லலிதாவை அந்தக் கட்சி பிரதமர் வேட்பாளராக முன்னிலைப்படுத்தி பிரசாரம் செய்து வருகிறது. 'நாற்ப துக்கு நாற்பது தொகுதிகளைக் கொடு ங்கள். செங்கோட்டைக்கு அம்மா செல்வார்' என்பதுதான் அ.தி.மு.க. வினரின் பிரசாரமாக இருக்கிறது. 'எங்கள் அம்மா பிரதமர். ஆகவே எங்களுக்கு வாக்களியுங்கள்' என்ப துதான் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வின் யூனிக் செல்லிங் பொயின்ற் அதை நரேந்திர மோடியிடம் தாரைவார்க்க அ.தி. மு.க. தலைமை தயங்குகிறது. அத னால்தான் மோடி அறிவிக்கப்பட்டவு டன் அவரை வெளிப்படையாக வாழ் த்தவில்லை. அதேநேரத்தில் அவர் நடத்திய திருச்சி மகாநாட்டிற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடு களை பொலிஸ் செய்தது இன்னும் சொல்லப்போனால், மேடை அமைக் கும் பணிகளுக்கும் கூட தமிழக பொலிஸ் பாதுகாப்பு அளித்த இது போன்ற சூழ்நிலையில் துக்ளக் ஆசி ரியர் சோ தமிழக முதல்வர் ஜெயலலி தாவை சென்னை தலைமைச் செய லகத்தில் 40 நிமிடத்திற்கும் மேல் சந் தித்துப் பேசியது மிகப்பெரும் எதிர் பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

நரேந்திரமோடி களத்தில் நிற்பதால் அ.தி.மு.க.விற்கு எந்த வடிவத்திலும் தலைவலியாக மாறிவிடும் ஆபத்து நிரம்ப இருக்கிறது. தமிழகத்தில் உள்ள 'இந்துத்துவா வங்கி' 'இளை ஞர்கள் வாக்கு வங்கி' எல்லாம் நரேந் திரமோடிக்கு ஆதரவாக இருக்கிறது. ஏன் கிராமப்புற தாய்மார்கள் மத்தி யில் கூட மோடி நிர்வாகத்தின் மீது ஒரு மோகம் இருக்கிறது. அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணி உருவானால் இந்த இமேஜை அப்படியே வாக்கு வங்கி யாக மாற்றி, நரேந்திரமோடியே தேர் தல் பிரசாரமாக மாறுவார். அதன் மூலம் மைனாரிட்டி வாக்குகளின் இழப்பு அ.தி.மு.க.விற்கு ஏற்பட் டாலும், அதை விட அதிகமான வாக் குகள் மோடி மூலம் கிடைக்கும். 'மாநில அரசின் செயல்பாடுகள்' பின் னுக்குப் போய், 'காங்கிரஸ் எதிர்ப்பு' 'மோடி ஆதரவு' போன்றவை அ.தி.மு.க.விற்கு கைகொடுக்கும். அதே நேரத்தில் நரேந்திரமோடி- தி.மு.க. கூட்டணி உருவானாலும் பாராளுமன்றத் தேர்தலில் இதே இலாபம் அந்தக் கூட்டணிக்கு கிடை த்து விடும். இதுதவிர, வேறு கட்சிக ளுடன் (குறிப்பாக ம.தி.மு.க. போன்ற கட்சிகள்) சேர்ந்து தனித்துப் போட்டியிட்டால் ஒருசில இடங்க ளில் வெற்றிபெறும் மோடி தலைமை யிலான அணி அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியைப் பெரிதும் பாதிக் கும் ஆயுதமாக அமைந்துவிடும். இந்த விதத்தில் பார்த்தால் மோடியு டன் அ.தி.மு.க. கூட்டணி வைக்கா மல் வேறு எந்தக் கட்சி மோடியுடன் கூட்டணி வைத்தாலும் அது அ.தி. மு.க.வின் பாராளுமன்றத் தேர்தல் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும். இத னால்தான் மோடி விடயத்தில் என்ன முடிவு எடுப்பது என்பதில் அ.தி.மு.க. தலைமை இன்னும் முடிவு எடுக்கா மல் தயங்கி நிற்கிறது.

மோடிக்கும்- அ.தி.மு.க.விற்கும் என்ன நடக்கப்போகிறது என்பதை ஓரமாக அமர்ந்து வேடிக்கை பார்க்கி றது தி.மு.க. அதனால்தான் மோடியை நேரடியாக தி.மு.க. இதுவரை எதிர்க் கவில்லை. பிரதமர் வேட்பாளராக அவர் அறிவிக்கப்பட்டவுடன் நிருபர் கள் தி.மு.க. தலைவர் கருணாநிதி யின் கருத்தைக் கேட்டபோது, 'தி.மு.க. ஆதரிக்காத யாராக இருந் தாலும்- பிரதமர் பதவிக்குப் போட்டி யிட்டால் தி.மு.க. மதவாத எதிர்ப்பக்

**நரேந்திர மோடி களத்தில் நிற்பதால் அண்ணா தி.மு.க.விற்கு எந்த வடிவத்திலும் அவர் தலைவலியாக மாறிவிடும் ஆபத்து நிறையவே இருக்கிறது. ஜெயலலிதாவை பிரதமர் வேட்பாளராக முன்னி லைப்படுத்தி அவரது கட்சி பிரசாரம் செய்து வருகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையில் இருந்து என்றைக்கும் பின்வாங்காது' என்று சுற்றி வளைத்துப் பேட்டியளித்திருக்கிறார். 'மோடியை எதிர்க்கிறோம்' என்பதற்குப் பதில், 'மதவாதக் கொள்கையை எதிர்க்கிறோம்' என்று கூறியிருப்பதே 'மோடி தலைமையிலான பா.ஜ.க. ஒப்ஷனை தி.மு.க. க்ளோஸ் பண்ண விரும்பவில்லை' என்பதன் அடையாளம்தான். அது தேர்தலுக்கு முன்பா அல்லது தேர்தலுக்குப் பின்பா என்பது வேகமாக ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்களைப் பொறுத்தே அமையும். அது மட்டுமல்ல 'அத்வானி மோடியை எதிர்க்கிறார். இது நாடகமா?' என்று கலைஞர் கருணாநிதியிடம் கேட்டதற்கு, 'பா.ஜ.க.வின் உட்கட்சி விவகாரத்தில் நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை' என்று கூறியிருக்கிறார். 1999இல் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இடம்பெற்றது. அப்போது மஹாராஷ்டிர மாநில ஆளுநராகஇருந்தசி.சுப்பிரமணியம், 'தி.மு.க. இருக்கும் இடத்தில் மதவாதக் கொள்கை தலைதூக்காது' என்றார். அதை திரும்பத் திரும்பச் சொல்லி தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இடம்பெற்றிருந்ததை நியா யப்படுத்தியவர் கலைஞர் கருணாநிதி என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஆகவே, 'மதவாதக் கொள்கைக்கு எதிர்ப்பு' என்று இப்போதைய தி.மு.க.வின் நிலைப்பாடு உன்னிப்பாக கவனிக்கத்தக்கது.

இந்தச் சூழ்நிலையில் செப்டெம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற தி.மு.க.வின் முப்பெரும் விழாவில் 'திராவிட இயக்கத்தை யாராலும் அழிக்க முடியாது' என்று சவால் விட்டுள்ள கலைஞர் கருணாநிதி, வருகின்ற பாராளுமன்றத் தேர்தலை 'தி.மு.க.விற்கும், அ.தி.மு.க.விற்கும் இடையேயான போட்டியாக' எடுத்துச் செல்லவே விரும்புகிறார். அதன் எதிரொலியாகத்தான் அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்ள தி.மு.க.வின் இளைஞரணி முடுக்கி விடப்பட்டுள்ளது. மோடியின் வருகைக் காலகட்டத்தில் தமிழகம் முழுவதும் தி.மு.க.வின் இளைஞரணியினர் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி பிரசாரம் மேற்கொள்கிறார்கள். ஏனென்றால் 'மோடி'யை முன்னிறுத்தி அ.தி.மு.க. அரசியல் கூட்டணி காண முன்வந்தால், அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிரான பிரசாரத்தை கையிலெடுக்க வேண்டும். அது ஒன்றே தேர்தல் வெற்றிக்கு கைவிளக்காக அமையும் என்று தி.மு.க. தலைமை கருதுகிறது. அதே நேரத்தில் தங்கள் முப்பெரும் விழாவில் 'மதவாதம்' 'மதவெறி' 'மைனாரிட்டி மக்கள் நலன்' என்றெல்லாம் எதையும் பேசாமல் அமைதி காக்கிறது தி.மு.க. 'சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என்று மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டில் பதில் மனு செய்துவிட்ட சூழ்நிலையில் கூட 'மதவாதம்' பற்றிப் பேசாமல் இருக்கும் தி.மு.க.வின் வியூகத்தை டில்லி அரசியல் தலைவர்கள் சற்று வித்தியாசமாகப் பார்க்கிறார்கள்.

அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் இப்படி 'வியூகம்' வகுத்து நிற்கும்போது, வைகோ தலைமையிலான ம.தி.மு.க. 'மோடி ஆப்ஷனை' உதறித் தள்ளாமல் வைத்துக் கொண்டிருக்கிறது. செப்டெம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற விருதுநகர் மாநாட்டில் வைகோ வாஜ்பாயை வானுயரப் புகழ்ந்திருக்கிறார். அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வைச் சாடியிருக்கிறார். காங்கிரஸ் ஆட்சி தூக்கியெறியப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறார். தி.மு.க., அ.தி.மு.க. போன்ற கட்சிகளுடன் கூட்டணி வைக்க முடியாத சூழ்நிலை உருவானால் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்க வைகோ தயங்கமாட்டார் என்பதே இப்போதைய பேச்சு. ஏனென்றால், அது மாதிரியான கூட்டணி கன்னியாகுமரித் தொகுதியில் பா.ஜ.க.வின் வெற்றிக்கும், விருதுநகர் தொகுதியில் வைகோவின் வெற்றிக்கும் வித்திடும் என்று அரசியல் அவதானிகள் மத்தியில் கருத்து நிலவுகிறது. ஏனென்றால், இந்தக் கூட்டணியில் ஈழத் தமிழர் ஆதரவு பெற்ற அமைப்புகள், பிரபல கல்லூரி அதிபர் பச்சைமுத்துவின் இந்திய ஜனநாயகக் கட்சி போன்றவை இடம்பெறும் வாய்ப்பு உண்டு என்பது போல் காட்சிகள் கண்ணுக்குத் தெரிகின்றன.

வாஜ்பாயின் வருகை எப்படி ஒரு காலத்தில் 'தீண்டத்தகாத கட்சியாக' இருந்த பா.ஜ.க.வை திராவிடக் கட்சிகளின் நேசக் கட்சிகளாக மாற்றியதோ, அதே மாதிரி இப்போது நரேந்திர மோடியின் வருகையும் ஏற்படுத்தியிருக்கிறதா என்ற கேள்விக்கு விடைகாண வேண்டியிருக்கிறது. 'வாஜ்பாய் இமேஜை' பயன்படுத்திக் கொள்ள அ.தி.மு.க., தி.மு.க. போன்ற கட்சிகள் எல்லாம் அன்று போட்டியிட்டன. அதே போட்டி இப்போது 'நரேந்திரமோடி இமேஜை' பயன்படுத்திக் கொள்வதற்காகத் தொடங்கியிருக்கிறது. ஆனால், 'எங்கள் அம்மா அடுத்த பிரதமர் வேட்பாளர்' என்ற பிரசாரத்தை முன்பே 40 பாராளுமன்றத் தொகுதிகளிலும் தொடங்கிவிட்ட அ.தி.மு.க. மோடியை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்ற கேள்விக்குப் பதில் காணத் தயங்கி நிற்கிறது. அதனால்தான் அக்கட்சி 40 பாராளுமன்றத் தொகுதிகளுக்கும் இப்போது தேர்தல் பொறுப்பாளர்களை நியமித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறது. பா.ஜ.க.வின் உயர்மட்டப் பொறுப்பிற்கு வந்த பிறகு இதுவரை நரேந்திரமோடி தி.மு.க.வை ஊறுகாய்க்காகக் கூட விமர்சிக்கவில்லை. காங்கிரஸை ஊழல் கட்சி என்று வசைபாடும் நரேந்திரமோடி தி.மு.க.வை தொடவில்லை. அப்படியிருக்கையில் நாம் ஏன் மோடியுடன் மோத வேண்டும் என்று நினைக்கிறது தி.மு.க. தலைமை. 'காங்கிரஸுடனான எட்டு வருடக் கூட்டணி அந்த அளவிற்கு தி.மு.க.விற்கு கசப்பு மாத்திரையாக இருக்கிறது' என்பதுதான் இதில் வெளிப்படும் ஒளிக்கீற்று! மோடியின் திருச்சி வருகையால் திகைத்துப் போய் நிற்பது திராவிடக் கட்சிகள் என்பது மட்டுமே இப்போதைக்கு எஞ்சியிருக்கும் உண்மை! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் ராமதாஸின் இனவாதமும் சாதிவாதமும்

சாதிகளாகப் பிளவுண்ட இந்தியா தன்னை தேசம் என்று அழைத்துக்கொள்ள அருகதையற்றது என்று அம்பேத்கார் சொன்னது நினைவுக்கு வருகிறது



அ.மார்க்ஸ்

மருத்துவர் ராமதாஸ் பை பாஸ் அறுவை சிகிச்சைக்குப் பின் உடல் தேறி வந்துவிட்டார். அவருக்கு வாழ்த்துகள். மருத்துவர் மீது எனக்கு இருக்கும் விமர்சனங்களைப் போலவே மரியாதையும் உண்டு. அவரது ஆரம்பகால முழக்கங்களான, ஒரு தலி த்தை முதலமைச்சராக்க வேண்டும், எனது குடும்ப உறுப்பினர்களை அரசியலுக்குக் கொண்டு வந்தால் என்னைச் சாட்டையால் அடியுங்கள் என்பவற்றை நாங்கள் வரவேற்றோம். இதன் பொருள் அவரை முழுமையாக நம்பினோம் என்பதல்ல. ஆனாலும், அப்படி ஒருவர் சொல்லிக் களத்திற்கு வரும்போது அதை அவநம்பிக்கையோடு புறக்கணிப்பது நல்ல அரசியலாகாது. நாங்கள் மட்டுமல்ல, தலித் அரசியல் இயக்கங்களும் அப்படித்தான் அவரை எதிர்கொண்டன.

நம்பிக்கையூட்டுமாறு சில வேலைகளை அவர் செய்யவும் செய்தார். மத்திய அமைச்சரவையில் அமைச்சராக வாய்ப்பு ஏற்பட்டபோது தனது கட்சியில் இருந்த இரு தலித் தலைவர்களை அமைச்சர்களாக்கினார். குடந்தைக்கு அருகிலுள்ள குடிதாங்கிக் கிராமத்தில் பொது வீதி வழியே தலித்கள் பிணம் தூக்கிச் செல்ல இயலாத நிலையை நாங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கவனத்திற்குக் கொண்டு சென்றபோது, எங்களிடம் வாக்களித்தபடி அவரே வந்து தலித் பிணம் ஒன்றைத் தூக்கிச் செல்லும் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றார். அந்த ஊர் வன்னியர்கள் அவரது கட்சியிலிருந்து கூட்டமாக விலகினர்.

தோழர் அரங்க குணசேகரன் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட போது (1993), அவர் விடுதலை செய்யப்படாவிட்டால் வட தமிழ் நாட்டில் பேருந்துகள் ஓடாது என அறிக்கை விட்டார். பா.ம.க நடத்திய தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுப் பேரணியைத் தொடங்கி வைத்தது பசுபதி பாண்டியன். அவர் கொல்லப்பட்டபோதும் அதைக் கண்டித்து பா.ம.க தரப்பில் அறிக்கை வெளியிடப்பட்டது.

என்ன இருந்தாலும் வன்னிய அடையாளத்தை அவர் விடவுமில்லை, அதுவும் அவரை விடவில்லை. வன்னியர் சங்கப் போராட்டம் மூலம் அரசியலுக்கு வந்தவர் அவர். அடையாள அரசியல் என்பது எப்படி இரு பக்கமும் கூரான கத்தியாகச் செயல்படும் என்பது குறித்து நான் தொடர்ந்து எழுதி வருகிறேன், அடையாள அரசியல் இதுகாறும் அடையாளம் மறுக்கப்பட்டவர்களுக்கு அதிகாரம் சேர்க்கும் அதே நேரத்தில், அது பிற அடையாளங்களின் மீதான வன்முறையாகவும் வெளிப்படும். இது எல்லா அடையாள அரசியலுக்கும் நேர்வதுதான். அது ராமதாஸுக்கும் நேர்ந்தது. தனது தொகுதி வன்னியர்கள் மட்டுந்தான் என்பதையும் அதற்கு மேல் இந்த அடையாளத்துடன் செயல்பட்டு வன்னியர் அல்லாத தமிழர்களின் வாக்குகளைச் சேகரித்துவிட இயலாது என்பதை விரைவில் அவர் புரிந்து கொண்டார்.

வன்னியர்களை முழுமையாகத் திரட்டினால் அதுவே போதும் என்கிற நிலை வந்தவுடன் அவர் அரசியல் முன்னுரிமை வன்னியர்களை அதிகாரப்படுத்துவது என்பதாக அமைந்தது. இந்த அதிகாரப்படுத்தல் என்பது வன்னியர்கள் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்களில் தலித் மக்களுக்கு எதிராக முடிந்த வரலாற்றை பெரிதாக விளக்கிச்சொல்ல வேண்டிய அவசியமில்லை.

ஆனால், அதேநேரத்தில் பா.ம.க. வையும் வன்னியர் சங்கத்தையும் அவர் வேறுபடுத்திக் காட்ட வேண்டிய அவசியமிருந்தது. பா.ம.க அரசியல் கட்சி. நமது தேர்தல் முறையில் கூட்டணியில்லாமல் இது போன்ற கட்சிகள் வெல்வது சாத்தியமில்லை. அதோடு அரசியல் கட்சி என்கிற போது அது கொஞ்சம் விரிந்த அரசியலைப் பேசியாக வேண்டும். இது போன்ற நிலையில் உள்ளவர்களுக்கு இருக்கவே இருக்கிறது தமிழ்த் தேசியம். ராமதாஸ் அதைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார்.

மருத்துவருக்குத் தமிழ் உணர்வு இல்லை என நான் சொல்லவரவில்லை. அவரது தொடக்க கால அரசியலைப் பார்த்தீர்களானால் அவர் தமிழர் வாழ்வுரிமை மாநாடுகள் மட்டுமல்லாமல், கூடவே அம்பேத்கர், கார்ல்மார்க்ஸ் ஆகியோரையும் முன்னிலைப்படுத்தத் தவறியதில்லை. ஆனாலும், விரிந்த அரசியல் என வந்தபோது அவர் தமிழ்த் தேசிய அரசியலையே தனது சாதிவாத அரசியலின் முகமூடியாகத் தேர்வு செய்தார். தமிழ்த் தேசியர்களும் அதற்கு ஒத்துழைத்தனர். ஈழப் போராட்டம், முல்லைப் பெரியாறுப் பிரச்சினைகள் வரும்போது ராமதாஸுடன் கட்டித் தழுவிக் களத்தில் இறங்குவதும், சாதிப் பிரச்சினைகள் மேலுக்கு வரும்போது, தமிழகத்தில் ஒன்றுமே நடவாதது போல, சாய்வு நாற்காலிகளைத் தூசு தட்டிச் சாய்ந்து ஓய்வு கொள்வதும் நமது தமிழ்த் தேசியர்களின் வாடிக்கை என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

இந்தக் காலங்களில் ராமதாஸின் அட்டகாசங்களை அவர்கள் கண்டு கொள்ளவே மாட்டார்கள், மறுபடி ஈழப்பிரச்சினை ஏற்றம் கண்டால் ராமதாஸ் படு தீவிரமாக அது குறித்துப் பேசுவார். தனக்குப் பொதுவான தமிழர் நலனில் அக்கறை உள்ளது எனக் காட்டிக் கொள்வார். தமிழ்த் தேசியர்களும் இவரது சற்றைக்கு முந்திய சாதிவாதங்களைக் கண்டு கொள்ளாமல் அணைத்துக் கொள்வார்கள்.

மரக்காணம் மற்றும் இளவரசன் மரணத்தை ஒட்டிய போராட்டங்களின்போது நான் ஒன்றைச் சொல்லியிருந்தது நினைவிருக்கலாம். பாருங்கள், இப்போது இத்தனை சாதி ஆதிக்க வெறியுடன் பேசிக்கொண்டு மட்டுமல்ல, மாநாடுகளையும் நடத்திக் கொண்டிருப்பவர், சற்று ஓய்வுக்குப் பின் களத்திற்கு வருவார்; வரும்போது தமிழ்த் தேசிய முகமூடியைத் தீவிரமாகத் தரித்துக் கொள்வார் என்று எழுதியிருந்தேன்.

இப்போது அது உறுதியாகியுள்ளதைக் கவனியுங்கள். சில சமீபத்திய ராமதாஸின் பேச்சுகள் கீழே:

> டாக்டர் தன்னை சமூகப் பொறியாளர் என்று இப்போது சொல்லிக்கொள்கிறார். ஆனால் அவர் எப்போதுமே சாதிவாதத்தையும் இனவாதத்தையும் இணைக்கும் வெல்டராகத்தான் இருந்து வந்துள்ளார். இது ரொம்ப பலவீனமான வெல்டிங். இதன் மூலம் கட்டப்பட்ட கப்பலில் ஏறுபவர்கள் நிச்சயம் கரைசேர மாட்டார்கள்

ஈழப்போரை கொச்சைப்படுத்தும் மெட்ராஸ் கஃபே படத்திற்கு தடை விதிக்க வேண்டும் - ஆகஸ்ட் 8 ஆந்திரத்துடன் இணைக்கப்பட்ட தமிழர்கள் அதிகம் வாழும் திருப்பதி, காளஹஸ்தி, புத்தூர், சத்தியவேடு, சித்தூர் உள்ளிட்ட வட்டங்களை மீண்டும் தமிழகத்துடன் இணைக்க வேண்டும், ஆகஸ்ட் 10 இலங்கையில் நடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் கொமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் - அறிக்கை, ஆகஸ்ட் 23 மீனவர்கள் மீண்டும் கைது: இலங்கையை பிரதமர் எச்சரிக்க வேண்டும், அறிக்கை, ஆகஸ்ட் 27 இது தவிர காவிரிக் கண்காணிப்புக் குழு அமைப்பது குறித்தும் அவர் பேசி இருந்தது நினைவில் உள்ளது. இதுதவிர, சமீபத்தில் அவர் பேசிய வேறு சில ஒட்டுமொத்தத் தமிழர் பிரச்சினைகள்:

தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் தினத்தந்தி, ஆகஸ்ட் 31மத்திய - மாநில அரசு மோதல் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பாதிக்கும் தினத்தந்தி, ஆகஸ்ட் 31 உண்ணாவிரதம் இருக்கக்கூட (நடிகர்) விஜய்க்கு உரிமை இல்லையா?- அறிக்கை, ஆக 17 மருத்துவ மாணவர்களை புதிய தர வரிசைப் பட்டியல் தயாரித்து சேர்க்க வேண்டும் அறிக்கை, ஆகஸ்ட் 19 இப்படியான பொதுப் பிரச்சினைகளை முழக்கிக் கொண்டுள்ளபோதே அவர் தன்பிரச்சினையை எக்காரணம் கொண்டும் விட்டுவிடமாட்டார்.

தமிழகத்தில் 144ஆவது சட்டப் பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படுகிறது (தினமணி, ஆகஸ்ட் 28) என்ற அவரது அறிக்கையைச் சமீபத்தில் பார்த்திருப்பீர்கள். ஆதாவது தருமபுரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக 144 தடை உத்தரவு இருப்பதைக் கண்டித்துத்தான் இந்தப் பேச்சு.

தலித் அல்லாத சாதி மாநாடுகளை நடத்தி தனது சாதிவாத அரசியலை அவர் உச்சபட்சமாக நடத்திக்கொண்டிருந்தபோது உளுந்தூர்ப்பேட்டையில் நடந்த ஒரு திருமண நிகழ்ச்சியில் அவர் பேசிய பேச்சு கீழே முழுமையாக:

நான் டாக்டருக்கு படித்ததில் இருந்து டாக்டராக வேலை பார்த்ததில் இருந்து வன்னியர் சங்க காலத்தில் இருந்து, பா.ம.க தொடங்கிய பின்பு வரை நான் ஜாதிவெறியன் தான். என் மக்கள் முன்னேற வேண்டும், படிக்க வேண்டும், வேலைக்குப் போக வேண்டும், 3 வேளை வயிறார சாப்பிட வேண்டும் என நினைப்பவன் ராமதாஸ் மட்டும்தான். அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரை வன்னியர்களுக்காக குரல் கொடுப்பவர் ராமதாஸ் மட்டுமே. மழை, வெயில் பார்க்காமல் உழைப்பவர்கள் வன்னியர்கள். நம்மைக் கண்டால் யாருக்கும் பிடிக்கவில்லை. தீப்பந்தம் எடுத்துச் சென்று கொளுத்துவதாக பிரசாரம் செய்கிறார்கள். நமது கைகளை வெட்டுவதாகக் கூறுகிறார்கள்.

நாம் ஒற்றுமையாக இருப்போம் என்று சொன்னால் உன் பெண்ணை கொடுக்கிறாயா என்று கூறுகிறார்கள். நமது பெண்களுக்கு காதல் வலை வீசி கடத்திச் செல்கிறார்கள். பெண்ணைப் பெற்றவர்கள் உஷாராக இருக்க வேண்டும். படிக்க வைக்கும் போது யாரையாவது துணைக்கு அனுப்பி வைக்க வேண்டும். நல்ல அறிவுரை சொல்லுங்கள்.விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டை தாலுகாவில் உள்ள வன்னியர்கள் ஒட்டு மொத்தமாக மாம்பழத்திற்கு தான் ஓட்டுப்போட வேண்டும் என்ற முடிவுக்கு வாருங்கள். இரட்டை இலை, சூரியன், கைக்கு போட்டால் நம்மை நாமே அழித்துக் கொள்வதாகும். வன்னியன் மாம்பழத்திற்கு ஓட்டுப்போடுங்கள். அ.தி.மு.க, தி.மு.க.வில் உள்ள வன்னியர்களுடன் பேசுங்கள். ராமதாஸ் இருக்கும் போது வன்னியர் ஆட்சி வரவேண்டும். விழுப்புரம் தொகுதியில் வரும் எம்.பி., தேர்தலில் நாம் ஒற்றுமையாக வாக்களித்தால் வெற்றி பெறலாம். 2016ஆம் ஆண்டு நடக்கும் சட்டமன்றத் தேர்தலில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளிலும் அப்படியே வெற்றி பெறுவோம். எல்லோரும் விழிப்பாக இருங்கள். சிந்தியுங்கள் மற்ற கட்சிகளை மறந்து பா.ம.க.வை நினையுங்கள் என்றார் ராமதாஸ். டிசம்பர் 7, 2012.

இந்தப் பேச்சு அவரது அரசியலைத் தெளிவாக்கிவிடுகிறது. அவர் தனது அரசியல் முரணை வன்னியர் எதிர் தலித் என்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. நம்மைக் கண்டால் யாருக்கும் பிடிக்கவில்லை என அவர் சொல்லும்போது ஒட்டு மொத்தத் தமிழ் அடையாளத்திலிருந்தும் வன்னியர்களைப் பிரித்து நிறுத்துகிறார். இந்தப் பேச்சைக் கூர்ந்து கவனித்தால் அவரது அரசியல், வன்னியர் ஓட்டு அந்நியர்க்கில்லை என்கிற அளவில் சுருங்கி விடுவது விளங்கி விடுகிறது.

ஆக ராமதாஸின் அரசியல் அப்பட்டமாக இனவாத முகமூடி தரித்த சாதி வாத அரசியல்தான் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று தேவை?

சமீபத்தில் தருமபுரி சென்றிருந்தேன். அங்கே இரு சமூகத்தினருக்கிடையேயும் கெட்டுக்கிடக்கும் சமூக உறவுகள் வேதனையை அளித்தது. தலித்துகளுக்கும் வன்னியர்களுக்கும் இடையே முற்றிலும் பேச்சுவார்த்தைகள் நின்றுபோன ஒரு பகைச் சூழல் அங்கு நிலவுகிறது. ஏற்கனவே நெருக்கமாகப் பேசிக் கொண்டிருந்த நண்பர்கள் கூட இப்போது பேச்சு வார்த்தைகள் இல்லாமல் உள்ளனர். அப்படிப் பேச நேர்ந்தால் கூட அக்கம்பக்கம் பார்த்து இரகசியமாகத் தான் பேச வேண்டியுள்ளது. பேருந்தைப் பிடிக்கச் செல்லும் வழியிலும் கூட ஒருவரை ஒருவர் முகம் பார்த்துக் கொள்வதில்லை. பெரிய அளவில் தலித்கள் வன்னியர்களை நம்பி வாழக்கூடிய நிலை, பிரச்சினைக்கு முன் இல்லை என்றபோதிலும், ஒரு சில தலித்கள் விவசாய வேலைகள், பெயின்டிங் போன்ற சிறுசிறு வேலைகளுக்கு வன்னியர்களை நம்பி இருந்துள்ளனர். அவர்களுக்கு இப்போது யாரும் வேலை கொடுப்பதில்லை.

சொந்த ஊரில் தலித்கள் தம் பிள்ளைகளைப் படிக்க வைக்க இயலவில்லை. பொது ரேஷன் விநியோகமும் நின்றுவிட்டது. தலித் மக்களுக்கு அவர்களின் கிராமத்தில் கொண்டு வந்து ரேஷன் விநியோகம் நடக்கிறது. அடையாள அரசியல் அதன்

***(53ஆம் பக்கம் பார்க்க...)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமான் திருமணமும் சிறகடித்த அரசியலும்

காசிநாதன்

வாழ்த்துரை வழங்கியவர்கள் அனைவருமே சீமானை ஓரளவுக்கு மேல் புகழ்ந்து தள்ளவில்லை. அதற்குக் காரணம் அவர் முன்னெடுத்திருக்கும் ஈழத்தமிழர் பிரச்சினை. அந்த பிரச்சினைக்காக தமிழகத்தில் போராடியவர்கள், போராடிக்கொண்டிருப்பவர்கள் ஏராளம். ஈழத்தமிழர்களுக்காக போராடுபவர் என்ற முத்திரையை மற்றைய தலைவர்கள் அவருக்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை



தமிழக அரசியல்

பந்தலில் கறுப்புச் சட்டைகள் நிரம்பியிருக்க, பட்டு வேஷ்டி சட்டையுடன் மேடைக்கு வந்தார் நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான். செப்டெம்பர் 8ஆம் திகதி சென்னை நந்தனத்தில் உள்ள வை.எம்.சி.ஏ. மைதானத்தில் போடப்பட்டிருந்த அரங்கத்தில்தான் இந்த நிகழ்வு அரங்கேறியது. அன்றுதான் முன்னாள் தமிழக சட்டமன்ற சபாநாயகரும், திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவருமாகத் திகழ்ந்தவருமான மறைந்த காளிமுத்துவின் மகள் கயல்விழிக்கும் சீமானுக்கும் திருமணம். இருவரும் வாழ்க்கைப்பயணத்தைத் தொடங்கிய நாள் என்பதால் ஈழத் தமிழர்களின் ஆதரவுத் தலைவர்கள் மட்டுமன்றி, மற்ற சில கட்சிகளின் தலைவர்கள் எனப்பலர் அந்த மைதானத்தில் கூடியிருந்து வாழ்த்தினார்கள்.

காலை எட்டு மணிக்கெல்லாம் மைதானம் களைகட்டியது. எங்கு பார்த்தாலும் கட் அவுட்கள். அதுவும் குறிப்பாக 'பிரபாகரன்- மதிவதனி' ஆகியோரின் படங்கள் நிறைந்த கட் அவுட்கள். 'சீமான் திருமணத்திற்கு அனைவரையும் அவர்கள் அழைப்பது போலவும்' 'ஆசி வழங்குவது போலவும்' இருந்த அந்த கட்அவுட்கள் சென்னை நந்தனத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சிலையிலிருந்தே தொடங்கி விட்டன. மைதானத்தில் போடப்பட்டிருந்த பந்தல்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன. ஆனால், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வின் முன்னணித் தலைவர்கள், காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அங்கே வரவில்லை. திருமணப் பந்தலுக்கு முதலில் வந்தவர் நடிகர் சத்யராஜ் என்றே சொல்ல வேண்டும். அவரைத் தொடர்ந்து பல சினிமா டைரக்டர்கள் வந்தார்கள். ஆர்.கே.செல்வமணி, கே.எஸ்.ரவிக்குமார், நடிகர் திலகம் சிவாஜியின் மகன் பிரபு, பாரதிராஜாவின் மகன் மனோஜ் என்று பட்டியலைத் தொடரலாம். இவர்கள் தவிர, ஈழத்தமிழர் ஆதரவு அமைப்புகளில் இருந்து அனைத்துத் தலைவர்களுமே வந்திருந்தார்கள். குறிப்பாக, விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் தொல் திருமாவளவன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் வந்து வாழ்த்தியதை சீமான் ரசிகர்கள் கோஷ மிட்டு வரவேற்றார்கள்.

திருமணத்திற்கு எதிர்பார்த்த வரவுகளில் சசிகலாவின் கணவர் எம்.நடராஜன் முக்கியமானவர். அவர் போலவே திருமணத்தை நடத்தி வைக்க வந்திருந்த பழ. நெடுமா றன் முக்கியமானவர். இவர்கள் தவிர, தமிழருவி மணி யன், தமிழச்சி தங்கபாண்டியன், வாகை சந்திரசேகர்- என்று சொல்லிக் கொண்டே போகலாம். வைகோ முத லில் வரவில்லை. 'சிவகங்கையில் திருமணத்திற்குப் போய்விட்டு அவசரமாக ப்ளைட் பிடித்து வருகிறார் வைகோ' என்று மேடைக்கு வந்திருந்த அக்கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யாதான் அறி வித்தார். அவர்கூட பிறகுதான் வந்தார். ம.தி.மு.க.வின் சார்பில் முதலில் திருமணத்திற்கு வந்தவர் பாலவாக்கம் சோமுதான். சீமான் மேடைக்கு வந்ததும் முதலில் மேடை யில் ஏறி அங்கிருந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தினார். பிறகு அப்படியே கீழே இறங்கி முதல் வரிசையில் அமர்ந் திருந்த ஒவ்வொரு தலைவர்களுக்கும் வணக்கம் செலுத் தினார். அதில் பேரறிவாளன் தாயார் அற்புதம்மாளை கட்டிப்பிடித்து வணங்கி வாழ்த்தியபோது இருவருமே கண்கலங்கினார்கள்.

திருமண நிகழ்ச்சி நடைபெற்ற அரங்கத்தில் பெருஞ் சித்திரனார், பாரதிதாசன், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், காமராஜர், பெரியார், ஈழத்திற்காக உயிர்விட்ட அப்துல் ரஹூத் என்று சுற்றிச் சுற்றி பல தலைவர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஈழப்போரின் போது தமி ழகத்தில் பெரும் போராட்டத்திற்கும் எழுச்சிக்கும் வித் திட்டது முத்துக்குமரனின் மரணம். ஆனால், அந்த முத்துக்குமரனின் படம் அரங்கத்திற்குள் இல்லை! ஒரு வேளை, அவரை வைகோ போற்றிக் கொண்டாடுகிறார் என்ற காரணத்திற்காகவோ என்னவோ தெரியவில்லை என்றார் அங்கே நின்ற ம.தி.மு.க. பிரமுகர். முதலில் இலங்கையில் மாண்ட வீரர்களுக்கும், தியாகிகளுக்கும், தமிழர்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்தி யும், உறுதி மொழி எடுத்தும் திருமண நிகழ்ச்சிகள் தொடங்கின. திரு மண விழாக்களில் இதுபோன்ற காட்சிகள் காணக் கிடைப் பதில்லை. அடுத்து பிரபாகரன்- மதிவதனியார் படத்திற் கும், மறைந்த காளிமுத்துவின் படத்திற்கும் மலர்தூவி 'மணமகன்- மணமகள்' சகிதமாக அஞ்சலி செலுத்தினார் கள். அவர்களுடன் கூடவே சென்றார் பழ.நெடுமாறன். இந்த இரு நிகழ்வுகளும் முடிந்த பிறகு திருமணம். 'அ' எழுத்து பொறிக்கப்பட்ட தாலியை பழ. நெடுமாறன் எடுத்துக் கொடுக்க, கயல்விழியின் கழுத்தில் மணமகன் சீமான் கட்டினார். இதன்பிறகு, மாலை மாற்றிக் கொள் ளும் சம்பவம். வழக்கமாக பெண்ணின் கழுத்தில் மண மகன் மாலை போடுவார். பிறகு மணமகள் மணமகனின் கழுத்தில் மாலை அணிவிப்பார். ஆனால் இதிலும் வித்தி யாசம். மண மகள் கயல்விழி சீமான் கழுத்தில் மாலை அணிவிக்க, பிறகு சீமான் கயல்விழிக்கு மாலை அணி வித்தார். பெண்ணுரிமை கலந்த அந்தத் திருமணத்தைப்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பார்த்து அனைவரும் வியந்தனர்.

வாழ்த்து மடல்கள் அரங்கேறின. குறிப்பாக வாழ்த்துரை நிகழ்த்தியவர்கள் அனைவருமே சீமானை ஓரளவிற்கு மேல் புகழ்ந்து தள்ளவில்லை. ஏனென்றால், அவர் முன்னெடுத்து வைக்கும் பிரச்சினை ஈழத் தமிழர்கள் பிரச்சினை. அதற்காக தமிழகத்தில் போராடியவர்கள், போராடிக் கொண்டிருப்பவர்கள் ஏராளம். அந்த வரிசையில் வைகோ, திருமாவளவன், ஏன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கூட அதற்காக போராட்டக் களத்தில் நிற்கிறார்கள். அவர்கள் அனைவருக்குமே வெவ்வேறு தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால், சீமானைப் பொறுத்தமட்டில் அவருக்கு ஒரு தலைவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன். ஆகவே, 'ஈழத்தமிழர்களுக்காகப் போராடுபவர் சீமான்' என்ற முத்திரையை மற்ற தலைவர்கள் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. அதனால்தான் அவ் விழாவில் பேசிய பழ. நெடுமாறன், 'சீமான் திருமணம் செய்து கொள்கிறேன்' என்ற செய்தி கேட்டதை பெரிய விஷயம் என்ற ரீதியில் பேசி வாழ்த்தினார். தமிழருவி மணியன் 'ஈழத்தமிழர்களுக்காக சீமான் போராடுகிறார்' என்பதைச் சொல்லாமலேயே வாழ்த்தினார். ஏனென்றால், அவர் வைகோவிடம் நெருக்கமாக இருக்கிறார் என்பதால் அந்தத் தயக்கம் அவரிடம் தென்பட்டது. பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள் மட்டும், 'இன்று என் மகன் உயிருடன் இருக்கிறான் என்றால் அதற்கு சீமான் எடுத்துச்சென்ற போராட்டமே காரணம்' என்று புகழாராம் சூட்டினார். சசிகலாவின் கணவர் எம்.நடராஜன், 'சுதந்திர தமிழ் ஈழம் பெற நீங்கள் இருவரும் போராட வேண்டும்' என்ற ரீதியில் மணமக்களை வாழ்த்தினார். அவர் மட்டும், 'நீங்கள் அழைக்காமல் இருந்தாலும் இந்த விழாவிற்கு வந்திருப்பேன். ஏனென்றால் கயல்விழி (மணமகள்) எங்கள் வீட்டுப் பிள்ளை' என்றார் பெருமிதமாக. மறைந்த காளிமுத்துவும், நடராஜனும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வைகோ, திருமாவளவன் போன்றோரின் வாழ்த்துகளும் 'திருமண வாழ்த்துகளாகவே' அமைந்தன.

தி.மு.க.வின் சார்பில் கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன், வாகை சந்திர சேகர், முன்னாள் திட்டக்குழுத் தலைவர் நாகநாதன், ராமநாதபுரம் எம்.பி. ரித்திஷ் போன்றவர்கள் வந்திருந்தார்கள். தமிழச்சி தங்கபாண்டியன், 'புலிகளும், விடுதலையும்' போல் மணமக்கள் வாழ வேண்டும் என்று நெகிழ்ச்சியுடன் பேசினார். அவரும் மணமகள் சார்ந்த சமுதாயம் என்பது குறிப்பிடத்தக்கது. பிரமாண்டமான விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் வந்த தொண்டர்களையும், மக்களையும் கட்டுப்படுத்த ஒருங்கிணைப்புதான் அங்கே மிஸ்ஸிங்! மாலை வரை மேடையில் அமர்ந்திருந்து வாழ்த்துகளைப் பெற்றார் சீமான். மணமகள் தேவர் சமுதாயத்தைச் சேர் ந்தவர் என்பதால் அந்த சமுதாயத்தின் மக்கள் மணமகன் சார்ந்துள்ள நாடார் சமுதாயத்தை மிஞ்சி அரங்கத்தில் கூடியிருந்ததைப் பார்க்க முடி ந்தது. ஈழத் தமிழர்களுக்காக போரா டும் பல்வேறு தலைவர்கள் அங்கே வந்திருந்ததால், சீமானின் ஈழப்போராட்டம் பற்றி பெரிதும் புகழ்ந்து அவருக்கு ஒரு 'அரசியல் மைலேஜ்' கொடுத்து விடாமல், மணமக்களின் திருமண வாழ்க்கை பற்றியே வாழ்த்தினர். ஆனால், சீமான் தொண்டர்களுக்கோ தங்கள் தலைவரின் திருமணத்தை 'பிரபாகரன்- மதிவதனி' ஆகியோரே நேரில் வந்து நடத்தி வைத்தது போன்ற ஒரு உணர்வு- இதுதான் சீமான் திருமணத்தில் சிறகடித்துப் பறந்த அரசியல்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோடியை எதிர்த்து நிற்க ராகுல் துணிச்சல் கொள்வாரா?

பாரதிய ஜனதாக் கட்சி பிரதமர் வேட்பாளரை அறிவித்து விட்ட நிலையில் காங்கிரஸ் கட்சி தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸின் பிரதமர் வேட்பாளரை அறிவிக்க வேண்டும் என்ற நெருக்குதல் இயல்பாகவே தோன்ற ஆரம்பிக்கும் என்பதில் சந்தேகமில்லை






எம்.பி.வித்தியாதரன்

பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாவின் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடியின் பெயர் அறிவிக்கப்பட்டதையடுத்து இந்தியாவின் அடுத்த பொதுத் தேர்தலுக்கான நகர்வுகள் ஆரம்பமாகிவிட்டன போல் தோன்றுகிறது. அடுத்த வருடமே பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னதாக இன்னும் சில மாதங்களில் டில்லி உட்பட முக்கியமான சில மாநிலங்களின் சட்ட சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. இந்நிலையில் பிரதமர் வேட்பாளராக மோடி அறிவிக்கப்பட்டிருப்பது குறித்த காலத்துக்கு முன்கூட்டிய ஒரு செயலாகவும் நோக்கப்படுகிறது.

செப்டெம்பர் 13 ஆம் திகதி மாலை பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங்கினால் செய்யப்பட்ட முறைப்படியான அறிவிப்பு ராஷ்டிரிய சுயம்சேவக் (ஆர்.எஸ்.எஸ்) அமைப்பின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வந்த திரைக்குப் பின்னாலான பல வாரகால நகர்வுகளை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது. பாரதிய ஜனதாவுக்கு இருக்கும் ஆதரவின் முதுகெலும்பு என்று கருதப்படும் ஆர்.எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். அமைப்பு பிரதமர் பதவிக்கான வேட்பாளராக மோடியையே விரும்புவதாக மிகவும் தெளிவாகக் கூறி வந்திருக்கிறது. கட்சித் தொண்டர்கள் மத்தியில் மாத்திரமல்ல, நாட்டு மக்கள் மத்தியிலும் குறிப்பாக இளைஞர், யுவதிகளிடையே அமோக ஆதரவு அவருக்கு இருப்பதே இதற்குக் காரணமாகும்.

எல்.கே.அத்வானி, முரளிமனோகர் ஜோஷி போன்ற பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு வந்தபோதிலும் கூட, அக்கட்சியின் பிரதமர் வேட்பாளராக மோடியே வருவார் என்பது சில மாதங்களுக்கு முன்னரேயே தெளிவாகத் தெரியத் தொடங்கியது. மோடி முன்னிலைப்படுத்தப்படுவதை கட்சியின் இரண்டாவது தலைமுறைத் தலைவர்களான லோக்சபா எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சுஷ்மா சுவராஜ் மற்றும் ஆனந்த் குமார் போன்றவர்களும் எதிர்த்தார்கள். இவர்கள் அத்வானியின் சீடர்கள்.

பிரதமர் வேட்பாளராக மோடி தெரிவு செய்யப்பட்ட பாரதிய ஜனதாவின் பாராளுமன்றக்குழுக்கூட்டத்திற்கு அத்வானி வரவில்லை. அத்வானியை அக்கூட்டத்தில் பங்கேற்க வைப்பதற்கு ஆர்.எஸ்.எஸ்ஸின் ஆலோசனையின் பேரில் ராஜ்நாத் சிங், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பக்வத் மற்றும் கட்சியின் முன்னாள் தலைவர் நிதின் கட்காரி ஆகியோர் முயற்சி மேற்கொண்ட போதிலும் அது பயனளிக்கவில்லை. இருவார தீய சகுனக்காலம் செப்டெம்பர் 20 ஆம் திகதி ஆரம்பமாவதாகக் கூறிய ஆர்.எஸ்.எஸ். அதற்கு முன்னதாக மோடியின் பெயர் அறிவிக்கப்பட வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தது. அதனால், மோடி நியமிக்கப்படுவதை அவரை எதிர்ப்பவர்களும் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு தீவிர பேச்சுவார்த்தைகள் நடந்தன. ஆனால், சுஷ்மா சுவராஜ், முரளிமனோகர் ஜோஷி ஆகியோரை மாத்திரமே வழிக்குக் கொண்டுவரக் கூடியதாக இருந்தது. இன்னமும் கூட பிரதமராக வர வேண்டுமென்ற ஆசையை மனதில் கொண்டிருப்பதாக அத்வானியை பலர் குறை கூறுகிறார்கள். மோடிக்கு ஆதரவாக வாக்களித்த இரண்டாவது தலைமுறைத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் அத்வானியின் சீடர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ராஜ்நாத்சிங், சுஷ்மா சுவராஜ், அருண் ஜேட்லி, வெங்கையா நாயுடு மற்றும் ஆனந்த் குமார் ஆகியோர் இதில் அடங்குவர். மோடியும் கூட அத்வானியின் சீடரே.

ஒருமணிநேரமாக நடைபெற்ற பாராளுமன்றக் குழுக்கூட்டத்திற்கு சில நிமிடங்கள் முன்னதாக ராஜ்நாத் சிங்கிற்கு அத்வானி இருபந்திகளைக் கொண்ட கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அதில் அவர் ராஜ்நாத் சிங் செயற்படுகின்ற முறை தொடர்பில் தனக்கிருக்கும் அதிருப்தியை வெளியிட்டதுடன், ஆழமாகச் சிந்தித்த பின்னரே பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளாதிருக்கத் தீர்மானித்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

பாராளுமன்றக் குழுக் கூட்டம் முடிவடைந்த உடனடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோடி ஏனைய உறுப்பினர்கள் சகிதம் செய்தியாளர் மகாநாட்டு அறைக்குள் சென்றார். செய்தியாளர்கள் மத்தியில் குறுகியதொரு அறிக்கையை வெளியிட்ட ராஜ்நாத் சிங் சங்கொலிக்கு மத்தியில் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக மோடி தெரிவு செய்யப்பட்டிருப்பதை அறிவித்தார். கட்சியைக் கட்டியெழுப்புவதில் அடல் பிஹாரி வாஜ்பாயும் அத்வானியும் செய்த பெறுமதிமிக்க பங்களிப்புகளுக்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்ட மோடி 2014ஆம் ஆண்டு பாரதிய ஜனதாவை ஆட்சிக் கட்டில் ஏற்றுவதற்கு தன்னாலான சகலதையும் செய்வதாக உறுதியளித்தார்.

மலர்ந்த முகத்துடன் இருந்த மோடிக்கு அருகே காணப்பட்ட சுஷ்மா சுவராஜ் அவருக்கு பெரியதொரு மலர்மாலையை அணிவித்தது பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அவரைத் தொடர்ந்து ஏனைய உறுப்பினர்கள் மோடிக்கு மாலையணிவித்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். அத்வானி ஏன் வரவில்லை என்று செய்தியாளர்கள் கேட்கத் தொடங்கியதையடுத்து ஏற்பட்ட பரபரப்புக்கு மத்தியில் ராஜ்நாத்சிங் செய்தியாளர் மகாநாட்டை முடித்துக்கொண்டார்.

அத்வானி போன்ற மூத்த தலைவர்களின் கோபத்தையும் பொருட்படுத்தாமல் பாரதிய ஜனதா மோடிக்கு இருக்கின்ற செல்வாக்கைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு தீர்மானித்திருக்கிறது. அயோத்திக்கு ரதயாத்திரை மேற்கொண்டதையடுத்து கட்சியை ஆட்சியதிகாரத்துக்குக் கொண்டுவந்தவர் அத்வானியென்று வர்ணிக்கப்படுவதுண்டு. ஆனால், வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா அரசாங்கம், ஐக்கிய ஜனதா தள், தெலுங்குதேசம், திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பிஜு ஜனதாதள் போன்ற கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக அயோத்தி பாபர் மசூதி, ராமர் கோவில் விவகாரத்தை கைவிட்டது என்பது வேறு விடயம்.

32 வயதான பாரதிய ஜனதாவின் ஸ்தாபகர்களில் அத்வானி ஒருவர். அவரின் ஆதரவு இல்லாமலேயே மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கின்றமை கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த அதிகார நகர்வைக் குறித்து நிற்கிறது. இவ்வருட பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் சதிஸ்கார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் டில்லி ஆகிய மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களுக்கு முன்னதாக மோடியை பிரதமர் வேட்பாளராக நியமிப்பதை அத்வானி எதிர்த்ததாகக் கூறப்படுகிறது. மூன்றுமாத காலத்தில் அத்வானி தன்னால் வெற்றிபெற முடியாத சண்டையில் ஈடுபட்டது இது இரண்டாவது தடவையாகும். கட்சிக்குள் காற்று எந்தத் திசையில் வீசுகிறது என்பதை இது வெளிக்காட்டுகிறது.

கடந்த ஜூன் 9 ஆம் திகதி கோவாவில் நடைபெற்ற பாரதிய ஜனதாவின் தேசிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் வைத்து 2014 பொதுத் தேர்தலுக்கான பிரசாரக் குழுவின் தலைவராக மோடியை ராஜ்நாத்சிங் அறிவித்தார். 86 வயதான அத்வானி அந்த வேளையிலும் அலட்சியப் படுத்தப்பட்டார். பிரசாரக்குழுத் தலைவராக மோடியை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியை தடுத்துநிறுத்தும் நோக்கில் அத்வானி அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் பகிஷ்கரித்தார். ஆனால், அதே இரண்டாவது தலைமுறைத் தலைவர்கள் மோடியை பிரசாரக் குழுத் தலைவராக நியமிக்கும் தீர்மானத்தை ஆதரித்தார்கள்.

மோடி பிரதமர் வேட்பாளராக நியமிக்கப்பட்டதை தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஏனைய பங்காளிக் கட்சிகளான அகாலி தள் மற்றும் சிவ சேனை ஆகியவை ஆதரித்ததாகச் செய்தியாளர் மகாநாட்டில் கூறிய ராஜ்நாத்சிங், அத்வானி வராதமை குறித்துக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார்.

அத்வானி தனக்காகத் தானே பேசினார். ராஜ்நாத் சிங்கிற்கு அனுப்பிய கடிதத்தில் அவர் மோடியைப் பற்றி எதையும் குறிப்பிடாமல், ராஜ்நாத் சிங் செயற்படுகின்ற முறையைக் குறை கூறியிருந்தார்.

'இன்றைய பாராளுமன்றக் குழுக் கூட்டம் பற்றி என்னிடம் கூறுவதற்கு நீங்கள் வந்தபோது நீங்கள் செயற்படுகின்ற முறை தொடர்பிலான எனது விசனத்தையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தியிருந்தேன். கூட்டத்தில் கலந்துகொண்டு சகல உறுப்பினர்களின் முன்னிலையிலும் எனது கருத்துகளைத் தெரிவிக்க வேண்டுமா என்பது குறித்து பரிசீலிப்பேன் என்று உங்களுக்குக் கூறியிருந்தேன், கூட்டத்தில் பங்கேற்காமல் இருப்பதே பொருத்தமானது என்று முடிவு செய்திருக்கிறேன்' என்று இந்தி மொழியில் எழுதப்பட்ட அக்கடிதத்தில் அத்வானி குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், தன் மீதான விமர்சனத்தை தனது பாணியிலேயே ராஜ்நாத் சிங் எடுத்துக்கொண்டார். 'அத்வானி எனது பாதுகாவலன், எனது ஆசான். எனக்கு வழிகாட்டுவதற்கும் என்னைக் கண்டிப்பதற்கும் அவருக்கு உரிமை இருக்கிறது. அவர் மீது

மோடிக்கு ஆதரவாக வாக்களித்த இரண்டாவது தலைமுறைத்தலைவர்களில் பெரும்பாலானவர்கள் அத்வானியின் சீடர்கள். ராஜ்நாத்சிங், சுஷ்மா சுவராஜ், அருண் ஜேட்லி, வெங்கையா நாயுடு, ஆனந்த் குமார் ஆகியோர் இதில் முக்கியமானவர்கள். மோடியும் கூட அத்வானியின் சீடரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மதிப்பு வைத்திருக்கிறேன். கட்சிக்கு அவர் செய்த பங்களிப்புகளை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. அவர் மீது எனக்கிருக்கும் மரியாதை ஒருபோதுமே குறையாது என்று ராஜ்நாத் சிங் கூறினார்.


'முடிசூடிக்கொண்ட பிறகு' மோடி ஆசிர்வாதங்களைப் பெறுவதற்காக நேரடியாக வாஜ்பாயினதும் அத்வானியினதும் வாசஸ்தலங்களுக்குச் சென்றார்.


பாரதிய ஜனதாவின் பொதுத் தேர்தல் பிரசாரக்குழுவின் தலைவராக நரேந்திரமோடி கோவாவில் வைத்து மூன்று மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டபோதே கட்சி அவரையே பிரதமர் வேட்பாளராக்குவதற்கு தீர்மானித்துவிட்டது என்று இப்போது கூற முடியும். ஆனால், கோவாவில் இருந்து டில்லிக்கான மோடியின் உயர்ச்சி போட்டியின்றியதாகவோ சுலபமானதாகவோ இருக்கவில்லை. இறுதியில் மோடி வென்றார். அத்வானி தோற்றார்.

ஆனால், அரசியல் கட்சிகள் குடும்பங்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதும் தலைமைத்துவத்துக்கான உண்மையான போட்டிகள் அரிதாக இருக்கின்றதுமான ஒரு நாட்டில் மோடி முன்னிலைப்படுத்தப்படுவது தொடர்பில் மூண்டிருக்கக்கூடிய தகராறுகள் மிகவும் வரவேற்கத்தக்கவையாகும். பாரதிய ஜனதாவுக்குள் இருக்கக்கூடிய உட்கட்சி ஜனநாயகத்தை இது காட்டுகிறது. இத்தகைய உட்கட்சி ஜனநாயகம் காந்தி வம்சத்தின் பெயரில் நடத்தப்படுகிற காங்கிரஸ் கட்சிக்குள் இல்லை.

இதுகால வரையான போக்குகளுக்கு சவால் விடுக்கும் வகையில் மோடியின் பிரதமர் பதவி வேட்பாளர் நியமனம் அமைந்திருக்கிறது. இது காலவரையில் இந்தியாவில் பிரதமர் பதவிக்கு போட்டியிட்டிருக்கக் கூடியவர்களுடன் ஒப்பிடும் போது மோடி மக்கள் மத்தியில் கடுமையான அளவுக்கு துருவமய உணர்வை ஏற்படுத்தக் கூடிய ஒருவராக விளங்குகிறார்.

இந்தியாவின் சரித்திரத்திலே மோடியைப் போன்று வேறு எவருமே மாநிலமொன்றின் தொலை














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரக் கிராமத்தில் பின்தங்கிய வகுப்பில் இருந்துவந்த (அதுவும் சிறிய தேநீர் கடையொன்றில் வேலை பார்த்தவர்) மக்களின் மனதைக் கவர்ந்ததில்லை. 2002 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட இனக்கலவரம் தொடர்பில் மோடிக்கு அவப்பெயர் இருக்கின்ற போதிலும் அவரால் மக்களின் ஆதரவை, குறிப்பாக இளைஞர்களினதும் சாதாரண மக்களினதும் ஆதரவை பெறக்கூடியதாக இருந்திருக்கிறது. இதற்கு அவரின் சாதனைகளே காரணமாகும். அச்சாதனைகளை மத்திய அமைச்சர் பாரூக் அப்துல்லா, மற்றும் மார்க்சிய கம்யூனிஸ் கட்சித் தலைவர்கள் போன்ற அவரின் அரசியல் எதிரிகள் கூட பாராட்டத் தவறியதில்லை.

தனது குஜராத் மாநிலத்தின் அபிவிருத்தி வகை மாதிரி முழு இந்தியாவுக்குமே முன்னுதாரணமாகப் பின்பற்றக்கூடியது என்று மோடி கூறுகிறார். அவரின் கூற்று சரியானதா என்பதை சரித்திரத்தினால் மாத்திரமே நிரூபிக்கக் கூடியதாக இருக்கும். பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதிலும் ஆட்சிமுறையை வலுப்படுத்துவதிலும் குஜராத் மாநிலத்தில் தன்னால் காணக்கூடியதாக இருந்த அதே வெற்றியை முழு நாட்டிலும் அவரால் காணக்கூடியதாக இருக்குமா? மோடி இளைஞர்கள் மத்தியில் ஆர்வத்தைத் தூண்டியிருக்கிறார். அவர் தோல்வி காண்பாரேயானால், அது கட்சிக்கு பெரும் அனர்த்தமாகப் போய் முடியும். டில்லியில் வெற்றி காண்பது என்பது சுலபமானதல்ல. டில்லியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான பாதை இலகுவானதல்ல.


குஜராத்தில் அவரது வெற்றிகூட எளிதானதாக இருக்கவில்லை. தனது கட்சியின் மாநிலத்தலைவர்களிடமிருந்து, காங்கிரஸிடமிருந்து மற்றும் தேசிய ஊடகங்களில் இருந்து வந்திருக்கக்கூடிய எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், அவர் சகல தடைகளையும் புத்திசாலித்தனமாகக் கடந்துவந்தார். மக்களுடன் நெருக்கமான உறவை அவரால் வளர்க்க முடிந்தது. அந்த மாநில மக்கள் மோடியை நான்காவது தடவையாக முதலமைச்சராக்கியிருக்கிறார்கள்.

தனது மாநிலத்தில் கடைப்பிடித்த அதே அணுகுமுறையையே தேசிய மட்டத்திலும் இப்போது கடைப்பிடிக்கின்றார் போலத் தெரிகிறது. அதாவது, ஆட்சிமுறை ஆற்றல்கள், ஊழலற்றதன்மை மற்றும் அபிவிருத்திச் சாதனைகள் பற்றியே அவர் பேசுகிறார். பிரதமர் வேட்பாளராக நியமிக்கப்படுவதற்கு ஒருவாரம் முன்னதாக ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூரில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மோடி பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கை கடுமையாகச் சாடினார். ஊழல் தலைவிரித்தாடும் அரசாங்கமொன்றுக்குத் தலைமை தாங்கும் மன்மோகன்சிங் முறையாக ஆட்சி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார். பிரதமர் வேட்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முதன் முறையாக உரையாற்றிய வேளையிலும் மோடி பிரதமர் சிங் மீது அதே குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார். சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட எல்லைத் தகராறுகளை மத்திய அரசாங்கம் தவறாகக் கையாண்டதாகவும் தாக்கிப் பேசிய அவர் உறுதியானதும் பலம் பொருந்தியதுமான ஒரு தலைமைத்துவத்தினாலேயே தீர்வுகளைக் காணக்கூடியதாக இருக்கும் என்றார். மதச்சார்பற்றவர்கள் என்று கூறப்படுகிற காங்கிரஸையும் இடதுசாரிக் கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகளை கண்டனம் செய்த மோடி, அந்த அரசியல்வாதிகள் இராணுவத்திடமிருந்து பாடம் படிக்க வேண்டுமென்று கூறினார். எல்லையோரங்களில் அல்ல, டில்லியில் தான் பிரச்சினைகள் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய மக்களை மதரீதியாக துருவமயப்படுத்தக் கூடியவர் என்று நோக்கப்படுகின்ற மோடியின் தோற்றப்பாடு வாக்காளர்கள் மத்தியில் எவ்வாறு அடுத்தவருடம் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. கண்டிப்பான கட்டுப்பாட்டைக் கொண்ட மோடியின் தலைமைத்துவப் பாணி இந்தியாவின் சஞ்சலமான கூட்டணி அரசியலுக்கு பொருத்தமற்றதாக இருக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது.

காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் பலமுனைகளிலும் பெரும் நெருக்கடிகளுக்குள்ளாகியிருக்கிறது. இந்த நெருக்கடிகள் வழங்கியிருக்கிற வாய்ப்பைத் தவறவிட்டால் அது பாரதிய ஜனதாவுக்கு பெரும் பாதிப்பாகப் போய்விடும். வாய்ப்பைத் தவறவிடாமல் செயற்பாட்டை வெளிக்காட்ட வேண்டிய பொறுப்பு மோடிக்கு இருக்கிறது.

கடந்த ஜூலையில் சி.என்.என்.-ஐ.பி.என்- இந்து மேற்கொண்ட அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் மூலம் நகர்ப்புறவாசிகளில் ஆக 38 சதவீதத்தினரே அரசாங்கத்தின்



செயற்பாடுகள் குறித்து திருப்தியடைந்திருக்கிறார்கள் என்பது தெரியவந்திருக்கிறது. 1911 ஆம் ஆண்டு இந்த வீதம் 49 ஆக இருந்தது. இந்தியாவின் பொருளாதார 'அதிசயத்தில்' மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் இரண்டாவது பதவிக் காலத்தில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. இதனால், நாட்டின் தலைமைத்துவத்தை மாற்றுவதற்கான நேரம் வந்துவிட்டது என்று எதிரணிக்கட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலெழுப்ப ஆரம்பித்துவிட்டன.

பொருளாதாரத்தை மீண்டும் சரியான தடத்தில் நிறுத்துவதற்கு தொடர்ச்சியான பல நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக காங்கிரஸ் கட்சியும் அதன் ஆதரவு வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறது. வாக்காளர்களைக் கவரக் கூடியதாக புதிய சட்ட மூலங்களைப் பாராளுமன்றத்தில் அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது. ஏழைக் குடும்பங்களுக்கு பயன்தரக்கூடிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய நில உரிமைகள் சட்டம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.


ஆனால், பாரதீய ஜனதாக் கட்சி அதன் பிரதமர் வேட்பாளரை அறிவித்துவிட்ட நிலையில், காங்கிரஸ் கட்சி மேலும் கூடுதலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸும் அதன் சொந்தப் பிரதமர் வேட்பாளரை அறிவிக்க வேண்டுமென்ற நெருக்குதல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், காந்தி குடும்ப வாரிசும் காங்கிரஸின் உப தலைவருமான ராகுல் காந்தி பொறுப்பை ஏற்பதற்குத் தயங்குகிறார். வல்லமை பொருந்திய மோடிக்கு எதிராக ராகுல் காந்தியை முன்னிலைப்படுத்தி நிறுத்துவதில் காங்கிரஸ் தலைவர்கள் அக்கறை காட்டவில்லை போலத் தோன்றுகிறது. சகல கருத்துக்கணிப்புகளுமே மோடியையே மிகவும் மக்கள் செல்வாக்குக்கொண்ட தலைவராக வெளிக்காட்டியிருக்கின்றன.

ராகுல் காந்தியின் கீழ் பணியாற்றுவதற்கு, தயாராயிருப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் அண்மையில் வெட்கக்கேடான முறையில் அறிவித்திருந்தார். பத்துவருடங்கள் பிரதமராக இருந்த ஒருவர், அதுவும் எண்பது வயதைத் தாண்டியவர் இப்போது ராகுல் காந்தியின் கீழ் பணியாற்ற விரும்புகிறார் என்றால், இதை என்னவென்று சொல்வது?

இப்போது சகலரினதும் கவனமும் காங்கிரஸ் தலைமைத்துவத்தின் மீது தான். சாதாரண மக்கள் மத்தியில் காப்புச் சட்டமும், நில சுவீகரிப்பும் காங்கிரஸ் இன்னொரு தடவை அதிகாரத்துக்கு வருவதற்கு உதவுமா? இரண்டாவது பதவிக்காலத்துக்கு மன்மோகன் சிங் அதிகாரத்துக்கு வருவார் என்று எவருமே நம்பவில்லை. ஆனால், 2009ஆம் ஆண்டு மேயில் அவர் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தார். அதேபோன்று மீண்டுமொரு அற்புதத்தை அவர் செய்வாரா?

### உத்தரப் பிரதேசத்தை உலுக்கிய இனக்கலவரம்

மக்கள் மத்தியில் மதரீதியான உணர்வுகளின் அடிப்படையில் பிரிவினையைத் தூண்டிவிடக்கூடிய தலைவர் என்று கூறப்படுகின்ற நரேந்திர மோடி பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளராகியிருக்கும் இத்தருணத்தில், அவரை கடுமையாகக்



கண்டனம் செய்யும் மதச்சார்பற்ற கட்சிகளின் தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் பெரிய பின்னடைவைச் சந்தித்திருக்கிறார்கள். முஸ்லிம்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர் என்று பெயரெடுத்த முலாயம் சிங்கின் சமாஜ்வாதிக் கட்சியின் ஆட்சியின் கீழ் உள்ள உத்தரப் பிரதேசம் முசாபர் நகரில் இடம் பெற்ற இனக்கலவரங்களினால் அதிர்ந்து போயிருக்கிறது. 50 க்கும் அதிக

பேரார்வத்தை ஏற்படுத்திக் கொண்டு, தைரியமாக பிரசாரத்தை முன்னெடுத்திருக்கும் மோடியை எதிர்ப்பதற்கு எத்தகைய தந்திரோபாயத்தை காங்கிரஸ் தலைமைத்துவம் வகுக்கப்போகிறது? அட்டகாசமாக முன்னேறிக் கொண்டிருக்கும் மோடிக்கு எதிராக களம் இறங்குவதற்கு ராகுல் காந்தி இறுதியில் இணங்குவாரா? அல்லது அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உணவுப் பாது

2012 மார்ச்சில் சமாஜ்வாதிக்கட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு உத்தரப் பிரதேசத்தில் 130க்கும் அதிகமான இனமோதல்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், முசாபர் நகர் மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளே மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவர்கள் பலியானார்கள். ஆகஸ்ட் 27 ஆம் திகதி மூண்ட கலவரங்கள் மூன்று- நான்கு நாட்கள் நீடித்தது. முஸ்லிம்களுக்கும் ஜத் இந்துக்களுக்கும் இடையிலான இக்கலவரங்களில் பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள்.

முஸ்லிம்களின் தொல்லைகள் தொடர்பில் ஜத் இந்துக்கள் செய்த முறைப்பாட்டை விசாரிப்பதற்குப் பொலிஸார் மறுத்ததே கலவரம் தொடங்கியதற்கான காரணம் என்று கூறப்படுகிறது. இந்து யுவதியொருவருக்கு தொந்தரவு கொடுத்த இரு முஸ்லிம் பையன்களை யுவதியின் உறவினர்கள் அடித்துக்கொலை செய்தனர். பதிலடியாக முஸ்லிம்கள் நடத்திய தாக்குதலில் யுவதியின் இரு சகோதரர்கள் பலியாகினர். இச்சம்பவங்கள் எல்லாம் நடந்து கொண்டிருந்தபோது பொலிஸார் நடவடிக்கை எடுக்க மறுத்ததாகக் கூறப்படுகிறது. இது இந்துக்களுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியது. முலாயம் சிங்கின் மகன் அகிலேஷ்யாதவ் தலைமையிலான உத்தரப் பிரதேச மாநில அரசாங்கம் முஸ்லிம் சமுதாயத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் செயற்படுவதாகக் கருதும் இந்துக்கள் குழப்பமடைந்தார்கள். சமாஜ்வாதிக்கட்சியின் முஸ்லிம் முகமாக விளங்கும் அசாம் கானே உண்மையில் மாநில அரசாங்கத்துக்குத்தலைமை தாங்குவதாக ஜத் இந்துக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

2012 மார்ச்சில் சமாஜ்வாதிக் கட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகு உத்தரப் பிரதேசத்தில் 130க்கும் அதிகமான இனமோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், முசாபர் நகர் மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளே மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. முசாபர் நகர் மோதல்களில் தடுமாற்றத்தைத் தருகிற சில அம்சங்களைக் காணக்கூடியதாக இருந்தது. தனியொரு சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்ந்ததாக இருக்கிறது. அத்துடன் கிராமப்பகுதிகளுக்கும் கலவரம் பரவி பல கிராமங்களைத் துடைத்தெறிந்திருக்கிறது. தீவிரமடைந்த வன்முறைகளில் வணக்கத்தலமொன்று, கடைகள் மற்றும் வாகனங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. மக்கள் கிராமங்களை விட்டுத் தப்பியோடினார்கள். 21 வருடங்களுக்குப் பிறகு அந்தப் பகுதிக்கு இராணுவம் வரவழைக்கப்பட்டது. மாநில ஆயுத பாணிப் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

**சமாஜ்வாதிக் கட்சிக்கு முஸ்லிம்கள் அளிக்கின்ற ஆதரவு 'பாதுகாப்புக்குப் பிரதிபலனான வாக்குகள்' என்ற அடிப்படையிலேயே அமைந்திருந்தது. இந்த உடன்பாடு இப்போது முறிவடைந்து போயிருக்கிறது. மறுபுறத்தில் முஸ்லிம்களை திருப்திப் படுத்தும் வகையில் மாநில அரசாங்கம் நடந்து கொள்வதாக இந்துக்கள் குழப்பமடைந்திருக்கிறார்கள்.**

இந்த மோதல்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமென்னவென்றால் அவை ஜத்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மூண்டமைதான். இந்தப் பிராந்தியத்தில் ஜத்களும் முஸ்லிம்களும் இரண்டு முக்கியமான சமூகங்கள். கட்சிகளின் அரசியல் வாய்ப்புகளை மாற்றியமைக்கப் போதுமான பலம் இரு சமூகங்களிடமும் இருக்கிறது. பிரதானமாக ஒரு நகர்ப்புறச் சமூகமாக இருக்கும் முஸ்லிம்கள் அந்த மாநிலத்தில் மிகப்பெரிய மதச்சிறுபான்மையினத்தவர்களாவர். ஆனால், எந்த மாவட்டத்திலுமே அவர்கள் பெரும்பான்மையினராக இல்லை. எவ்வாறெனினும் 13 லோக்சபாத் தொகுதிகளில் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஜத்கள் பிரதானமாக கிராமியச் சமூகத்தினராவர். அவர்கள் தங்களது தனித்துவ அடையாளம் தொடர்பில் வலிமையான உணர்வு கொண்டவர்கள். மேற்கு உத்தரப்பிரதேச வாக்காளர்களில் 6 சதவீதத்தினராக இருக்கும் ஜத் சமூகத்தவர்கள் குறைந்தபட்சம் 10 லோக்சபாத்தொகுதிகளில் கட்சிகளின் வாய்ப்புகளில் செல்வாக்கைச் செலுத்தக் கூடியவர்களாக விளங்குகிறார்கள். ஆனால், சமாஜ்வாதிக் கட்சியின் கீழ் யாதவ்களின் ஆதிக்கம் அதிகரி த்துவிடுவதால் பிராந்தியத்தில் சமன் பாடு குழப்பப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஜத் சமூகத்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான இனப்பதற்ற நிலையின் தோற்றம் காங்கிரஸ்- ராஷ்டிரிய லோக் தள் கூட்டணியைப் பாதிக்கும். இக்கூட்டணி ஆதரவுக்கு இவ்விரு சமூகங்கள் மீதே தங்கியிருக்கிறது. இந்த நிலைவரம் 2014 பொதுத்தேர்தலில் மேற்கு உத்தரப் பிரதேசத்தில் பாரதிய ஜனதாவுக்கு உதவக்கூடும். காங்கிரஸ் அதன் நேச சக்தியான சமாஜ்வாதிக்கட்சியை கண்டனம் செய்யாமல் மௌனமாகவே இருக்கிறது. ஆனால், பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து சமாஜ்வாதிக் கட்சி குழப்பத்தைத் தூண்டியதாகவும் இரு கட்சிகளுமே முறையே இந்து, முஸ்லிம் வாக்கு வங்கிகளை வலுப்படுத்திக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்த காலத்தில் பீஹாரில் லல்லு பிரசாத் யாதவிற்கு அளித்ததைப் போன்று உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதிக் கட்சிக்கு முஸ்லிம்கள் அளிக்கின்ற ஆதரவு 'பாதுகாப்புக்கு பிரதிபலனாக வாக்குகள்' என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்திருந்தது. இந்த 'உடன்பாடு' இப்போது முறிவடைந்து போயிருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வல்லாதிக்க அரசியலில் உருப்பெற ஆரம்பித்திருக்கும் ஒரு புதிய ஒழுங்கு



குமார் டேவிட்

**மிகவும் சிக்கலான சூழ்நிலையில் அமெரிக்காவும் ரஷ்யாவும். சிரிய நெருக்கடிக்கு ஒருதலைப்பட்சமாக தீர்வைக் காண அமெரிக்காவால் முடியவில்லை. ரஷ்யாவை ஒரு பெரிய வல்லாதிக்க நாடாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் ஒபாமா. மத்திய கிழக்கில் இருக்கும் செல்வாக்கை பாதுகாக்க வேண்டிய நிலையில் புட்டின்.**




ஒபாமா சிரியா மீது தாக்குதல் தொடுக்கப் போகிறாரா இல்லையா என்பதே சிலவாரங்களுக்கு முன்னர் எங்கும் பேச்சாக இருந்தது. ஆனால், திடீரென்று எல்லோருக்கும் அதிர்ச்சி தரும் வகையில், சிரிய ஜனாதிபதி பஷார் அல்- அசாத்திடமிருந்து இரசாயன ஆயுதங்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஜெனீவாவில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரியும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சேர்ஜி லவ்ரோவும் இணங்கிக் கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. சிரியா நெருக்கடி தொடர்பில் தங்களுக்கிடையே நிலவிய கடுமையான வேறுபாடுகளை தற்போதைக்கு ஒதுக்கிவைத்துவிட்டு அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்த உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. இந்த உடன்பாட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு அசாத் மறுப்பாரேயானால், அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு முன்னதாக இருபெரும் வல்லாதிக்க நாடுகளான அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே தகராறு மூளாது என்று கூறுவதற்கில்லை. ஆனால், உலக வல்லாதிக்க அரசியலில் புதிய ஒழுங்கொன்று உருப்பெற ஆரம்பித்திருக்கிறது என்பது மாத்திரம் நிச்சயம். இது உண்மையில் நல்லதொரு விடயம். அமெரிக்காவும் ரஷ்யாவும் மிகவும் சிக்கலான சூழ்நிலையில் இருப்பதனாலேயே இவ்வாறு நடக்கிறது. இரு நாடுகளும் பரஸ்பரம் அவற்றின் நலன்களுக்காக இத்தகைய ஏற்பாடொன்றை வகுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

அமெரிக்கா இரு பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது. ஒன்று பிரமாண்டமானது, மற்றது பாரதூரமானது. 2008 ஆம் ஆண்டு மூண்ட உலகளாவிய பொருளாதார நெருக்கடி இன்னமும் நீடித்துக்கொண்டேயிருக்கிறது. அவ்வப்போது ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், ஒருபோதுமே உண்மையான மீட்சி ஏற்படவில்லை. பொருளாதார நிலைவர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தை மிகவும் ஆழமாக ஆராய்பவர்களில் பெரும்பாலானவர்கள் இன்னும் சில வருடங்களில் (முதலாவதை விடவும் படுமோசமான) இரண்டாவது தகர்வொன்று ஏற்படப் போகின்றது என்று எதிர்பார்க்கிறார்கள். உலகளாவிய முதலாளித்துவம் முழுமையான நெருக்கடியொன்றுக்குள் இருப்பதாக மார்க்சியவாதிகள் கூறுகிறார்கள். ஆனால், நாம் அவர்களை மேற்கோள் காட்டவேண்டிய தேவையில்லை. உலகளாவிய பொருளாதாரத்தின் எதிர்கால வாய்ப்புகள் குறித்து பிரதான போக்கு பொருளாதார நிபுணர்களில் பெரும்பான்மையானவர்கள் முற்றிலும் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கிறார்கள். இது ஒரு பிரமாண்டமான பிரச்சினை. உலகின் நெருக்கடிமிக்க கேந்திர முக்கியத்துவ பிரச்சினைகளை ஒருதலைப்பட்சமாக வெற்றிகொள்வதற்கு அமெரிக்காவிடம் வளங்கள் இல்லை. (ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது) ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தில் அமெரிக்கா இன்று இருக்கிறது. மத்திய கிழக்கில் ரஷ்யாவின் ஒத்துழைப்பும் ஆசிய -பசுபிக் பிராந்தியத்தில் ஜப்பான், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவின் ஒத்துழைப்பும் அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது. 9/11க்குப் பிறகு மத்திய கிழக்கில் அமெரிக்கக் கொள்கை அலங்கோலமாக இருக்கிறது. ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் இராணுவத் தலையீடு தோல்வி கண்டுவிட்டது. ஈராக்கில் அமெரிக்கா செய்த தலையீடு முற்றுமுழுதான அனர்த்தமாகிப் போய்விட்டது. அமெரிக்கா 'வெற்றிபெற முடியாத குதிரைகளையே' ஆதரித்து வந்திருக்கிறது. ஈரான் மன்னர் ஷா தொடக்கம் எகிப்தின் ஹொஸ்னி முபாரக் வரை இதற்கு பெருவாரியான உதாரணங்கள். அரபு வசந்தத்தையும் லிபியாவையும் பயன்படுத்திக்கொள்ள அமெரிக்கா தவறிவிட்டது. பாலஸ்தீன விவகாரத்தில் முன்னேற்றம் எதையும் காணமுடியவில்லை. சவூதி முடியாட்சியும் வளைகுடா நாடுகளின் எதேச்சாதிகார ஆட்சியாளர்களும் இன்னமும் கூட அமெரிக்காவின் நண்பர்களாகவே விளங்குகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, இஸ்லாத்துடனான அமெரிக்காவின் உறவு தொடர்பில் உகந்த அணுகுமுறை வகுக்கப்படவில்லை. எதிர்காலத்துக்கு இது மிகவும் முக்கியமான தாகும். உலக சனத்தொகையின் 25

> உலகின் நெருக்கடிமிக்க கேந்திரமுக்கியத்துவ பிரச்சினைகளை ஒருதலைப்பட்சமாக வெற்றிக்கொள்வதற்கு அமெரிக்காவிடம் வளங்கள் இல்லை. ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தில் இன்று அமெரிக்கா இருக்கிறது. மத்திய கிழக்கில் ரஷ்யாவின் ஒத்துழைப்பும் ஆசிய-பசுபிக்கில் ஜப்பான், இந்தியா, அவுஸ்திரேலியாவின் ஒத்துழைப்பும் அதற்கு தேவைப்படுகிறது

சதவீதத்தினருடனான (170 கோடி மக்கள்) உறவை அமெரிக்கா சீராக்கவில்லையானால், அது குறுக்கப்பட்ட ஒரு வல்லரசாகவே விளங்கப்போகிறது. இந்த விவகாரத்தை விளக்கமாகக் கூறுவதற்கு தனியானதொரு கட்டுரை தேவை என்பதால் அதை இத்துடன் விட்டு விடுகிறேன்.

இத்தகையதொரு பலவீனமான பின்னணியிலே, அமெரிக்கா அதன் ஐரோப்பிய நேச அணிகளின் ஆர்வமற்ற ஆதரவுடனும் மத்திய கிழக்கில் எஞ்சியிருக்கக்கூடிய சார்பு நாடுகளின் உதவியுடனும் சிரிய நெருக்கடிக்கு ஒரு தலைப்பட்சமாகத் தீர்வைக்காண முடியாமல் இருக்கிறது. இங்கு ரஷ்யாவை ஒரு பெரிய வல்லாதிக்க நாடாக அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. அத்துடன் ஈரான் மிகவும் முக்கியமான பிராந்திய செல்வாக்கு நாடு என்ற யதார்த்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ரஷ்யா இதைவிடவும் கவலைக்குரிய நிலைமையில் இருக்கிறது. ரஷ்யாவின் பொருளாதாரம் மோசமான நிலையில் இருப்பதாலும் அதன் இராணுவம் கசங்கிச் சுருங்கிப் போன ஒன்றாக இருப்பதாலும் அது இப்போது பெரியதொரு வல்லரசாக இல்லை என்று எவரும் வாதிடலாம். இதை முழுவதுமாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. ரஷ்யா உலகின் எட்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டிருக்கிறது. உலகின் மிகப் பெரிய எண்ணெய் மற்றும் வாயு உற்பத்தி நாடாகவும் அது விளங்குகிறது. பாரிய அணுவாயுத ஆற்றலையும் கொண்டிருக்கிறது. சரியாகச் சிந்திக்கக் கூடிய எவரும் அணுவாயுதங்களைப் பயன்படுத்துவதில் ரஷ்யாவுக்கு இருக்கக்கூடிய ஆற்றலைப் பரீட்சிக்க விரும்பமாட்டார்கள். ரஷ்யாவே உலகில் பரப்பளவில் பெரிய நாடாக இருக்கிறது. (பரப்பளவில் இரண்டாவது பெரிய நாடாக விளங்கும் கனடா, ரஷ்யாவின் பரப்பளவில் அரைவாசியை விட சற்று கூடுதலானதாகும்). ஆனால் சனத்தொகையைப் பொறுத்தவரை (14 கோடி 50 இலட்சம்) உலகில் ஒன்பதாவது பெரிய நாடாகவே ரஷ்யா இருக்கிறது. சக்தி, கனிப்பொருட்கள், உலோகங்கள், மற்றும் மரவகை என்று பார்க்கும் போது உலகிலேயே மிகவும் பெருமளவு இயற்கை வளங்கள் ரஷ்யாவிடம் இருக்கிறது. இவற்றின் பெறுமதி 75 ட்ரில்லியன் டொலர்கள் என்று மதிப்பிடப்படுகிறது. அமெரிக்கா இது விடயத்தில் 45 ட்ரில்லியன் டொலர்களுடன் இரண்டாவது இடத்திலேயே இருக்கிறது. ரஷ்யா ஒரு போட்டி வல்லரசாக இருப்பதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கிறது. ஆனால், படுவீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையை மாற்றியமைப்பதே ஜனாதிபதி புட்டினின் அபிலாசைகளில் ஒன்றாக இருக்கிறது. இது மத்திய கிழக்கிலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் முன்னெடுக்கப்படக்கூடிய இராஜதந்திர உபாயங்களினால் செய்யப்படக்கூடிய ஒன்று அல்ல. இது புட்டின் தலைமையிலான குழுவின் ஆட்சியின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட- நிறைவேற்றுவதற்கு பலதசாப்தங்கள் எடுக்கக்கூடிய பாரிய பணியாகும். ஆனால், ரஷ்யாவினால் பெறக்கூடிய ஒவ்வொரு இராஜதந்திர வெற்றியும், உலகில் ரஷ்யாவின் செல்வாக்கு நிலையை அதிகரிக்கக் கூடிய ஒவ்வொரு செயலும் அதற்கு உதவியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஆசியாவில், ஆபிரிக்கா மற்றும் மத்திய அமெரிக்காவில் ரஷ்யாவுக்கு இப்போது செல்வாக்கு இல்லை. மத்திய கிழக்கில் மாத்திரமே அதற்கு செல்வாக்கு இருக்கிறது. அதைப் பாதுகாத்துக் கட்டியெழுப்புவதில் புட்டின் அக்கறையாக இருக்கிறார்.

அமெரிக்காவின் தந்திரோபாயத் திட்டம் மிகவும் தீர்க்கமானதாகும். ஒபாமாவுக்கு இரு அக்கறைகள் இருக்கின்றன. இரு வருடகால செயலின்மையை மறைப்பதற்கு எதையாவது செய்தாக வேண்டும். அவர் கீறிய 'மெல்லிய சிவப்புக் கோட்டை' அசாத் அலட்சியம் செய்ததால் தனது நம்பகத்தன்மைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பாதிப்பில் இருந்து மீள வேண்டும். ஆனால், இவையெல்லாம் புற எல்லை முக்கியத்துவமுடையவை. ஒபாமா திறந்துவிட்டுள்ள கேந்திர முக்கியத்துவ தெரிவுகளே உண்மையான பிரச்சினைகளாகும். 'உலகத் தலைவர்' என்ற வகையில் அமெரிக்காவின் நம்பகத்தன்மையை பாதுகாப்பதே அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் முக்கியமான இலக்காகும். இதற்கு ஆசியாவில் வெளியுறவுக் கொள்கை மற்றும் இராணுவக் கொள்கையை மாற்றியமைப்பதற்கு ஒபாமா எடுத்த முன் முயற்சிகள் போன்று மத்திய கிழக்கிலும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை மறுமதிப்பீட்டுக்குட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். அமெரிக்காவின் மத்திய கிழக்குக் கொள்கையை புதிய நிலையில் வைப்பதற்கான விவாதமொன்றை ஒபாமா நினையாப் பிரகாரம் தொடக்கி வைத்திருக்கிறார். தான் சிக்கலுக்குள் மாட்டுப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் சிரியாவில் தலையிடும் விவகாரத்தை ஒபாமா அமெரிக்க காங்கிரஸுக்கு நகர்த்திய போது, ஊடகங்களிலும் காங்கிரஸிலும் கல்விமான்கள் மத்தியிலும் வெறுமனே சிரியா விவகாரம் தொடர்பில் மாத்திரமல்ல, முழு மத்திய கிழக்குத் தொடர்பிலும் நீண்ட கால கொள்கை நோக்கு குறித்து முழுமையான விவாதமொன்றை அவர் கட்டவிழ்த்துவிட்டார். தாக்குதலைத் தொடுப்பதா, இல்லையா, தாக்குதல் நடத்துவதானால் எதைத் தாக்குவது என்ற விடயங்கள் எல்லாம் தந்திரோபாயத்திட்டத்தின் பிரகாரம் கட்டம் கட்டமாகத் தீர்மானிக்கப்படும். இத்தகையதொரு அணுகுமுறையைத் தான் செனட்டர் ஜோன் மக்கெயின் பலமாதங்களாக முன்வைத்து வந்திருக்கிறார். அதை ஒபாமா இப்போது காலந்தாழ்த்தி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

காங்கிரஸும் ஜனாதிபதியும் ஒன்று சேர்ந்து கருத்தொருமிப்பு அடிப்படையிலான திட்டமொன்றை வகுப்பார்கள். தனது 'மெல்லிய சிவப்புக் கோட்டை' ஒபாமா ஒதுக்கி வைத்திருக்கிறார். காங்கிரஸில் ஜனநாயகக் கட்சியினரும்குடியரசுக்கட்சியினரும் ஒன்றிணைந்து செயற்படத் தயாராகி விட்டார்கள். அமெரிக்காவின் 'உலக தலைமைத்துவத்தை' தக்கவைப்பதே நோக்கம். அமெரிக்காவின் அடிப்படை நலன்களுக்கு ஆபத்து ஏற்படும் போது குடியரசுக்கட்சியினரும் ஜனநாயகக் கட்சியினரும் ஜனாதிபதியும் காங்கிரஸும் ஒன்றிணைந்து விடுகிறார்கள்.

ரஷ்யா அதன் சர்வதேச பிரதிமையையும் அந்தஸ்தையும் மீளக் கட்டியெழுப்ப வேண்டுமானால், அது கூச்சலிட்டு எதிர்க்கிற பிரதிமையைக் கைவிட வேண்டும். தற்போதைய நிலைவரத்தை புட்டின் மிகவும் விவேகமாகப் பயன்படுத்தியிருக்கிறார். இராணுவ நடவடிக்கையில் இறங்கப் போவதாக அமெரிக்கா விடுத்த அச்சுறுத்தல் தான் இரசாயன ஆயுதங்களை ஒப்படைக்க முன்வருவதற்கு அசாத்தை நிர்ப்பந்தித்தது.

(முன்னதாக தன்னிடம் இரசாயன ஆயுதங்கள் இல்லை என்று அவர் நிராகரித்திருந்தார்) தலையீடு செய்வதற்கு புட்டினை நிர்ப்பந்தித்ததும் அதே அமெரிக்க அச்சுறுத்தல்தான். தனது நட்பு நாடு தாக்குதலுக்குள்ளாவதை கைகட்டிப்பார்த்துக் கொண்டு நிற்பதற்கு புட்டின் விரும்பவில்லை. இரசாயன ஆயுதங்கள் முற்றுமுழுவதுமாக ஒழிக்கப்படும் வரை அமெரிக்கா படைபலத்தைப் பிரயோகிக்கும் அச்சுறுத்தலைக் கைவிடப் போவதில்லை. ரஷ்யாவும் அதன் காய்களை விவேகமான முறையில் நகர்த்தியதுடன் சர்வதேச நெருக்கடியொன்றுக்கு நியாயபூர்வமான தீர்வொன்று காணப்படுவதில் தனக்கு அக்கறையிருப்பதையும் வெளிக்காட்டியது. புட்டின் பாராட்டைப் பெற்றிருக்கிறார். சபலப்படுகின்ற ஒருவராக ஒபாமா காணப்பட்ட அதேவேளை புட்டினை அமெரிக்காவில் உள்ளவர்களே தீர்க்கமான ஒரு தலைவர் என்று மெச்சினார்கள். மீண்டும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதலை நடத்தினால் தனது அரசும் இராணுவமும்

*(53ஆம் பக்கம் பார்க்க...)*

> ரஷ்யா ஒரு போட்டி வல்லரசாக இருப்பதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கிறது. ஆனால் அது படுவீழ்ச்சி நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைப்பதே புட்டினின் அபிலாசைகளில் ஒன்றாக இருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய அரசியல்




# மாலைதீவு தேர்தல் சொல்லும் சேதி

என்.எஸ்.

இரண்டாவது சுற்றில் ரஷீத் மிக இலகுவாக வெற்றிப்பெற்று விடுவார் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் உண்மை நிலைவரம் அதுவல்ல. தனது 45 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை 50 சதவீதத்திற்கு எடுத்துச்செல்ல அவர் கடுமையாக பாடுபட வேண்டியிருக்கும்

இலங்கையின் அண்டை நாடான மாலைதீவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான முதல் சுற்று வாக்களிப்பு நடந்து முடிந்துள்ளது. இரண்டாவதும் இறுதிச் சுற்றுமான வாக்களிப்பிலாவது 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் வேட்பாளரே, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார். ஆனால், அதற்கிடையில் முதல் சுற்று வாக்களிப்பு குறித்து குற்றச்சாட்டுகள், நீதிமன்ற வழக்குகள் என்று அடுத்த கட்ட வாக்களிப்பு குறித்து கேள்வி எழுந்துள்ளது.

முதல் சுற்று வாக்களிப்பில், எதிர்பார்த்தது போலவே, முன்னாள் ஜனாதிபதியும் மாலைதீவு ஜனநாயகக் கட்சி வேட்பாளருமான முஹமது நஷீத் 45.45 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருக்கிறார். என்றாலும், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அவர் பதவி இறங்கியதில் இருந்து நஷீதும் அவரது கட்சியினரும் எதிர்பார்த்தது போல், அவரால் முதல் சுற்றிலேயே 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றிபெற முடியவில்லை.

முதல் சுற்றில், நஷீதிற்கு அடுத்தபடியாக, எட்ட முடியாத தூரத்தில், முப்பது ஆண்டுகள் ஜனாதிபதியாக பதவி வகித்த மம்மூன் அப்துல் கயூமின் மாலைதீவு முற்போக்கு கட்சி வேட்பாளரான அப்துல்லா யாமீன் வந்துள்ளார். கயூமின் சகோதரரான யாமீன், 25.35 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார். அவருக்கு அடுத்தபடியாக குடியரசு கட்சி நிறுவுனரான காசீம் இப்ராகிம் 24.91 சதவீத வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தில் நிற்கிறார். கடைசியாக தற்போதைய ஜனாதிபதியான முகமது வாஹீத் ஹஸன் மானிக், மிக சொற்பமான 5.13 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார்.

வெளித்தோற்றத்திற்கு, இரண்டாவது சுற்றில் நஷீத், மிக இலகுவாக வெற்றி பெற்று விடுவார் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால், உண்மை நிலைமை அதுவல்ல. தனது 45 சதவீதத்திற்கு அதிகமாக வாக்குகளை 50 சதவீதத்திற்கு எடுத்துச்செல்ல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முஹமது நஷீத்


அப்துல்லா யாமீன்


காசிம் இப்ராகிம்


முகமது வாஹித் ஹஸன் மானிக்

அடுத்து வரும் நாட்களில் அவர் இன்னமும் கடுமையாக உழைக்க வேண்டும். கடந்த 2008 தேர்தலில் முதல் சுற்றில் 25 சதவீத வாக்குகள் மட்டுமே பெற்றிருந்த நஷீதும் அவரது கட்சியும் அதனை 45 சதவீதமாக தற்போது உயர்த்திக் காட்டியிருப்பதற்கு அவரது அரசியல் ஆளுமைத் தன்மையும் கட்சித் தொண்டர்களின் அயராத உழைப்புமே காரணம்.

## அதீதமான வாக்குப்பதிவு

முதல் சுற்றில் அதீதமான 88.2 சதவீத வாக்களிப்பு பதிவானது. ஒப்புக்கு சொல்ல வேண்டுமானால், 88.2 வாக்கு சதவீதத்தையும் தாண்டி அதிகப்படியான வாக்குகள் இரண்டாவது சுற்றில் பதிவானால் மட்டுமே, நஷீதால் புதிய வாக்குகளைப் பெற்று வெற்றிபெற முடியும். அவரைப் பொறுத்தவரையில், முதல் சுற்றில் பெற்ற வாக்குகளை அவர் தக்க வைத்துக் கொள்வதும் மிகவும் அவசியமாகிறது. முதல் சுற்றில் நஷீத் 45 சதவீத வாக்குகள் பெற்ற கதையே தனி. கடந்த 2008-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், 18 வயது மட்டுமே நிரம்பிய முதன்முறை வாக்காளர்கள் இரண்டு சுற்றுகளிலும் நஷீதிற்கே வாக்களித்தனர் என்று கருத இடமிருக்கிறது. அதுபோன்றே, நாட்டின் மக்கள் தொகையில் 60 சதவீதம் பங்களிக்கும் 40வயதிற்கும் குறைந்த வாக்காளர்களும் பெரும்பான்மையானோர், தங்களுக்கே வாக்களித்ததாக அவரது ஜனநாயகக் கட்சி கூறியது.

நஷீத் தரப்பின் கூற்றில் உண்மை இல்லை என்பதே உண்மை. அவர்களது கூற்றுப்படி பார்த்தால், முதல் சுற்றிலேயே நஷீத் வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால், அவர் பெற்றதோ, 25 சதவித்திற்கும் குறைவான வாக்குகளே. அவருக்கு முன்னால், பதவியில் இருந்த ஜனாதிபதி கயூம் 40 சதவீத வாக்குகள் பெற்று முன்னணியில் இருந்தார். முதலாவது சுற்றில் மூன்றாவது மற்றும் நான்காவதாக வந்த ஹஸன் சயீத் மற்றும் காசிம் இப்ராஹீம் ஆகியோர் பின்னர் நஷீதை ஆதரித்ததனாலே அவர் வெற்றி பெற முடிந்தது.

கடந்த தேர்தல் கயூமை முன்னிறுத்தி நடைபெற்ற தேர்தல். அது போன்றே 2013 தேர்தல், நஷீதை முன்னிறுத்தி நடைபெறும் ஒன்று. தற்போதைய நிலையில், மற்ற மூன்று வேட்பாளர்களும் நஷீதை எதிர்த்தே போட்டியிட்டனர் எனலாம். அவர்களது மொத்த வாக்கு எண்ணிக்கை, 54.55 சதவீதமாகும். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்வார்களேயானால், நஷீத் தனது வெற்றிக்கு மிகவும் கடினமாக உழைக்க வேண்டும். இந்தமுறை முதல் சுற்றில் நஷீத் முன்னணியில் வருவார் என்பதில் அவர்கள் யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

கடந்த ஆண்டு பதவி இழந்த காலம் தொட்டு, நஷீத் அரசியல் மற்றும் தேர்தல் பிரசாரத்தில் முழுமையாக ஈடுபட்டு வந்தாலும், அவரது தலைமைக்கு என்று சொல்லிக் கொள்ளும்படியான வாக்கு வாங்கி, மத்திய வர்க்க, மத்திய வயதிலுள்ள தாய்மார்களே ஆவர். இன்னும் சொல்லப்போனால், இந்தத் தேர்தலுக்கான முதன் முறை வாக்காளர்கள், கடந்த ஐந்து ஆண்டு அரசியல் குழப்பங்கள் காரணமாக அரசியல்வாதிகளையும் தேர்தல்களையும் சந்தேகக் கண்ணுடனேயே நோக்கி வருகின்றனர்.

ஆண் ஆகட்டும், பெண் ஆகட்டும். இந்தத் தேர்தலில், முதன் முறை வாக்களிக்கும் இளைஞர்களை 'தாய்ப் பாசம்' என்ற வலையில் பின்னியே, ஜனநாயகக் கட்சியின் ஆர்வமாக தொண்டர் குழாம், நஷீதிற்கு முதல் சுற்றில் 45 சதவீதப் வாக்குகளைப் பெற்றுத்தர முடிந்தது. ஆனால், இந்த இளைஞர்கள் இதேவகையில் தாய் சொல்லை தட்டாமல், இரண்டாவது சுற்றிலும் வாக்களிக்கச் செல்வார்கள் என்று கருதி, நஷீத் வாளாவிருந்து விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அந்த வாக்காளர்களை மூன்று வாரங்களில் இரண்டாவது முறை வாக்களிக்கச் சொல்வதே பெரும்பாடு.

இந்தத் தேர்தலின் முதன்முறை வாக்காளர்கள் என்று மட்டும் இல்லை. கடந்த தேர்தலில் முதன்முறை வாக்காளர்களாக இருந்தவர்களில் பலரும் அரசியலில் அதிக பற்று இல்லாமலே இருந்து வருகிறார்கள். அவர்களில் பலரும் வாக்களிக்கும் மனப்போக்கில் இந்தமுறை இருக்கவில்லை. ஆனால், தாய் சொல்லைத் தட்டாத தங்களது இளைய சகோதர-சகோதரிகளைப் பார்த்த மாத்திரத்திலேயே, அவர்களுக்கும் இந்த முறை முதல் சுற்று வாக்களிப்பில் ஈர்ப்பு ஏற்பட்டது எனலாம். இவர்களும் இரண்டாவது சுற்றில் வாக்களித்தால், அதில் கணிசமான ஒரு பகுதி நஷீத் ஆதரவு வாக்குகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், அவர்களை வாக்களிக்கச் செய்வதற்கே ஜனநாயகக் கட்சி புதிய உத்திகளைக் கண்டறிய வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் கூறியுள்ளதன் படி, தேர்தல் ஆணையம் இரண்டாவது மற்றும் இறுதிச் சுற்று வாக்களிப்பு செப்டெம்பர் 28ஆம் திகதியன்று நடைபெறுவதாக அறிவித்துள்ளது. முதல் சுற்று வாக்களிப்பு நடந்து, இரண்டாவது சுற்று நடைபெறுவதற்கான 21-நாட்கள் கால அவகாசத்தில் அன்றே கடைசி நாள் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில், முதல் சுற்று வாக்களிப்பு மற்றும் முடிவுகளை எதிர்த்து மூன்றாவதாக வந்த காசிம் இப்ராஹீம் நீதிமன்றம் சென்றுள்ளது பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. அந்த வழக்குகள் நிலுவையில் உள்ள சமயத்தில், இரண்டாவது சுற்று வாக்களிப்பு அரசியல் சட்டத்தில் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நடந்தேறுமா என்பதே தற்போது சந்தேகமாகி உள்ளது.

முதல் சுற்று வாக்களிப்பில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக நாட்டின் உயர் நீதிமன்றத்திற்கு சென்ற காசிம் இப்ராஹீமும் அவரது குடியரசுக் கட்சியும், முதல் சுற்று வாக்களிப்பையே செல்லாததாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு உச்ச நீதிமன்றத்தையும் அணுகி உள்ளனர். இதில், உயர் நீதிமன்றம், அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, முதல் சுற்று வாக்கு விவரங்களை, அவர்களது குழு, தேர்தல் ஆணையத்தில் சென்று பரிசோதித்துக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுபோன்ற வாக்கு சீட்டுப் பரிசோதனைக்கு சுமார் 20 நாட்கள் வரை நேரம் எடுக்கலாம் என்று உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் கூறியது நினைவில் கொள்ள வேண்டிய விடயம். இது தவிர, உச்ச நீதிமன்றத்தின் முன் இருக்கும் காசிமின் கோரிக்கை மனு மீது நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்த பின்னரே, அடுத்த கட்ட வாக்களிப்பு குறித்த சரியான நிலை குறித்து தெளிவு பிறக்கும் வாய்ப்பே உள்ளது.

இதற்கிடையில், தேர்தல் பிரச்சினை சட்டப்பிரச்சினையாக மாறுவதை எதிர்த்து, முன்னணி வேட்பாளரான நஷீதின் ஜனநாயகக் கட்சி, தாங்கள் பெரும்பான்மை பெற்றுள்ள பாராளுமன்றம் அவசரமாக கூட்டப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. அவர்களது வாதங்களுக்கு அப்பால் சென்று பார்த்தாலும், சட்டம் மற்றும் நீதிமன்றங்களுக்கு அப்பால் சென்று, எந்த ஒரு பிரச்சினைக்கு அரசியல் முலாம் பூசி, அதனை மக்களிடையே கொண்டு செல்வதில், ஜனநாயக கட்சியினர் சமர்த்தர்கள். ஏன், அரசியல் போராட்டங்களே எப்போதும் அவர்களது துருப்புச் சீட்டாக இருந்து வந்துள்ளது.

## யாருக்கு வெற்றி?

முதல் சுற்று வாக்களிப்பில் நஷீத் எதிர்ப்பு அணி என்ற வகையில், அப்துல்லா யாமீன் முன்னணியில் இருக்கிறார் என்ற ஹேஷ்யங்கள் தற்போது பொய்த்துப் போகும் வாய்ப்புள்ளது. காசீம் இப்ராஹீம், தனது வழக்குகளில் நீதிமன்றங்கள் தீர்ப்பு அளித்த பின்னரே, இரண்டாவது சுற்றில் தனது நிலைமை குறித்து முடிவு எடுக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

காசீம் இப்ராஹிமை தாஜா செய்யும் முகமாக, அவரது கோரிக்கைகளுக்கு யாமினும் அவரது கட்சித் தலைவரான கயூமும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் மட்டுமே, காசீம் யாமீனை இரண்டாவது சுற்றில் ஆதரித்து விடுவார் என்று சொல்லி விடமுடியாது. முதலாவது சுற்று நிலைமையை வைத்து பார்க்கும் போது, காசீம் இப்ராஹிமின் ஆதரவு இருந்தால் மட்டும் யாமீன் வெற்றி பெற்று விடுவார் என்றல்ல அர்த்தம். காசீமிற்கு முதல் சுற்றில் கிடைத்த வாக்குகள் இரண்டாம் சுற்றில் யாமின் ஆதரவு வாக்குகளாக மாறுவதற்கே இரு சாராரும் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.

காசிமின் தற்போதைய நிலைப்பாடு, அதனால் யாமீன் இழந்துள்ள இரண்டாம் சுற்று களப்பணிக்கான நேரம் மற்றும் வாய்ப்பு ஆகியவை, தேர்தலின் முடிவைப் பாதிக்கலாம். அதை விட முக்கியமாக, நீதிமன்ற வழக்குகள் முடிந்துவிட்ட தறுவாயில், தற்போதைய தேர்தல் முறையில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பது போன்ற ஒரு அறிக்கையுடன் இரண்டாவது சுற்று தேர்தலை தான் புறக்கணிக்கப் போவதாக அவர் அறிவிக்கலாம். அத்தகைய முடிவும் இரண்டாவது சுற்றில் யாமீனை பாதிக்கும்.

ஆனால், இவை அனைத்திற்கும் மாறாக, ஜனநாயக கட்சியோ, அல்லது குடியரசுக் கட்சியோ, தேர்தல் நிலை குறித்து போராட்டங்களில் இறங்குவார்களேயானால், அதுவே மாலைதீவின் இரண்டாவது சுற்று பல கட்சித் தேர்தலுக்கு மிகப் பெரிய சவாலாக அமைந்து விடும். அப்போது, பிற கட்சிகளின் நிலைப்பாடும், பாராளுமன்றத்தின் முடிவுகளும் ஜனாதிபதி வாஹீத் மற்றும் நீதிமன்றத்தின் பங்களிப்பும் மட்டுமே மாலைதீவில் ஜனநாயகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய ஆட்சி மாற்றம்

சர்வதேச அரசியல்



புதிய பிரதமர் டோனி அப்பட்

அகதிகள் தொடர்பான கொள்கைகளில் எந்த மாற்றமும் இல்லை. பொருளாதார வீழ்ச்சி, காபன் எரிபொருட்கள் மீதான வரி போன்ற விடயங்களில் புதிய பிரதமர் மிகுந்த கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது



சிட்னியிலிருந்து கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன்

அரசியலுக்கு அழகு நல்ல தலைமைத்துவம். தலைமைத்துவத்துக்கு அழகு அடுத்த கட்டத்துக்கு புதிய தலைமைகளை உருவாக்குவது. அண்மைக்காலங்களில் இந்த அரசியல் பண்பு மறந்துபோன, மறைந்து போன ஒன்றாகவே உலக அளவில் நிலவி வருகிறது. அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் கட்சிக் கூட்டணி அமோக வெற்றிபெற்றது. இதன்மூலம் ஆறு ஆண்டுகால தொழில் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இந்த நிகழ்வும் தகுந்த தலைமை இல்லாமல் அவுஸ்திரேலியா போன்ற முன்னணி நாடுகளில் கூட தலைமைத்துவத்துக்குப் பஞ்சம் வந்ததைக் காட்டுவதாகவே உள்ளது.

வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகவே வாக்களித்தது போல ஒரு தோரணையில்தான் வாக்களிப்பு நடந்ததாகவே தோன்றுகிறது. அவுஸ்திரேலியாவில் 1922ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் 59.38 சதவீதம் குறைந்த அளவு வாக்காளர்களே வாக்களிக்க முன்வந்ததால் கட்டாய வாக்களிப்பு முறை அமுலாக்கப்பட்டது. இதன்படி வாக்களிக்கத் தவறுபவர்கள், அது தொடர்பான முறையான விளக்கத்தை அளிக்க வேண்டும். இல்லையெனில், சுமார் 50 டொலர்கள் அபராதம் விதிக்கப்படும். தவறினால் நீதிமன்ற விசாரணைக்கு உட்பட வேண்டும். கட்டாய வாக்களிப்பு சட்டம் அமுலில் உள்ளதால் 1 கோடியே 40 இலட்சம் பேர் தேர்தலில் வாக்களித்தனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் அவை மற்றும் செனட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைக்கு தேர்தல் நடந்து முடிந்தது. பிரதிநிதிகள் அவையில் மொத்த முள்ள 150 இடங்களில் பெரும் பான்மை பெறும் கட்சியின் தலைவர் பிரதமராகத் தேர்வு செய்யப்படுவார்.

அந்த அடிப்படையில் லிபரல் கட்சி-தேசிய கட்சிக் கூட்டணியின் தலைவர் டோனி அப்பட் புதிய பிரதமராக பதவியேற்றுள்ளார். ஆறு வருடங்களுக்குப் பிறகு அவுஸ்திரேலியாவில் லிபரல் கட்சி ஆட்சி பீடம் ஏறியுள்ளது. இது பெருத்த எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. டோனி அப்பட் தனதுரையில், ‘அவுஸ்திரேலியா புதிய நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளது. திறந்தவெளி வர்த்தகம் மீண்டும் ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார். டோனி அப்பட் பார்க்க சிக்ஸ் பாக் இல்லாமல், வைட் வடிவேலு போலத் தெரிந்தாலும் கூட முன்னாள் பாக்ஸிங் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. தொழில் கட்சியைச் சேர்ந்த பிரதமர் கெவின் ரட், தனது கட்சியின் தோல்வியை ஒப்புக் கொண்டார். தேர்தலைத்தொடர்ந்து கெவின் ரட் ‘தொழில் கட்சியின் தலைவர் பதவிக்குத்தான் மீண்டும் போட்டியிடப் போவதில்லை என்றும் கட்சியை புதுப்பித்தலுக்கான நேரம் இது,’ என்றும் குறிப்பிட்டார். இந்தத் தேர்தலுக்கு முன்பு தொழில் கட்சித் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில், கெவின் ரட், ஜூலியா கில்லார்டை தோற்கடித்தார். இதனால் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியைப் போக்க அமைச்சரவையில் 11 பெண்களை கெவின் ரட் தேர்வு செய்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் முதல் பெண் பிரதமராக ஆட்சிக்கு வந்த ஜூலியா கில்லார்டை எதிர்த்து கெவின் ரட் களமிறங்கினார். ஆயினும், இந்த வருடம் ஜூன் மாதம்தான் அவரால் ஜூலியாவை உட்கட்சி தேர்தலில் வீழ்த்தி பதவிக்கு வரமுடிந்தது.அதன் பின் உடனடியாக வந்த இந்தத் தேர்தல் அத்தனை திருப்திகரமான சூழ்நிலையை உருவாக்கவில்லை என்பதே உண்மை. தொழில் கட்சி தோல்விக்கு அக்கட்சியில் முன்னாள் பிரதமர் ஜூலியா கில்லார்டு, கெவின் ரட் இடையே நிலவி வந்த போட்டி முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

ஆனாலும், இரு முக்கிய கட்சிகளின் நிலைப்பாடுகளே இந்த வெற்றி- தோல்வியை நிர்ணயித்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தொழில் மற்றும் லிபரல் கட்சிகளின் ஆட்சி பீடத்துக்கான போட்டியில் அவரவர் அரசியல் நிலைப்பாடுகளைப் பார்ப்போம்.

1. ஒருபாலினத் திருமணம்

கெவின் ரட் - ஒரே பாலினத் திருமணத்திற்கு சட்டபூர்வ அனுமதி தருவோம்.

டோனி அப்பட் - இம்மாதிரியான திருமணத்திற்கு அனுமதி தரமாட்டோம்.

2. சுரங்கத் தொழில்

கெவின் ரட் - சுரங்கத்தொழிலுக்கு வரிவிகிதங்கள் மாறாது.

டோனி அப்பட் - வரி விகிதங்களில் உரிய மாற்றங்கள் செய்யப்படும்.

3. கார் உற்பத்தி

கெவின் ரட் - கார்கள் உற்பத்திக்கு தொடர்ந்து உதவி செய்வோம்.

டோனி அப்பட் - கார் உற்பத்தி ஊக்குவிக்கப்பட மாட்டாது.

4. சாலை மேம்பாடு

கெவின் ரட் - சாலை மேம்பாட்டிற்கு 80 கோடி டொலர்கள் மட்டுமே ஒதுக்கீடு.

டோனி அப்பட் - சாலை மேம்பாட்டிற்கு 1850 கோடி டொலர்கள் ஒதுக்கப்படும்.

5. அகதிகள் பிரச்சினை

கெவின் அப்பட் இருவருமே- அகதி அந்தஸ்து கேட்டு வருவோருக்கு அனுமதியில்லை.

பொருளாதார வீழ்ச்சி, சட்ட விரோதமாக படகுகளில் வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, கார்பன் எரிபொருட்கள் மீதான வரி என்பன கெவின் ரட்டின் தோல்விக்கு வழிவகுத்துள்ளது என்பதும் உண்மை.

தமது வெளியுறவுக் கொள்கைகளில் டோனி அப்பட் மிகக் கவனமாக இருக்கிறார். பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஆட்கடத்தல் பற்றிய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளார். குறிப்பாக இலங்கை ஒரு முக்கிய விடயமாக அவரது கவனத்தை ஈர்த்துள்ளது.

கடந்தவார தேர்தல் வெற்றிக்குப் பின்னர், அப்பட் ஆட்கடத்தல் பிரச்சினை பற்றி இந்தோனேசிய ஜனாதிபதி சுசீலோ பாம்பாங் யுதயோனோ, பப்புவா நியூ கினியாவின் பிரதம மந்திரி பீற்றர் ஓ நீல் ஆகியோருடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு முன்னதாக, அப்பட் இந்தோனேசியா, பப்புவா நியூ கினியா, இலங்கை ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் தொலைபேசியில் உரையாடியிருக்கிறார்.

அப்பட் இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் உச்சிமாநாட்டில் சர்வாம்ச கலந்துரையாடலை நடத்துவதென இரு தலைவர்களும் இணங்கியிருக்கிறார்கள். அவுஸ்திரேலியாவிற்கு கூடுதலான அகதிப் படகுகள் மூலம் செல்லும் நாடுகளில் ஒன்றாக இலங்கை இருக்கிறது. இதுகுறித்து மகிந்த ராஜபக்ஷ, டோனி அப்பட் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல்கள் நடைபெற்றிருப்பதாகத் தெரிகின்றது.

ஒவ்வொரு வருடமும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்காக அவுஸ்திரேலியா 300 கோடி டொலருக்கு மேலான தொகையை செலவு செய்துள்ளதாகக்கூறும் அறிக்கையொன்றை அவுஸ்திரேலிய நாடாளுமன்ற நூலகத் தகவல்கள் வெளியிட்டுள்ளது. படகு மூலம் வருபவர்கள் விவகாரத்தில், புகலிடக் கோரிக்கையாளர்களை பப்புவா நியூகினியா போன்ற நாடுகளில் விசாரிப்பது தான் தமது கொள்கையின் மையமாக இருக்குமென அப்பட் குறிப்பிட்டிருக்கிறார். வெளிவிவகார அமைச்சராக பதவியேற்கவுள்ள ஜூலி பிஷொப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டோனி அப்பட் தலைமையிலான புதிய அமைச்சரவை பதவியேற்றுக்கொண்ட பின்னர் கவர்னர் ஜெனரல் குயின்டைன் பிரைஸுடன் செப்டெம்பர் 18 எடுத்துக்கொண்ட படம்.

கடந்த சில நாட்களில் இலங்கை, இந்தோனேசியா, பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளின் வெளி விவகார அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்.

அப்பட் தலைமையிலான அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக ஜூலி பிஷொப் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒரே பெண் அமைச்சர் இவரேயாவார்.

நிதியமைச்சராக மேற்கு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த செனட்டர் மாத்தையாஸ் கோர்மான் நியமிக்கப்பட்டுள்ளார். நிதியமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஆர்தர் சினோடினோஸ் துணை அமைச்சராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஆளும் கூட்டணி எதிர்க்கட்சியில் இருந்த சமயம் நிதி விவகாரங்களுக்கான பேச்சாளராக கடமையாற்றிய அன்ரூ ரொப்வணிகத் துறை அமைச்சராவார். குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு ஸ்கொட் மொரிசனுக்கும், கல்வியமைச்சுப் பொறுப்பு கிறிஸ்டோபர் பைன் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பீற்றர் டற்றன் சுகாதார அமைச்சராக கடமையாற்றுவார். மெல்கம் டேர்ன்புல் தொடர்பாடல் அமைச்சராவார்.

டோனி அப்பட் கத்தோலிக்க மதகுருவுக்கான முறையான பயிற்சியையும் மேற்கொண்டிருந்த காரணத்தால் தனது அரசியல் கொள்கைளை மதம் சார்ந்தே பின்பற்றுகிறார்.

இந்தக் காரணத்தால்தான் பல மேற்கு நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓரினத் திருமணம் டோனி அப்பட்டின் ஆட்சியில் மறுக்கப்பட்டிருக்கிறது.

நிஷ் காம்ய கர்மா என்கிறது பகவத் கீதை அதாவது, எந்தவொரு பற்றும் இல்லாமல் தன்னுடைய விருப்பு, வெறுப்பு இல்லாமல் தான் செய்யும் தொழிலை செம்மையாகச் செய்யும் மனப்பக்குவம் தேவை. ஆனால் டோனி அப்பட் மதம் சார்ந்த தனது கொள்கைகளை அரசியலில் திணிப்பது விமர்சனத்துக்குரியது. தொழில் கட்சி அரசு ஓரினத் திருமணம் தொடர்பாக ஆதரவைத் தெரிவித்திருந்தது.

கிறிஸ்தவ ஆதரவு அமைப்புகள் ஓரினத் திருமணம் தொடர்பாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. கன்பராவை தலைமை கொண்ட மாநிலம் ஓரினத் திருமணம் தொடர்பாக ஆதரவாக சட்டம் இயற்றி உள்ளது. இதை டோனி அப்பட் மாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், யூ.என்.எஸ் பல்கலைக்கழக சட்டப் பேராசிரியர் ஜோர்ஜ் வில்லியம்ஸ் கடந்த தேர்தலில் மாநில சட்டங்களை அகற்றும் அதிகாரம் கவர்னரிடமிருந்து அகற்றப்பட்டு விட்டதனால் அப்பட் அரசுக்கு சட்டத்தை மாற்றும் வல்லமை இல்லை என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார். இரண்டு சபைகளிலும் சட்டமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அன்றி கன்பரா மாநில சட்டத்தினை நீக்க முடியாது என்று இவர் மேலும் கருத்து தெரிவித்திருக்கிறார். இரு சபைகளிலும் சட்ட மூலம் ஏற்றுக்கொள்ளப்படுவது தற்போதைய சூழ்நிலையில் மிகக்கடினம் என நம்பப்படுகிறது.

தொடர்ந்து அவுஸ்திரேலியா சந்தித்து வரும் பொருளாதார வீழ்ச்சி, சட்டவிரோதமாக படகுகளில் வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, கார்பன் எரிபொருட்கள் மீதான வரி போன்ற விடயங்களில் டோனி அப்பட் மிகுந்த கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தியல்



க.சண்முகலிங்கம்

# சர்வதேச உறவுகள் பற்றிய பன்மைவாதக் கோட்பாடு

சர்வதேச உறவுகள் பற்றிய கோட்பாடுகளை மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்துக் கூறலாம்.

1. இயல்புவாதம் (ரியலிசம்)
2. பன்மைவாதம் (புளூரலிசம்)
3. அமைப்பியல்வாதம் (ஸ்றக்சுரலிசம்)

இவற்றுள் இயல்புவாதம் என்ற கோட்பாட்டை விளக்கி, அதனை ஏனைய இரு கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்தும் முறையிலான கட்டுரையொன்றை முன்னர் எழுதியிருந்தேன். (சமகாலம் ஜூன், 2013 16-30) பன்மைவாதம் என்றால் என்ன என்பது பற்றியும், அதன் தோற்ற வரலாறு, அடிப்படை அனுமானங்கள், ஏனைய இரு கோட்பாடுகளுடன் எவ்வகையில் அது வேறுபடுகின்றது என்பன குறித்தும் இக் கட்டுரையில் சுருக்கமாக எடுத்துக் கூறவுள்ளேன்.

நாடுகளுக்கு உள்ளேயான அரசியல் தொடர்பான அரசியல் கோட்பாடாகிய அரசியல் பன்மைவாதம் (Political Pluralism) என்பதனுடன் பன்மை வாதம் என்ற சர்வதேச உறவுகள் கோட்பாடு தொடர்புடையது. அரசியல் அதிகாரம் அல்லது இறைமை சமூகத்தில் பரவலாக்கப் பட்டிருத்தல் வேண்டும் ஓரிடத்தில் அல்லது ஒரு சிறுகுழுவிடம் அதிகாரம் குவிந்திருக்கக்கூடாது என்ற கருத்துடையவர்கள் பன்மைவாதிகளாவர். இவர்கள் அரசாங்கத்தின் ஒரு அங்கத்திடம் அதிகாரம் குவிந்திருக்கக்கூடாது, நீதித்துறை சுதந்திரமாக இயங்க வேண்டும், பிரதேச ரீதியாக அரசியல் அதிகாரம் பகிரப்படல் வேண்டும். பன்மைப் பண்பாடுகளை ஊக்கம் கொடுத்து வளர்க்க வேண்டும். ஆகிய லிபரல் - ஜனநாயகக் கருத்துகளையும் ஆதரிப்போராவர். சர்வதேச உறவுகள் பற்றிய பன்மைவாதமும் அரசுச் செயலிகள் மட்டுமே சர்வதேச உறவுகளில் பிரதான பங்கு பெறுகின்றன என்பதற்கு மாறாக அரசு அல்லாத செயலிகளின் (Non State actors) வகிபாகத்திற்கு அழுத்தம் கொடுக்கிறது. சர்வதேச உறவுகளில் அதிகாரம் பரவலாக்கப் படுவதால் நன்மை உண்டாகிறது. ஐ.நா. சபை, அதன் துணை உறுப்புகள் போன்ற அரசு அல்லாத செயலிகள் சர்வதேச உறவுகளில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதும் பன்மைவாதிகளின் கருத்தாகும்.

### வரலாறு

கோட்பாடுகளின் தோற்ற வரலாற்றை நுனிந்து நோக்கும்பொழுது இரு முக்கிய வரலாற்றுப் போக்குகளை அவதானிக்கலாம்.

1. குறித்தவொரு கோட்பாடு அதனோடு போட்டியிடும் இன்னொரு கோட்பாட்டிற்கு எதிரானதாக தன் அடிப்படை அனுமானங்களையும் முடிவுகளையும் முன்வைக்கும்.
2. புதிதாகத் தோற்றம் பெறும் கோட்பாடொன்று அதற்கு முன்னர் செல்வாக்குடன் இருந்த ஒரு கோட்பாட்டில் இருந்து ஒரு கிளையாகப் பிரிந்து தனிக்கோட்பாடாக வளர்ச்சிபெறும்.

சர்வதேச உறவுகள் என்னும் கல்வித்துறையின் கோட்பாடுகளின் வளர்ச்சியிலும் இவ்விரு போக்குகளையும் அவதானிக்கலாம். பன்மைவாதம், இயல்புவாதம் என்ற கோட்பாட்டின் மறுதலிப்பாகவும், எதிர்ப்பாகவும் எழுச்சி பெற்றது. இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் கெடுபிடி யுத்த காலத்தில் இயல்புவாதம் என்னும் கொள்கை மேலாதிக்கம் பெற்றிருந்தது. இயல்புவாதம் அரசுகள் என்ற செயலிகளின் முதன்மையையும், பாதுகாப்பு, தேசநலன் என்பனவற்றையும் வலியுறுத்தும் அரசுமையக் (State centric) கோட்பாடாகும். 1970களில் இயல்புவாதத்திற்கு அறைகூவல்விடுக்கும் முறையிலான முக்கிய நிகழ்வுப் போக்குகள் சர்வதேச அரங்கில் தோற்றம் பெற்றன.

1. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் 1960களிலும் 1970களிலும் புதிய நாடுகள் பல தோற்றம் பெற்றன. மூன்றாம் உலகம் என்ற கருத்து மேற்கிளம்பியது. அணிசேரா நாடுகளின் இயக்கம் தோன்றியது. சில வல்லரசுகளின் கையில் குவிந்திருந்த அதிகாரம் பல மையங்களில் பிரிந்திருப்பதை இந்நிகழ்வுகள் நிரூபித்தன.
2. அரசியல் மட்டத்தில் ஏற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேற்குறித்த மாற்றங்களை விட உலகப் பொருளாதார அமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டது. 1973 ஆம் ஆண்டில் பெற்றோலியம் உற்பத்தி நாடுகளின் 'ஒ பெக்' (OPEC) அமைப்பின் தோற்றம் சடுதியாக எண்ணெய் நெருக்கடி (Oil Crisis) என்ற பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்தது.

3. MNCS எனப்படும் பல்தேசியக் கம்பனிகளின் உலகு தழுவிய நடவடிக்கைகள் அதிகரித்தன. அரசு சார்பற்ற உலக நிறுவனங்களும் (INGO) அதிகரித்தன. பல அமுக்கக்குழுக்களும் சர்வதேச அரங்கில் செயற்பட்டன.

## பரஸ்பரத் தங்கியிருத்தல்

மேற்குறித்த போக்குகள் சர்வதேச உறவுகளில் பரஸ்பரத் தங்கியிருத்தலை அதிகரித்தன. பன்மைவாதிகள் இதனைச் சிக்கலான பரஸ்பரத் தங்கியிருந்தல் (complex-Interdependence) என்று வியாக்கியானம் செய்தனர். நாடுகள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றன; அத்தங்கியிருத்தல் சிக்கலான தன்மையுடையன என்று கூறுவதன் மூலம் மூன்று அம்சங்களிற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

1. பல்வழித் தொடர்புகள்; நாடுகளிற்கிடையிலான தொடர்புகள் இயல்புவாதம் கூறுவது போன்று பாதுகாப்பு,தேசியநலன்என்பனவற்றை மையமாகக் கொண்ட ஒரு வழித் தொடர்பு அல்ல; இத்தொடர்புகளை அரசுகளிற்கு இடையிலான தொடர்புகளாக மட்டும் பார்க்காது பல்வழித் தொடர்புகளாகவும் பார்க்க முடியும்.
2. பிரச்சினைகளில் படித்தர ஒழுங்கு (Hierarchy) கிடையாது. பாதுகாப்புத்தான் முதலாவது விடயம். அதற்கு அடுத்த நிலையிலோ அல்லது மூன்றாம் நிலையிலோ தான் வர்த்தகம் இடம்பிடிக்கிறது என்றவாறாக பிரச்சினைகளை முதல் தரப்பிரச்சினைகள், இரண்டாம்தர முக்கியமானவை, முக்கியமற்றவை என்ற படித்தர ஒழுங்குப்படி பிரித்துப் பார்க்க முடியாது. ஒரு நாட்டின் சர்வதேச உறவுகளின் நிகழ்ச்சிநிரலில் பாதுகாப்பு எப்போதும் முதலாவது விடயமாக இருக்கிறது என்ற இயல்புவாத அனுமானம் இதனால் அடிபட்டுப் போகிறது.
3. சர்வதேச உறவுகளில் இராணுவப் பலத்தின் முக்கியத்துவம் குறைவு. ஒரு நாட்டின் இராணுவப் பலம் தான் அதன் அயல் உறவுகளின் தீர்மானக் காரணி அல்ல.

சிக்கலான பரஸ்பரத் தங்கியிருத்தல் என்ற எண்ணக்கரு பன்மைவாதக் கோட்பாட்டை விளங்கிக் கொள்வதற்குத் துணை செய்கிறது.

இயல்புவாதம் சர்வதேச உறவுகளில் முரண்பாடுகளிற்கு அழுத்தம் கொடுத்தது. இதனால் அதனை முரண்பாட்டு மாதிரி (CONFLICT MODEL) கோட்பாடு என்பர். பன்மைவாதம் முரண்பாட்டிற்குப் பதிலாக சர்வதேச உறவுகளில் கூட்டுறவு காணப்படுவதாக வலியுறுத்தும் கூட்டுறவு மாதிரிக் கோட்பாடாகும். கூட்டுறவு மாதிரி பாதுகாப்பில் இருந்து வேறுபல விடயங்களை நோக்கி நாடுகளின் கவனத்தைத் திருப்புகிறது. குடிவரவு, குடியகல்வு, அகதிகள் பிரச்சினை, வர்த்தகம், முதலீடு, போக்குவரத்து, மக்கள் தொகைப் பெருக்கம், சூழல் மாசடைதல், அணு சக்தி உபயோகம்,விண்வெளி ஆராய்ச்சி ஆகிய பல விடயங்களில் கூட்டுறவு முக்கியம் பெறுகிறது. ஆதலால் முரண்பாடுகள் அல்ல கூட்டுறவு தான் சர்வதேச உறவுகளின் பிரதான அம்சம் என்று பன்மைவாதிகள் கூறுவர்.

I. பன்மைவாதத்தின் அடிப்படை அனுமானங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். ஐ. அரசு அல்லாத செயலிகள் சர்வதேச உறவுகளில் முக்கிய வகிபாகத்தைப் பெறுகின்றன.

II. இராணுவம், பாதுகாப்பு என்ற வட்டத்திற்குள் அமையாத பிரச்சினைகள் சர்வதேச உறவுகளில் முக்கியம் பெற்றுள்ளன.

III. பரஸ்பரத் தங்கியிருத்தல் அதிகரித்துச் செல்கிறது.

IV. போரை ஆரம்பித்தல், இராணுவ நடவடிக்கையைத் தொடக்குதல் என்பதையே முதன்மைத் தெரிவாகக் கொண்டு நாடுகள் செயற்படுவதில்லை. போர்க்குணம்மிக்க நாடுகள் பற்றிய பீதி அடிக்கடி உலக நாடுகளிடை பதற்ற நிலையை உருவாக்குவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் போரை முதன்மைத் தெரிவாகக் கொள்ளும் நிலை வருவதில்லை.

அடுத்து அமைப்பியல் வாதத்திற்கும் பன்மைவாதத்திற்கும் இடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் நோக்குவோம்.

பன்மைவாதம் சர்வதேச அரங்கில் பல செயலிகள் செயற்படுவதை ஏற்றுக்கொள்வதைப் போன்றே அமைப்பியல்வாதிகளும் பல செயலிகள் உள்ளன என்று கூறுவர். அரசு அல்லாத செயலிகளின் செயற்பாட்டை அமைப்பியல் வாதிகள் முக்கியப்படுத்துவர். இரண்டாவதாக சர்வதேச உறவுகளின் பிரச்சினைகள் ஒன்றோடொன்று தொடர்புபட்டவை. அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், பாதுகாப்பு என்ற விடயங்கள் ஒவ்வொன்றும் பிற ஒவ்வொன்றுடனும் தொடர்புடையன என்ற கருத்தும் இருவகைக் கோட்பாடுகளுக்கும் பொதுவான அம்சமாகும். ஆயினும் இவை மேலோட்டமான பார்வையில் தெரியும் ஒற்றுமைகளாகும். அமைப்பியல்வாதம் அரசுகள், பல்தேசியக் கம்பனிகள், முக்கிய தனி நபர்கள், அரசு அல்லாத பிற செயலிகள் ஆகியவற்றை முழுமையான அமைப்பு ஒன்றின் பகுதிகளாகவே பார்க்கின்றது. அமைப்பியல் நோக்கில் பல செயலிகள் செயற்படுகின்றார்கள் என்பதைவிட உறவுகளின் அமைப்பு (Structure of relations) என்பதே முக்கியமானது. பகுதிகள் அல்லது அங்கங்கள் முக்கியமில்லை; பகுதிகளுக்கும் முழுமைக்கும் இடையிலான உறவுக் கட்டமைப்புத்தான் முக்கியம். அடுத்ததாக அமைப்பியல்வாதம் அரசியலையும் பொருளாதாரத்தையும் இணைத்தே பார்க்கின்றது. சர்வதேச அரசியல் பொருளாதாரம் (International political economy) என்ற பொருளியல் நோக்குமுறை அமைப்பியல் வாதத்தின் அடிப்படையிலானது. பன்மைவாதம், சர்வதேச பொருளாதாரம் என்றும் சர்வதேச அரசியல் என்றும் ஒன்றை மற்றொன்றில் இருந்து தனிமைப்படுத்திப் பார்க்கின்றது.



கோளமயப்பட்ட முதலாளித்துவ ஒழுங்கு ஒன்று உள்ளது. இதை நிர்வகித்தல், முகாமைத்துவம் செய்தல் என்பதே அரசுகளும், சர்வதேச நிறுவனங்களும் ஆற்றும் பணி. ஆகவே சர்வதேச உறவுகள் என்பது கோளமய முதலாளித்துவ ஒழுங்கின் முகாமைத்துவம் பற்றியதாகும் என்று அமைப்பியல் வாதிகள் கூறுவர்.

கோட்பாடுகள் புதிதாகத் தோற்றம் பெறும் போது அவை முன்னைய கோட்பாடு ஒன்றில் இருந்து கிளைவிட்டுப் பிரிகின்றன என இக்கட்டுரையின் முற்பகுதியில் கூறினோம். 1970களில் தோன்றிய பன்மைவாதம் எக்கோட்பாட்டில் இருந்து கிளை பிரிந்தது? இக்கேள்விக்குரிய விடை எமக்குப் பன்மைவாதத்தின் மூலக்கருத்துகளை அறிந்துகொள்ள உதவுகிறது. பன்மைவாதம் இரு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் இருந்த லிபரலிசம் (Liberalism) என்ற சர்வதேச உறவுகள் கோட்பாட்டில் இருந்து கிளைவிட்டது. லிபரலிசம் என்ற சொல் முற்போக்கு வாதம் என்ற பொருள் உடையது. தமிழில் முற்போக்குவாதம் என்ற சொல் ஒரு இலக்கிய இயக்கத்தைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்பட்டுப் பெருவழக்கில் உள்ள சொல்லாக உள்ளது. ஆதலால் லிபரலிசம் என்பதை முற்போக்குவாதம் என்று கூறினால் கருத்துக் குழப்பமே உண்டாகும். ஆங்கிலச் சொல்லான லிபரலிசம் என்பதையே இங்கு உபயோகிப்போம். முதலாம் உலக யுத்தத்தின் முடிவில் லீக் ஒவ் நேஷன்ஸ் எனப்படும் சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டது. இது ஐ.நா.சபையின் முன்னோடியான அமைப்பாகும். முதலாம் உலக யுத்தத்தின் போர் அழிவுகளால் அதிர்ச்சியுற்றிருந்த அறிவாளிகள் மத்தியில் லிபரல்கள் முன்வைத்த இலட்சியவாதக் கருத்துகள் செல்வாக்குப் பெற்றன. சர்வதேச உறவுகளில் நிலவும் அராஜகத்தைப் போக்கலாம், யுத்தத்தைத் தடுக்கலாம், சமாதானத்தைக் கொண்டுவரலாம் என்ற நம்பிக்கை வலுப்பெற்றது.

### சர்வதேச உறவுகளில் சட்டத்தின் ஆட்சி ஜனநாயகம்

சமாதான வழிகளில் பிணக்குகளைத் தீர்த்தல் ஆகிய இலட்சிய நோக்கு லிபரலிசக் கோட்பாட்டில் வெளிப்பட்டது. யதார்த்த நிலைமையை உள்ளது உள்ளபடி பார்க்க வேண்டும். நாடுகள் என்ன செய்கின்றன என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர அவை என்ன விடயங்களைச் செய்தால் நல்லது என்று சிந்திப்பது வெறும் கற்பனாவாதம் என்று இயல்புவாதிகள் (Realists) லிபரல்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். இயல்புவாதத்தின் மூலவரான ஈ.எச்.கார் 1939இல் லிபரலிசத்தை லிபரல் உட்டோப்பியா (கற்பனா வாதம்) என்று வருணித்தார். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் லிபரலிசம் செல்வாக்கிழந்தது. 1970களில் தோன்றிய பன்மைவாதம் லிபரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளை உள்வாங்கிக் கொண்ட புதிய தத்துவமாகும்.

இன்றைய சர்வதேச சூழ்நிலையில் இயல்புவாதம் இராணுவ மயமாக்கல், முரண்டுபிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கை, நாட்டின் இனவாதம் ஆகிய போக்குகளை வெளிப்படுத்தும் தத்துவ நோக்காக உள்ளது. இயல்புவாதத்திற்கு எதிர்ப்பான கொள்கையுடையவர்களான பன்மைவாதிகளும், அமைப்பியல்வாதிகளும் சில பொதுவான கொள்கைத் திட்டங்களின் அடிப்படையில் ஒன்றிணைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறான கருத்து ஒற்றுமை சர்வதேச மட்டத்தில் அமார்த்தியசென், மண்டேலா, டெஸ்மன்ட் டுட்டு ஆகிய அறிஞர்கள், தலைவர்கள் ஊடாக வெளிப்படுகின்றன. நாடுகளுக்கு உள்ளே பொதுக்களத்தில் (Public Sphere) நடைபெறும் விவாதங்களிலும் இத்தகைய கருத்து உடன்பாடு தோன்றுவதை அவதானிக்கலாம். பின்வரும் அடிப்படை விடயங்களில் பன்மைவாதிகள் (லிபரல்கள்) அமைப்பியல் வாதிகளுடன் (மார்க்சிஸ்ட்கள்) கருத்து ஒற்றுமையுடையவர்களாய் உள்ளனர் என்று கூறலாம்.

1. சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமைகளை மதித்தல்
2. அதிகாரப் பரவலாக்கம்
3. யாப்பியல் மறுசீரமைப்பு மூலம் ஜனநாயகம் மலர்ச்சியடைவதற்கான புதிய ஒழுங்கினை ஏற்படுத்தல்.
4. சட்டத்தின் ஆட்சி

இவை உள்ளக அரசியல் சார்ந்த விடயங்கள் என்பது வெளிப்படை. உள்ளக அரசியலிலும், வெளிநாட்டு உறவுகளும் தொடர்புடையவை என்பது பன்மைவாதிகள் கருத்து. பில்லியாட்ஸ் மேசையில் உள்ள பந்துகள் போன்றவை உலக அரங்கில் செயற்படும் அரசுகள் என்று கூறும் இயல்புவாதம் பந்துகளின் ஓரங்களில் நிகழும் மோதல்கள் போன்றவை தான் வெளியுறவுகள். அவற்றுக்கும் உள்நாட்டு அரசியல், பொருளாதார விடயங்களுக்கும் நேரடி சம்பந்தம் இல்லை என்று கூறும். இதனால் பில்லியாட்ஸ் பந்துகள் மாதிரி என்று இயல்புவாதம் அழைக்கப்படும்.

கோட்பாடுகளை உலகப்பார்வைகள் என்றும் கூறலாம். ஒருவர் வகுத்துக் கொள்ளும் உலகப்பார்வைக்கும் (கோட்பாடு) நடைமுறைக்கும் சம்பந்தம் உள்ளதல்லவா? ஆதலால் கோட்பாடுகள் படிப்பதற்கும், பகுப்பாய்விற்கும், விவாதத்திற்கும் உரிய சுவாரஸ்யமான விடயங்களாகும். ■

---

*(43ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

நிர்மூலம் செய்யப்படக்கூடிய தாக்குதலு க்கு உள்ளாகும் ஆபத்து நேருமென் பதால் இரசாயன ஆயுதங்களை இழப்பது குறித்து அசாத் கவலைப்படாமலிருக்கக் கூடும். சிரியாவில் இரசாயன ஆயுதங்களை இல்லாமற் செய்வதற்கான இராஜதந்திர முன்முயற்சி பயனளிக்குமேயானால், அதற்கான பெருமையின் பெரும் பகுதி புட்டினுக்கே போகும் என்று அமெரிக்க பொதுமக்களும் ஊடகங்களும் நினைப்பார்கள். ஆனால், உண்மைநிலை கூடுதலான அளவுக்குச் சிக்கலானது.

மிகவும் சாத்தியமாகக் கூடிய குறுகியகால விளைவு என்னவாக இருக்கப் போகிறது? அசாத்தின் இரசாயன ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படும். ஆனால், அவரின் இராணுவம் அடித்து நொருக்கப்படப் போவதில்லை. தற்போதைக்கு அவரின் ஆட்சியும் தப்பிப்பிழைக்க அனுமதிக்கப்படும். இது அசாத்தினதும் புட்டினினதும் நலன்களுக்கு உகந்ததாக இருக்கும். அதேவேளை, படைபலத்தை பிரயோகிக்கப் போவதாக தான் விடுத்த அச்சுறுத்தலே அசாத்தை அடிபணிய வைத்த சாதனையைச் செய்தது என்று அமெரிக்கா பெருமையுடன் உரிமை கோரிக்கொள்ளும். எவ்வாறெனினும் அடுத்த கட்டத்தில், அசாத்தின் ஆட்சியைத் தூக்கியெறியும் நோக்குடன் அமெரிக்கா சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்கி உற்சாகமளிக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இது வெற்றியளிக்கும் என்பதே எனது ஊகம். ஆனால், நான் உட்பட பெரும்பாலான அவதானிகள் முன்னர் எதிர்பார்த்தது போலன்றி இதற்கு நீண்டகாலமெடுக்கும்.

அதேவேளை, சிரிய இராணுவத்தையோ அல்லது சிரிய நிருவாகத்தையோ முற்றுமுழுதாக நிர்மூலம் செய்ய அமெரிக்கா விரும்பவில்லை. (ஈராக்கிலும் லிபியாவிலும் நிலவும் குழப்பகரமான நிலையைப் பாருங்கள்) அல்-கயெடா அல்லது வேறு அமெரிக்க விரோத தீவிரவாதிகள் சிரியாவை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிடுவர் என்பதே அதற்குக் காரணமாகும். ■

---

*(30ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

உச் சத்தை எட்டியுள்ளது. வன்னியர்கள் ஓட்டும் ஆட்டோக்களில் வன்னியர் சங்க அக்கினிச் சட்டி அடையாளங்கள் பெரிதாய்க் காட்சியளிக்கின்றன.

இந்த நிலையில் ராமதாஸ் பேசுகிற ஒட்டு மொத்தத் தமிழர் அரசியலுக்கு என்ன பொருள். அவர் யாரை ஏமாற்றப்பார்க்கிறார்? வன்னியர்களையா? மற்றவர்களையா? நிச்சயம் வன்னியர்களாக இருக்க இயலாது.

சாதிகளாகப் பிளவுண்ட இந்நாடு தன்னைத் தேசம் என அழைத்துக் கொள்ள அருகதை இல்லை என அம்பேத்கர் சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது.

மருத்துவர் தன்னை இப்போது சமூகப் பொறியாளர் எனச் சொல்லிக் கொள்கிறார். ஆனால், அவர் எப்போதுமே சாதிவாதத்தையும் இனவாதத்தையும் இணைக்கும் வெல்டர் ஆகத்தான் இருந்துள்ளார். ஆனால், இது ரொம்பப் பலவீனமான வெல்டிங். இந்த வெல்டிங் மூலம் கட்டப்பட்ட கப்பலில் ஏறுபவர்கள் நிச்சயம் கரை சேர மாட்டார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அரசு சர்வாதிகாரத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது என்பதை 1990களிலேயே தெளிவாக அடையாளம் கண்டு எச்சரிக்கை செய்தவர் சுனிலா

மதுசூதனன்

# சுனிலா அபேசேகர

## (1952 - 2013)

இலங்கைச் சூழலிலும் சர்வதேசப் பரப்பிலும் மனித உரிமைகள் செயற்பாட்டாளராக நன்கு அறியப்பட்டவர் சுனிலா அபேசேகர. இவர் இம்மாதம் 9ஆம் திகதி கொழும்பில் கால மானார். சுனிலா வன்முறைகளுக்கும் வன்முறையற்ற வழிமுறைகளுக்கும் அப்பால் இயங்குவதற்கான தெளிவைத் தேர்வு செய்தவர். இதனால் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் கொலை மிரட்டல்களுக்கும் உள்ளாகியிருந்தவர். நிலவும் ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் அடிப்படை மனித உரிமைகளுக்காக தொடர்ந்து போராடியவர்.

மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நீடித்திருந்த யுத்த காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தையும் இழப்புகளையும் (குறிப்பாக, பெண்கள், சிறுவர்கள் தொடர்பில்) வெளிக்கொணர்வதில் முன்னின்று செயல்பட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களில் சுனிலா முன்னணியில் திகழ்ந்தவர். இனங்களுக்கு இடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (மேர்ஜ்) தலைவரும் அரச கரும மொழி திணைக்களத்தின் தலைவருமாக விளங்கிய சாள்ஸ் அபேசேகரா சுனிலாவின் தந்தை.

சாள்ஸ் மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர் என்ற வகையில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம், இன்போம், மனித உரிமைகள் பணிக்குழு ஆகிய அமைப்புகளில் முக்கிய பங்காற்றினார். இந்தப் பணிகளில் சுனிலாவும் தந்தையார் உள்ளிட்ட ஏனைய மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றி வந்தார். இதுவே இவருக்கான பயிற்சிக்களமாகவும் அமைந்திருந்தது.

சுனிலா அபேசேகராவின் மறைவை முன்னிட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இயங்கும் பல்வேறு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் இரங்கல் செய்திகளை விடுத்திருந்தனர். நலிந்த வர்க்கத்தினரின் அடிப்படை உரிமைகளுக்காக எப்போதும் குரல் கொடுத்துப் போராடிக்கொண்டிருந்தவர் சுனிலா. 1980களுக்குப் பின்னர் இலங்கைச் சூழலில் மனித உரிமை விவகாரம் தொடர்பில் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய, இயக்க ரீதியில் செயல்பட வேண்டிய தேவை படிப்படியாக எழுச்சிபெற்று வந்தது. இதன் விளைவாகவும் சுனிலா மேலெழுந்து வந்தார். 1990களில் சுனிலா வெளிப்படுத்திய சில கருத்துகளை இங்கு மீட்டுப்பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

இலங்கை போன்ற நாடுகளில் வன்முறை உயர்ந்தபட்சம் வளர்ந்துள்ளது. மூத்தவர்கள் இளையவர்களை அடிக்கின்றனர், கணவன் மனைவியை அடிக்கின்றான், ஆசிரியர்கள் மாணவருக்கு அடிக்கிறார்கள், பாதையில் போகின்றவர்கள் இன்னொருவரை அடிக்கின்றனர். இப்படி வன்முறை என்பது சகல மட்டத்திலும் வியாபித்துள்ளது. இவ்வகையான வன்முறைகள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி விரும்பியதை அடைய முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துவிட்டுள்ளது. சாதாரண சமூகத்தைச்சேர்ந்த ஒருவரால் இப்படியானவை மேற்கொள்ளப்பட்டால் அது நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவனைத் தண்டிக்க சிவில் சட்டங்கள் இருக்கின்றன.

ஆனால், இவற்றை சீருடை அணிந்த படையினர் செய்தால் அதனை நிரூபிப்பதற்கு வாய்ப்புகள் கிடைக்காது. அவ்வாறு நிரூபிக்கப்பட்டாலும் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் கிடையாது. அவர்களின் தொழிலின்படி, சீருடையின்படி அவர்கள் குற்றம் புரிவதற்கான அங்கீகாரம் கிடைத்து விடுகின்றது. இதனை தனது கடமையில் ஒரு பகுதியாகக் கொள்கின்றனர்.

கடந்த 1987 - 1989 காலப்பகுதிகளில் மனித உரிமைகளை மீறுவதற்கும் உரிமைகளை நாசம் செய்வதற்கும் மக்களின் மீதான வன்முறைகளை மேற்கொள்வதற்கும் புதுமையான விதத்தில் படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காலப்பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல் போவதற்குக் காரணமாக இருந்தவர்களின் பெயர்கள் அவற்றை விசாரித்த ஆணைக்குழுக்களுக்கு தெரிவிக்கப்பட்டது அல்லவா? ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுப் பரவல்



பொலிஸ்படை போன்றவற்றைச் சேர்ந்த அந்த அதிகாரிகளுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் இது குறித்து விசாரித்தபோது யுத்தம் ஒன்று நிலவுகின்றபோது படையினர் மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் இராணுவத்தினரின் உளநிலை பாதிக்கும் என்றனர். இந்தக் காரணம் குறித்து நாம் கவனமாக பரிசீலிக்க வேண்டும்.

இன்று மக்கள் மத்தியில் இந்தளவு வன்முறைகள் வளர்வதற்கு நாடு இராணுவமயமாகி இருப்பது ஒரு முக்கிய காரணம். இவ்வாறு ஆயுதங்களைப் பாவித்து மக்களை அடக்கலாம், மக்களின் குரலை நசுக்கலாம் என்ற நம்பிக்கை பொதுவாக நிலவுகின்றது. சமூகத்தில் அதிகாரமற்ற குழுவினர்தான் அதிகம் பாதிப்பிற்குள்ளாகின்றனர். சிறுபான்மை இனக் குழுமங்கள், ஒடுக்கப்பட்ட சாதியினர், பெண்கள், சிறுவர்கள், ஏழைகள், அங்கவீனர்கள் என சாதாரண அப்பாவிகள் இங்கு பலியாகின்றனர். அதிகாரம் உள்ளவர்கள் அல்லது பலம்படைத்தவர்கள் இவர்களை இலகுவாக ஒடுக்கி தமது அதிகாரத்தை-நலன்களை நிலைநாட்டி விட முடிகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இலங்கையில் யுத்தம் நிலவுகின்றது. இந்த யுத்தத்தில் பலமுடையவர்களாக ஆயுதம் தாங்கியவர்கள் உள்ளார்கள். அவர்கள் புரிகின்ற குற்றங்களைத் தடுக்கக்கூடிய அளவிற்கு சட்டம் பலமானதாக இல்லை. அவர்களின் துப்பாக்கி முன்னால் சட்டம் வலுவிழந்துவிடுகின்றது. ஆயுதமேந்திய ஒடுக்குமுறையாளர்களாக ஆண்கள் உள்ளனர். அதிகாரமற்ற தரப்பினராக பெண்கள் உள்ளனர். எனவே, அதிகாரம் இல்லாத தரப்பினர் ஒடுக்குமுறையில் இருந்து தப்பிக்க தங்களிடம் துப்பாக்கி இல்லாததன் காரணமாக இலகுவாக பலியாகிவிடுகின்றார்கள்.

கடந்த காலங்களில் இப்படிப்பட்ட வன்முறைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் உண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்காலக் குற்றங்களுக்கு எதிரான சட்டவிதிகளைக் கொண்டுவருவதற்கு போராடியிருக்க வேண்டும். ஆயுதப் போராட்டம் இடம்பெறுகின்ற நாடுகளில் அரசு என்கிற ரீதியில் அதற்கு இருக்க வேண்டிய பொறுப்பு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வலியுறுத்துகிறது. அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால், போரை நடத்தும் அரசாங்கம் போர்க்குற்றவாளிகளாக இருக்கும் முக்கிய அதிகாரிகளை நீதிமன்றத்தில் நிறுத்த முடியும்.

இன்று குறிப்பிட்ட ஒரு இனத்தை அவமானப்படுத்த வேண்டுமெனில், அவ்வினத்தைச் சேர்ந்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினால் அது சாத்தியமாகும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. ஒரு ஆணின் மீது காறி உமிழ்வதற்குச் சமமான ஒரு அவமானத்தை ஏற்படுத்த வேண்டுமெனில், அவனது சகோதரியையோ, தாயையோ, மனைவியையோ, மகளையோ வல்லுறவு புரிந்தால் போதுமானது. இன்றும் ஆண்கள் மத்தியில் நடக்கின்ற சண்டைகளின் போது நாம் பார்க்கிறோம் அல்லவா? உனது தங்கையைத்தூக்குவேன், அக்காவை தூக்குவேன் என்று கூறப்படுகிறது அல் லவா? ஒரு ஆணின் ஆண்மைக்கு சவாலிட வேண்டுமாக இருந்தால் அவனுக்கு நெருங்கிய பெண்ணை வல்லுறவுக்குள்ளாக்கினால் முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அதிகாரம் இல்லாமல் இருக்கின்ற பெண்கள், அதிகாரத்தை அடையாமல் இருக்கின்ற பெண்களின் மீது மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளிலேயே உச்ச வடிவம் தான் பாலியல் வல்லுறவு. சமூகத்தில் நிலவுகின்ற பாலியல் வன்முறையென்பது பல்வேறு வடிவங்களிலும் இருக்கின்றது. ஒரு ஆண் பிள்ளையைப் போலல்லாது பெண்ணானவள் பிறந்தவுடனேயே அவளது நடத்தை, அவளது கல்வி, அவளது அறிவியல் எல்லாமே மட்டுப்படுத்தப்படுகிறது. தொடர்ச்சியாக கண்காணிப்புக்குள்ளாகிறாள். சமூகப் பழக்கவழக்கங்கள், மரபுகள் பெண்களுக்கு துணைசெய்கின்றன. எனவே, வன்முறையென்பதை நாம் பரந்த அர்த்தத்தில் காண வேண்டும். அப்போது தான் அதன் ஊடுருவல்களையும் வியாபகத்தையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலுறவு என்பது ஒரு நெருங்கிய அன்புப் பரிமாறலுக்குரிய சந்தர்ப்பம். அந்த கிட்டிய சந்தர்ப்பத்தை அல்லவா வன்முறைக்குள்ளாக்குகின்றனர். இந்த வகையான சம்பவங்கள் வாழ்நாள் முழுவதும் பெண்கள் ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் போதெல்லாம் அந்த நினைவுகள் வந்து அச்சம் கொள்ளச்செய்யும். இவ்வாறாக போரின் கருவியாக பாலியல் வல்லுறவு எப்படி பயன்படுத்தப்பட்டதென்பதைத் தெளிவாக எடுத்துரைத்து வந்தார் சுனிலா. சர்வதேச குற்றவியல் நீதிமன்ற ஒப்பந்தத்தில் இலங்கை ஏன் இன்னமும் கையெழுத்திடவில்லை என்ற கேள்வியை சுனிலா அப்போதே எழுப்பியிருக்கிறார்.

சுனிலா குறிப்பிட்டவாறு இலங்கையில் இராணுவ மயமாக்கல் இன்று பல்பரிமாணமிக்கதாக வளர்ச்சியடைந்துள்ளது. இலங்கை அரசு சர்வாதிகாரத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. இதனை சுனிலா 1990களின் கடைசியிலேயே அடையாளம் கண்டு எச்சரிக்கை செய்திருந்தார். அந்த வகையில் அறிவும், துணிச்சலும், ஆற்றலும் நிறைந்திருந்த இவரது இழப்பு மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பேரிழப்பாகும்.

'வன்முறையை ஒரு அரசியல் வழிமுறையாகக் கைக்கொள்ளுதல், சிவில் உரிமை இயக்கங்கள் சுயாதீனமாக இயங்க வேண்டியதன் அவசியம் ஆகியன' குறித்த சுனிலாவின் கருத்துகள் அற அடிப்படையில் இருந்து மட்டும் உருவாகவில்லை. சர்வதேச அனுபவங்கள், நடைமுறைப் படிப்பினைகள் முதலானவற்றில் இருந்தும் மக்கள் இயக்கங்கள் ஆற்றலுடன் தமது குறிக்கோள்களை சாதிக்கத்தக்கவையாக இருக்க வேண்டும் என்கிற தீராத அவாவில் இருந்தும் அவை தோற்றம் கொண்டுள்ளன. இலங்கையில் சாத்தியமான மக்கள் போராட்டங்கள் எந்தப் பெரிய வெற்றிகளையும் பெற இயலாமல் போவது குறித்த கரிசனத்தின் விளைவாகவும் . உருப்பெற்றுள்ளன. வன்முறை, அமைதிவழி என்கிற இருமை எதிர்வையே கடந்துசெல்வதற்கான தெரிவுகளையும் வலியுறுத்தியுள்ளார். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப் பரவல்




ஆதிசேனன்

ஆப்கான் வாழ்க்கையில் தலிபான்களால் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள், துயரங்கள், வலிகள் குறித்த தனது பிரக்ஞையை பல தருணங்களில் எழுத்தாகப் பதிவு செய்தார் சுஷ்மிதா. அவர் எழுதிய பல விடயங்கள் தலிபான்களுக்கு உவப்பில்லாதவை. அதனால் அவர் இந்தியா திரும்ப நேரிட்டது. மீண்டும் ஆப்கான் திரும்ப முடிவு செய்தது அவரது தைரியத்தைக் காட்டினாலும் புத்திசாலித்தனமானதல்ல.

# தலிபான்களின் குண்டுகளுக்குப் பலியான இந்திய எழுத்தாளர்

# சுஷ்மிதா பானர்ஜி

ஆப்கானிஸ்தானில் வசித்த இந்தியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் சுஷ்மிதா பானர்ஜி இம்மாதம் 4ஆம் திகதி தலிபான் மதவெறிக் கும்பல்களால் படுகொலை செய்யப்பட்டார். இவர் இந்தியாவில் கொல்கத்தாவைச் சேர்ந்தவர். ஆப்கானைச் சேர்ந்த ஜோன் பஸ்கான் என்னும் தொழிலதிபரைக் காதலித்து 1989இல் திருமணம் செய்து கொண்டார்.

ஆப்கானிஸ்தானில் தனது கணவருடன் குடியேறிய சுஷ்மிதாவுக்கு அங்கு சென்ற பிறகுதான் ஜோன் பஸ்கான் ஏற்கனவே திருமணமானவரென்பது தெரியவந்தது. மருத்துவரான சுஷ்மிதா அந்தக்கிராம மக்கள் நன்மைபெறும் வகையில் தனது வீட்டிலேயே சிறிய மருத்துவமனை ஒன்றை ஆரம்பித்து நடத்திவந்தார். 1993 இல் தலிபான்கள் வரும்வரை இவருக்கு வாழ்க்கை பிரச்சினைகள் ஏதுமில்லாமல் போய்க்கொண்டிருந்தது.

1998இல் தலிபான்களுடனான தனது அனுபவங்கள் குறித்து அவுட்லுக் பத்திரிகைக்கு விரிவான நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார். 'அதில் நான் குடியிருந்த கிராமத்தில் மருத்துவ வசதிகளோ அல்லது மருந்துகளோ இல்லை. ஆகவே, நான் என் வீட்டில் சிறியளவில் மருந்தகம் நடத்தி வந்தேன். இது அங்குள்ளவர்களுக்கு பயனுள்ளதாக இருந்தது.

நான் தகுதியான மருத்துவர் இல்லை. ஆனால், மருத்துவ வசதியில்லாத அந்தக் கிராமத்தில் சில மாத்திரைகளின் தன்மை குறித்த அறிவு எனக்கிருந்தது. அதன்மூலம் அக்கம் பக்கத்தினருக்கு மருத்துவம் செய்தேன். நானே தனியாக எல்லாவற்றையும் செய்வேன்.

'இந்நிலையில் ஒரு நாள் திடீரென்று தலிபான் கூட்டம் ஒன்று என் வீட்டினுள் நுழைந்தது. மிகுந்த கோபத்தில் அவர்கள் என்னிடம் நீ ஒரு பெண், நீ தனியாக வியாபார நிறுவனம் நடத்தக் கூடாது. இதனை உடனே மூடிவிட வேண்டும் என்றார்கள். மேலும் என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒழுக்கம் குறைந்த பெண் என்றார்கள். செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்த பட்டியலை வெளியிட்டனர். பர்தா அணிவது கண்டிப்பாக்கப்பட்டது, வானொலி டேப்ரெக்கோடர் கேட்பது தடைசெய்யப்பட்டது. பெண்கள் தனியே கடைக்குச் செல்ல அனுமதியில்லை, கணவர் இல்லாமல் வீட்டில் தனியாக இருக்க பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. எல்லாப் பெண்களும் தங்கள் இடது கையில் தங்களது கணவர்களின் பெயர்களை பச்சை குத்தவேண்டும். இப்படி பல கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

'நான் இங்கு முக்கியமான ஒரு நிகழ்வைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். எங்கள் கிராமத்தில் ஒரு பெண்ணின் மகனுக்கு உடல் நிலை மோசமடைந்து இருந்தது. உடனே அவள் தன் மகனுக்கு ஓதிப் பார்ப்பதற்காக (வஹ்ஹாபிகள் இதை ஏற்றுக்கொள்வதில்லை) அப்பகுதியில் உள்ள மதகுருவை அழைத்தார். அந்த அழைப்பை ஏற்று மதகுரு அந்த வீட்டிற்குள் நுழைந்தார். இதனைப் பார்த்துவிட்ட சில தலிபான்கள் அந்த வீட்டிற்குள் நுழைந்தனர். அவர்கள் இருவரையும் உள்ளூர் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள சதுக்கத்திற்கு கொண்டு சென்று பொதுமக்கள் முன்னிலையில் இருவரையும் சுட்டுக்கொன்றனர். இந்நிகழ்வால் எங்கள் முழுக் கிராமமுமே கொந்தளித்தது. எங்கள் கிராமத்திலுள்ள பழங்குடித் தலைவர்களை தலிபான் இயக்கத்தினர் சந்திப்பது வழக்கம். அங்கு அவர்கள் தங்களுக்கு உணவைக் கேட்பார்கள். இப்படியாக எங்கள் வீட்டிற்கு 50 முறை வந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக சமைத்து உணவளித்திருக்கிறேன். 50 பேர்களாக வருவார்கள். சில சமயங்களில் கிராமத்து வீடுகள் ஆயுதங்களுக்காக தேடுதல்கள் நடத்தப்படும். எங்களிடத்தில் இரு ஏ.கே.47 இருந்தன. உண்மையில் ஒவ்வொரு வீடும் அதற்கான சொந்த ஆயுதங்களைக் கொண்டிருந்தன. சுற்றிலும் எங்கும் பயங்கரம் நிலவியிருந்ததைக் காட்டியது.

'1994 என்று நினைக்கிறேன். திகதி சரியாக ஞாபகம் இல்லை. காரணம் கிராமப்புற ஆப்கானில் நாட்காட்டிகளே கிடையாது. அங்குள்ள மக்கள் பிறையைப்பார்த்தே நாட்களைக் கணக்கிட்டு வந்தனர். எனக்கு எப்படியாவது அங்கிருந்து தப்பித்தாக வேண்டும். என் பக்கத்து வீட்டுக்காரரின் உதவியைக் கேட்டேன். அவர் என் கணவர் மாதிரி நடிக்க ஒப்புக்கொண்டார். என்னை அங்கிருந்து பாகிஸ்தான் எல்லை வரை கடத்த ஒப்புக்கொண்டார். ஆனால், இஸ்லாமாபாத்தில் இந்தியத் தூதரகம் என்னை அனுமதிக்காது. ஏனெனில், அப்போது என்னிடம் பாஸ்போட்டோ அல்லது விசாவோ இருக்கவில்லை. இதனை அறிந்து என் கணவரின் சகோதரர்கள் என்னை வழியில் கண்டுபிடித்து மீண்டும் பழைய இடத்திற்கு கொண்டுவந்தனர். அவர்கள் என்னை இந்தியாவிற்கு அனுப்ப உறுதியளித்தனர். ஆனால், அந்த உறுதிமொழிக்கு மாறாக அவர்கள் என்னை வீட்டுக்காவலில் வைத்தனர். என்னை ஒழுக்கமற்றவள் என்று முத்திரை குத்தினர். தலிபான்கள் எனக்குப் பாடம் கற்பிப்பர் என்று மிரட்டினர்.

'ஒரு நாள் இரவு நான் சுவர் ஏறிக் குதித்து சகதிகளுக்குள்ளே கஷ்டப்பட்டு நடந்து அங்கே இருந்து தப்பித்தேன். பின்னர் காபூலில் தலிபான்கள் என்னை அடையாளம் கண்டு கைது செய்தனர். சுமார் 50இற்கும் மேற்பட்ட தலிபான்கள் என்னிடம் விடிய விடிய விசாரணை நடத்தினர். அவர்களிடம் நான் ஓர் இந்தியப் பிரஜை என்பதை மீண்டும் மீண்டும் கூறினேன். ஒருவழியாக நான் சொன்னவற்றை நம்பிய அவர்கள் பின்னர் என்னை இந்தியத் தூதரகத்திடம் ஒப்படைத்தனர். எப்படியோ நான் திரும்பி கல்கத்தா வந்து சேர்ந்தேன். நான் கல்கத்தாவிற்கு திரும்பியபோது மேற்கண்ட எனது அனுபவங்களை வைத்து நாவல் ஒன்று எழுத முடிவு செய்தேன். அதுதான் ''காபூல் வாசியின் வங்காள மனைவி'' என்ற பெயரில் வெளிவந்தது. என்னைப் போன்றே ஆப்கானில் ஏராளமான இந்தியப் பெண்கள் தலிபான்களின் பிடியில் இருக்கிறார்கள். அவர்களை மீட்பதற்கு சிலர் உதவுவார்கள் என நம்புகிறேன்'. கிராமத்தில் வாழ்ந்தபோது சுஷ்மிதா மருத்துவப் பணியுடன் அம்மக்களிடையே கல்வி குறித்த விழிப்புணர்வையும் ஊட்டி வந்தார்.

சுஷ்மிதா பானர்ஜி எழுதிய 'காபூல் வாசியின் வங்காள மனைவி' என்ற நாவல் 1994இல் வெளியிடப்பட்டது. இந்த நாவல் தலிபான்களின் அடக்குமுறைகளைப் பேசியது. இதனால் தலிபான்களின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டார். தலிபான்களிடம் இருந்து அவர் தப்பியது பற்றிய இந்நூல், பிறகு மனிஷா கொய்ராலா நடித்த இந்தித் திரைப்படமாகவும் 2003இல் வெளியானது.

ஆப்கானிஸ்தானில் அப்போது ஆட்சி புரிந்த தலிபான்களுக்கு சுஷ்மிதாவின் செயற்பாடுகள் பெரும் கோபத்தை ஏற்படுத்தின. அவரின் வீட்டுக்கு வந்து அவரை பலமுறை எச்சரித்திருக்கிறார்கள். அவரது தொழிலைக்கூட நிறுத்தும்படி கேட்டிருக்கிறார்கள். தலிபான்கள் சுஷ்மிதாவின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தத் தொடங்கினார்கள். எப்படியும் அங்கிருந்து தப்பித்து வெளியேவர முயற்சித்தார். சுஷ்மிதா இந்தியாவில் சில காலம் வாழ்ந்து வந்தார். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கானில் ஹமீது ஹர்சாய் ஆட்சிக்குப் பிறகு நிலைமைகள் சீரடைந்ததாக உணர்ந்த அவர் மீண்டும் ஆப்கான் திரும்பினார். ஆப்கான் வாழ்க்கையில் தலிபான்களால் தனக்கேற்பட்ட அனுபவங்கள், துயரங்கள் மற்றும் வலிகள் குறித்த பிரக்ஞையை பல தருணங்களில் எழுத்தாகப் பதிவு செய்தார். ஆப்கான் வாழ்க்கை தனக்கு பெரும் சவாலாக இருந்த பதிவுகளையும் ஆங்காங்கு முறையாக பதிவு செய்யத் தொடங்கினார். பல பத்திரிகை நேர்காணல்களிலும் தெளிவாக தலிபான்களின் அடாவடித்தனங்களை விரிவாக எடுத்துக்கூறி வந்தார்.

இந்நிலையில் நீண்ட காலமாக சுஷ்மிதாவைக் குறிவைத்திருந்த தலிபான்கள் அவரின் வீடு புகுந்து அவரை வெளியே இழுத்து வந்து சரமாரியாகச் சுட்டுக்கொன்றனர். இவரது சிறுவயது நண்பரான தமிழ்வாசு கூறுகையில்; சுஷ்மிதா உற்சாகமும் தைரியமும் உடைய பெண் என்றும், தங்களுடன் நெருக்கமாகப் பழகியதாகவும் தனக்கு ஆயுத மேந்திய அடிப்படைவாதக் குழுக்களினால் விடுக்கப்படும் கொலை மிரட்டல்களையும், மிரட்டல்கள் பற்றி அவ்வப்போது குறிப்பிட்டதாகவும் குறிப்பிட்டார்.

சுஷ்மிதா பானர்ஜியின் கொலைக்கு வங்கமொழி எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் தங்களது அதிர்ச்சியையும் அனுதாபத்தையும் தெரிவித்தனர். ஒரு எழுத்தாளருக்கு 21ஆம் நூற்றாண்டிலும் இப்படி நேர்வது மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று மூத்த எழுத்தாளர் மகாஸ்வேதாதேவி குறிப்பிட்டுள்ளார். இது போல் எழுத்தாளர் நபனீதசென் இச் செய்தியைக் கேட்டு தான் மிகவும் அதிர்ச்சியடைந்ததாகவும் நடந்த சம்பவத்தைத் தன்னால் நம்பமுடியவில்லையென்றும் கூறியுள்ளார். இதைவிட சென் மேலும் குறிப்பிட்ட இன்னொரு கருத்து இங்கு முக்கியமானது. சுஷ்மிதா எழுதிய பல விடயங்கள் தலிபான்களுக்கு உவப்பில்லாதவை. எனவேதான் அவர் இந்தியா திரும்ப நேரிட்டது. ஆனால், அவர் மீண்டும் ஆப்கான் திரும்ப முடிவு செய்தது அவரது தைரியத்தைக் காட்டினாலும் புத்திசாலித்தனமானதல்ல என்றும் குறிப்பிட்டார். வேறு ஒரு கலாசாரத்தில் வாழ்ந்து அதுபற்றி தனது கருத்துகளை பதிவு செய்த ஒரு இந்தியப் பெண் என்ற முறையில் சுஷ்மிதா பானர்ஜி குறித்து தான் பெருமைப்படுவதாகவும் சென் குறிப்பிட்டார்.

ஆப்கானில் தலிபான்கள் ஆளுகைக்கு வந்தபோது மீண்டும் சுதந்திரப் போக்கை பின்னுக்குத் தள்ளும் பழமைவாதப் போக்கு மேலோங்கியது. அனைத்து மக்களின் மீதும் புதிய வகை ஒழுங்குகளும் நடைமுறைகளும் புகுத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியான செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்தக் கொலையும் அமைந்துள்ளது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு



சிவகணேசன்



# முடிவுக்கட்டத்தை எட்டுகிறதா டெஸ்ட் கிரிக்கெட்?

சர்வதேச கிரிக்கெட் தளம்பத் தொடங்கியுள்ளது. மூன்று வகை கிரிக்கெட்டில் எந்த ஆட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதென்பதி லேயே இந்தத் தளம்பல் ஏற்பட்டுள் ளது. டெஸ்ட் போட்டியின் ஆயுள் காலம் முடிவடையும் நிலைக்கு வந்து விட்டது. சர்வதேச ஒருநாள் போட்டியும் ஆட்டம் காணத்தொட ங்கிவிட்டது. அதிரடியாக ஆடப் படும் 'ருவென்ரி-20' போட்டியே இன்று ரசிகர்களை ஆக்கிரமித்துள் ளது. இதனால் கிரிக்கெட் விளை யாடும் நாடுகள் 'ருவென்ரி-20' போட்டிக்கே முக்கியத்துவம் கொடுக் கத் தொடங்கிவிட்டன. இதனால் சர்வதேச ஒருநாள் போட்டியைத் தக்க வைக்க அதில் அடிக்கடி மாற் றங்கள் செய்யப்படுகின்றன. எனி னும் இந்த மாற்றங்களுக்குக்கூட எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கிவிட் டன.

டெஸ்ட் போட்டியின் மவுசு குறை ந்து விட்டதால், 50 ஓவர் கொண்ட ஒரு நாள் போட்டியா 20 ஓவர் கொண்ட 'ருவென்ரி-20' போட்டியா என்ற கேள்வி எழுந்துவிட்டது. டெஸ்ட் போட்டிகளின் ஜாம்பவான் கள் சர்வதேச ஒருநாள் போட்டிக ளிலும் ஆடியதால் ஒருநாள் போட் டிக்கும் முன்னர் ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரும் வரவேற்பிருந்தது. டெஸ்ட் போட்டிகளில் சுவாரஸ்யம் இல்லாது போக ஒரு நாள் போட்டி அதன் இடத்தைப் பிடித்துக் கொண்ட தால் அதனை தொடர்ந்தும் தக்க வைக்க பல்வேறு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால், மூன்று, நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் ஒருநாள் போட்டிக்கும் மவுசு குறை யத் தொடங்கிவிட்டது.

கம்பியூட்டர் யுகம் அனைத்து மாறு தலுக்கும் காரணமானது. வாசிப்புப் பழக்கத்துக்கு இணையங்களின் வருகை எப்படி பின்னடைவைத் கொண்டுவந்ததோ அதேபோன்று விளையாட்டுலகிலும் பெரும் மாற் றங்கள் ஏற்பட்டுவிட்டன. 5 நாள் நடைபெறும் டெஸ்ட் போட்டியென் பது தற்போது கிரிக்கெட்டில் தண்ட னைக்குரியதொரு குற்றமாக மாறி விட்டதால் கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் போட்டி அட்டவணைக ளில் ஒரு வருடத்திற்கு ஒரு சர்வதேச அணி ஆகக்கூடியது எட்டு அல்லது பத்து டெஸ்ட் போட்டிகளிலேயே பங்குபற்றுகின்றன. ஆனால், அதுவு மின்று கேள்விக்குறியாகிவிட டெஸ்ட் போட்டியென்பது இன்று எவராலுமே வேண்டப்படாததொரு போட்டியாகிவிட்டது. இதற்கு என் றாவது முற்றுப்புள்ளி வைத்தால் ஆச் சரியமில்லையென்றதோர் நிலை உரு வாகி விட்டது.

இந்த நிலையில் தான் கிரிக்கெட் டின் அடுத்த கட்டமாயிருக்கும் 50 ஓவர் சர்வதேசப் போட்டியும், இளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டெஸ்ட் போட்டிகளில் சுவாரஸ்யம் இல்லாமல் போக ஒருநாள் போட்டி அதன் இடத்தைப் பிடித்துக்கொண்டது. ஆனால் மூன்று தசாப்தங்களுக்குப்பிறகு ஒருநாள் போட்டிக்கும் மவுசு குறையத் தொடங்கி விட்டது. கிரிக்கெட் நாடுகள் இப்போது ருவென்ரி 20 போட்டிக்கே முக்கியத்தை கொடுக்கத் தொடங்கிவிட்டன

தலைமுறையை மட்டுமன்றி தற்போது எல்லோரையுமே ஆக்கிரமித்துவிட்ட 'ருவென்ரி-20' போட்டி குறித்தும் கிரிக்கெட் உலகம் ஆராய்கிறது. அதிலும் 50 ஓவர் கிரிக்கெட்டை 20 ஓவர் கிரிக்கெட்டுக்கு இணையாக மாற்றும் முயற்சிகள் பல்வேறு கோணங்களிலும் மாற்றப்பட்டாலும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியை 20 ஓவர் கிரிக்கெட்டுக்கு இணையாக மாற்ற முடியவில்லை. இதன் மவுசை அதிகரிக்க 50 ஓவர் கிரிக்கெட்டில் செய்யப்படும் மாற்றங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் மட்டுமல்லாது, சர்வதேச ஒருநாள் போட்டியில் பங்கேற்கும் அணிகளிடையேயும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. ஆரம்பத்தில், அதாவது 1975களில் ஒருநாள் போட்டியென்பது 60 ஓவர்களாயிருந்தன. பின்னர் அது 80 களின் ஆரம்பத்தில் 50 ஓவர்களாயின. அப்போது இதற்கு மிகப்பெரும் மவுசு இருந்தது. 2000இற்குப் பின்னரும் ஒருநாள் போட்டியின் மவுசு குறையவில்லை. ஆனால், 2010 இல் ஒருநாள் போட்டியும் கேள்விக் குறியாகிவிட்டது. இந்திய கிரிக்கெட் சபைக்குள் ஏற்பட்ட குழப்பம் காரணமாக முன்னாள் இந்திய அணித் தலைவர் கபில்தேவின் எண்ணத்தில் உருவானதே 'ருவென்ரி-20' தொடர். இது இன்று முழுக்கிரிக்கெட் உலகையும் ஆக்கிரமித்து விட்டது.

இதன் அதிரடி வருகையால் தான் ஒருநாள் போட்டிகளிலும் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இந்த வருட முற்பகுதியில் சில புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஒருநாள் போட்டியை எப்படி மேலும் சுவாரஸ்யப்படுத்துவது என்பதன் யோசனையின் காரணமாகவே புதிய விதிகள் அறிமுகமாகின. 50 ஓவர் என்பதில் எந்தவித மாற்றமுமின்றி அதில் வேறு மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் ஒருநாள் போட்டியை மேலும் சுவாரஸ்யமாக்கலாமா என சிந்தித்தார்கள். இதன் விளைவாகவே புதிய விதிகள் அறிமுகமாகின. இதன்படி, ஒரு இனிங்ஸில் இரு புதிய பந்து (அதாவது 25 ஓவர்கள் ஒரு பந்து 25 ஓவர்கள் இன்னொரு பந்து). ஒரு ஓவருக்கு இரு பவுன்சர்கள் வீசுவது, களத்தடுப்பு கட்டுப்பாடென புதிய முறைகள் இவ்வருட ஆரம்பத்தில் அறிமுகமாகின. இந்திய- பாகிஸ்தான் ஒருநாள் போட்டித்தொடர் மூலம் இந்தப் புதிய விதிகள் அமுலுக்கு வந்தன. ஒரு ஆண்டுக்கு இது அமுலிலிருக்குமென்பதே இதன் நிபந்தனையாக இருந்தது. இந்த ஒரு ஆண்டென்பது புதிய விதிகளுக்கான சோதனை முறையாகும். எனினும் இந்தப் புதிய முறைக்கு பல நாட்டு அணிகளும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்திய அணிக்கப்டன் தோனி, பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல்ஹக், இங்கிலாந்து வீரர் ட்ரெட் வெல், இந்தியாவின் ஹர்பஜன் சிங் ஆகியோர் ஆரம்பத்தில் அதிருப்தி தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் இலங்கை வீரர் மஹேல ஜெயவர்தனவும் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இது பற்றி மஹேல கூறுகையில், புதியவிதி எனக்கு திருப்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிக்கவில்லை. ஒருநாள் போட்டியின் புதிய விதிப்படி களத்தடுப்பு கட்டுப் பாடு எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும். இது சுழற்பந்து வீச்சா ளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். 11ஆவது ஓவர் முதல் 40 ஆவது ஓவர் வரை நான்கு வீரர்கள் மட்டுமே வெளிவட்டத்தில் நிற்க முடியும். உள் வட்டத்தில் 5 வீரர்கள் நிற்கலாம். சுழற்பந்து வீச்சாளர்களுக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அவர்கள் ஓட்டங்களைக் கொடுத்துத் தான் விக்கெட்டை கைப்பற்ற முய ற்சிப்பார்கள் எனக் கூறினார். அத்து டன், துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதக மான ஆடுகளத்தில் சுழற்பந்து வீச் சாளர்களால் பந்து வீசுவது கடினம் எனவும் தெரிவித்திருந்தார்.

அப்போது இவர்கூறிய கருத்து களை தற்போது இந்திய கிரிக்கெட் சபை கூறத்தொடங்கியுள்ளது. 50 ஓவரில் இரண்டு பந்துகளைப் பயன் படுத்துவதென்பது சாத்தியமற்ற தொன்றாகி விட்டதெனக் கூறுகிறது. இரு முனைகளிலிருந்தும் தனித்த னியே பந்துகள் வீசப்படுகின்றன. பந்து வீச்சாளர்களின் நலன்கருதியே இந்த விதிமுறை அமுல்படுத்தப்பட் டது. இதனை வேகப்பந்து வீச்சாளர்க ளும் வரவேற்றனர். ஆனால், ஒரு இனிங்ஸில், அதாவது 50 ஓவரில் இரு பந்துகளை பயன்படுத்துவதென் பது சுழற்பந்து வீரர்களைப் பெரிதும் பாதிக்குமென்பது இந்திய கிரிக்கெட் சபையின் விவாதமாகும். டெஸ்ட், ஒருநாள் மற்றும் 'ருவென்ரி-20' போட்டிகளில் இந்திய அணி எப் போதுமே சுழற்பந்து வீச்சாளர்க ளையே நம்பியுள்ளது. 50 ஓவரில் ஒரு பந்தை பயன்படுத்தினால் முதல் பத்து அல்லது 15 ஓவருக்குப் பின் னர் சுழற்பந்து வீச்சாளர்கள், பந்து வீச அழைக்கப்படுவர்.

முதல் 10 அல்லது 15 ஓவரில் பந்து அடிபட்டு சற்று சிதைந்து இருக் கும் போது, சுழற்பந்து வீச்சாளர்க ளுக்கு அதில் பந்து வீசுவது இலகு வாயிருக்கும். சுழற்பந்து வீச்சாளர் கள் பந்தை, தமக்கேற்ப சுழற்றக்கூடிய வகையில் பந்துகளிருக்கும். இதன் மூலம் விக்கெட் கிடைக்காவிட்டா லும், பந்தை நன்கு சுழற்றக்கூடிய தன்மை சுழற்பந்து வீச்சாளர்களுக்கு ஏற்பட அவர்களது பந்து வீச்சில் துடுப்பாட்ட வீரர்கள் திணறுவர். ஆனால், ஒரு இனிங்ஸில் இரு புதிய பந்துகளென்பது, ஒன்றுவிட்ட ஒரு ஓவரில் அந்தந்த புதிய பந்துகள் பயன்படுத்தப்படும். 25ஓவருக்கு ஒரு பந்து பயன்படுமென்பதால் சுழல் பந்து வீச்சாளர்களுக்கு பந்து வீசுவது மிகக்கடினமாயிருக்கும். ஆனால், ஆரம்பப்பந்து வீச்சாளர் களோ தங்கள் வேகம் குறையாத வித த்தில் பந்தின் மினுமினுப்பை பயன்ப டுத்தி நன்கு பந்து வீசுவர். இது பந்து வீச்சாளர்களுக்கு மிகவும் சாதகமாயி ருப்பதுடன், துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களை குவிக்கச் சிரமப்படு வர். ஒருநாள் போட்டி விறுவிறுப் பாக இருந்தால்தான் ரசிகர்கள் அதனை ரசிப்பர். பந்து வீச்சாளர்க ளின் கையோங்கி, அதுவும் வேகப் பந்து வீச்சாளர்கள் தங்கள் கைவ ரிசையை காட்டத் தொடங்கி துடுப் பாட்ட வீரர்களால் ஓட்டங்கள் குவி க்க முடியாது போகும்போது போட்டி யின் சுவாரஸ்யம் குறையும் 50 ஓவ ரின் முடிவில் பெறப்படும் ஓட்டங்க ளின் எண்ணிக்கையும் குறைந்துவிட அடுத்து ஆடும் அணிபெறவேண்டிய ஓட்ட எண்ணிக்கையும் குறைய, பந் துவீச்சாளர்களின் கை ஓங்க ஒரு நாள் போட்டி ஒரு டெஸ்ட் போட்டி யாகிவிடும்.

ஏற்கனவே, நடுவரின் தீர்ப்பில் சந்தேகமிருந்தால் அதை எதிர்த்து மேன்முறையீடு செய்யும் முறை (டி.ஆர்.எஸ்) கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையி லான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இந் தமுறை பெரும் சர்ச்சையை ஏற்படுத் திவிட அது ஒருநாள் போட்டிகளு க்கும் பயன்படுத்துவதென்பது கேள் விக்குறியாகிவிட்டது. துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் துடுப்பு மட்டைக ளில் 'சிலக்கன் ரேப்' பை ஒட்டி இந்த முறையிலிருந்து தப்பி விட்டமை ஆஷஸ்தொடரில் சர்ச்சையாகி விட்ட தால் கிரிக்கெட்டின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிவிட, டெஸ்ட் ஒரு நாள் போட்டிகளில் ரசிகர்களுக்கு ஆர்வம் மேலும் மேலும் குறைந்து விட்டது. ஆரம்பம் முதலே டி.ஆர்.எஸ். முறைக்கு இந்திய கிரிக் கெட் சபை கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்ததால் இந்திய அணி பங்கு பற் றிய போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பு மறு பரிசீலனை முறை இருக்க வில்லை. நடுவர்கள் பலர் அடிக்கடி தவறுவிட போட்டிகளின் சுவாரஸ் யங்கள் கெட்டு முடிவுகளிலும் எதிர் பாராத மாற்றங்கள் ஏற்பட்டு விடு கின்றன. இதைவிட நடுவரின் தீர்ப்பு மறுபரிசீலனை முறையுள்ள போட்டி களில் கூட வீரர்கள் மோசடிகளில் ஈடுபட அந்த முறையே (டி.ஆர்.எஸ்) கேள்விக்குறியாகிவிட்டது.

டெஸ்ட் போட்டி பெரும்பாலும் தனது முடிவுக்கட்டத்தை எட்டிவிட்ட தென்றே கூறலாம். ஒருநாள் போட்டி யும் எந்தளவு காலத்திற்கு தாக்குப் பிடிக்குமென்ற கேள்வி எழுந்துள்ள தால் 'ருவென்ரி-20' போன்ற வேறு வித ஆட்டங்கள் கிரிக்கெட்டுக்கு ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகி விட்டன. இதிலிருந்து ஒருநாள் போட்டியைக் காப்பாற்ற பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின் றன. அந்த முயற்சிகளுக்காக அறிமு கப்படுத்தப்பட்டுள்ள புதிய விதிகள் சில அந்தப் போட்டியையே ஆட் டம் காணச் செய்துவிடலாமென்ற நிலையேற்பட்டுள்ளது. இந்த விதி முறை மாற்றங்கள் ஒரு நாள் போட் டிக்கு உயிர்கொடுக்காவிடின் அதற் கும் டெஸ்ட் போட்டியின் நிலை வந்துவிடலாமென எச்சரிக்கப்படுகி றது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைவிமர்சனம்




மயூரா

**சமூகப் பிரக்ஞையுடன் சில பிரச்சினைகளை பேசுவதற்கு துணிந்த இயக்குநர் ராம் பாராட்டுக்குரியவர். குறிப்பாக தனியார் கல்விப் பிரச்சி னைகளை, நுகர்வுக்கலாசார வெறித்தனத்தை தங்க மீன்கள் பேசுவதற்கு துணிந்தமைக்கு நாம் நிச்சயம் ஆதரவு வழங்க வேண்டும்**

தற்போது தமிழில் நிறைய எதிர்பார்ப்புகளுடன் வெளி வந்துள்ள படம் தங்கமீன்கள். இப்படம் பரவலான வரவேற்புக்கும் ஆதரவிற்கும் உள்ளாகியுள்ளது. பொது வாக நல்லபடங்களை அங்கீகரிக்கும், பார்க்கத் துடிக்கும் பார்வையாளர்வெளி சாதகமாக உருவாகிவருகின்றது. புதிய முயற்சிகளில் ஈடுபடக்கூடிய இளம் இயக்குநர்க ளின் வருகை தமிழ் சினிமாவின் முகத்தை அல்லது அடை யாளத்தை மாற்றுகிறது.

தங்கமீன்கள் படத்தை இயக்கியவர் ராம். இவர் ஏற்க னவே தமிழில் 'கற்றது தமிழ்' எனும் படத்தை இயக்கியி ருந்தார். இந்தப் படம் மூலம் கவனம்பெறும் இயக்குநராக அறிமுகமானார். பாலுமகேந்திராவின் பள்ளியில் இருந்து ராம் வெளியே வந்தவர்.

உணர்ச்சிக்களமான களத்தை மையமாக வைத்து இப்ப டத்தை ராம் எடுத்துள்ளார். தந்தைக்கும் மகளுக்குமான உறவை அற்புதமாகக் காட்டியிருக்கிறார். தன் மகள் ஆசைப்பட்ட எதையும் செய்யத் துடிக்கும் ஒரு தந்தை க்கும் ஒரு மகளுக்குமிடையேயான பாசப்பரிமாடல் தான் தொடக்கக்காட்சி முதல் இறுதிக்காட்சி வரை விரிகிறது. இந்தப் படத்தில் வரும் கதைக்களமும் கதாப்பாத்திரங் களும் பாராட்டும் வகையில் மனதைத் தொட்டுமுள்ளன.



ஒரு சில காட்சிகளிலேயே செல்லம்மாவும் ஊரும் குளமும், மலையும் ரயிலும், வீடும் பகல் இரவும், பாடசா லையும் மனிதர்களும் மிகவும் பழக்கமானவர்களாக நம் முடன் உறவாடுகின்றனர். பசுமையை விதவிதமான வடி வில் போர்த்திக்கொண்டிருக்கும் அந்த ஊரில் கல்யாண சுந்தரம் எனும் கல்யாணியின் பொருளியல் வாழ்க்கை வறண்டுபோயிருக்கிறது. இடையே அந்த வறட்சி நிலை குலைய வைத்தாலும், மகளோடு மீட்டும் நேரத்தில் கல் யாணி அந்த ஊரின் பசுமையை மிஞ்சுகிறார். மகளின் மகிழ்ச்சி தவிர அவனுக்கு வேறு தேவைகளோ, கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோ முக்கியமல்ல. கல்யாணியின் மகள் செல்லம்மாவாக வரும் சாதனா இயல்பாக நடிக்கிறார். இவர் ரொம் பவும் அழகாகவும், அற்புதமாகவும் இப்படத்தில் வாழ்ந்துள்ளார்.

இந்தப் படத்தில் அப்பா, மகள் உறவு பாசப்பிணைப்பு மட்டுமல்ல, மாறாக, வேறுபல விடயங்களும் உள்ளன. மூன்றாம் வகுப்பு படிக்க வேண்டிய வயதில் இரண்டாம் வகு ப்பு படிக்கும் செல்லம்மா மந்தமான ஒரு சிறுமி. கற்றுக்கொள்வதில் சக மாணவர்களோடு மிகவும் பின்தங்கி யிருப்பதாக வகுப்பு ஆசிரியைக ளால் அவ்வப்போது எரிச்சலோடு திட்டப்படுகிறாள். அந்தக் கணிப்பு பள்ளியோடு முடியாமல் வீடுவரை செல்வாக்குப் பெறுகின்றது. கல்யா ணியின் பெற்றோரும் மனைவியும் கூட செல்லம்மா அப்படியிருப்பதை வைத்து வருத்தமோ, கோபமோ, எரிச்சலோ அடைவதோடு இய லாமை அல்லது விதியென்று நினை த்து நொந்துகொள்ளவும் செய்கிறார் கள்.

தனது மகள் கற்றுக்கொள்வதில் குறைபாடுடையவள் என்பதை கல் யாணி ஒருபோதும் ஏற்றுக்கொள்ள வில்லை. அதேநேரம் அதை ஒரேயடி யாக மறுக்கும் வண்ணம் நம்பிக் கையூட்டும் விதமாக வேறு செயல்க ளில் ஈடுபடும் பாத்திரமாக கல்யாணி வளர்க்கப்படவில்லை. ஆரம்பத்தில் கல்யாணி தனியார் பள்ளியால் மட் டுமே தனது மகளுக்கு சிறப்பான கல் வியைக் கொடுக்க முடியும் என நம்பி னான். இருப்பினும் படிப்படியாக அந்த நம்பிக்கையை இழக்கிறான். தனது பிள்ளையை ஒதுக்குவதில் அந் தப்பள்ளி பிரதான இடம்பிடிக்கிறது என்பதைக் கண்டுகொள்கிறான். ஒது க்கப்படும் மகளோடு கூடுதல் நேரத் தைக் கழிக்க விரும்புகிறான். அவ ளது உள்ளுணர்வு சார்ந்து இயங்கும் தேடல்வழியே அவளது உலகத்து டன் நெருக்கமாக, இணக்கமாக கல் யாணி வாழ்ந்துவருகிறான். மகளின் குழந்தை உலகிற்குச் சென்று கதைகள் பல சொல்கிறான். அவளது உளச் சம நிலையை சமப்படுத்துவதில் தீவிர மாகப் போராடுகிறான். அவளது இயல்பைப் புரிந்துகொண்டு அவளு க்கு நம்பிக்கையூட்டும் ஒருவனாக உள்ளான். ஆனால், இந்தத் தர்க்கம் தெளிவாக கதையாடல் சார்ந்து வளர்த்தெடுக்கப்படவில்லை.

ஒரு விதத்தில் கல்யாணி எனும் பாத்திரத்தை மனநிலை பிறழ்வான கிறுக்கனாகவே உணர்ந்துகொள்வ தற்கான பல தருணங்கள் தான் அதிக மாக அமைக்கப்பட்டுள்ளன. தெளி வாகக் கூற வேண்டுமானால், இயக்குநர் ராமுக்கு இப்படத்தை என் னவாக எடுக்கலாம் என்பதில் பெரிய குழப்பமே ஏற்பட்டு விட்டது. மக ளுக்காக பொருள்தேடி அலையும் அப்பனின் வலியைக் காண்பிப்பதா? இல்லை தனியார் பள்ளிகளின் கொடு மையைக் காண்பிப்பதா?பிள்ளைக ளின் இயல்பான தேடுகைக்கு எதிராக இயங்கும் ஆசிரியைகளின் மனப் பாங்கை வெளிப்படுத்துவதா? அல் லது கல்வியாலும், பெரியவர்களா லும் புரிந்துகொள்ள முடியாத குழந் தையைக் காண்பிப்பதா? என்று யோசித்து எல்லாவற்றையும் கலந்து கதம்பமாக எதுவுமே முழுமையாக இல்லாமல் அரைகுறையாக படத்தை எடுத்துள்ளார்.

ராம் இயக்குநராக இருந்து கதை, திரைக்கதை உருவாக்கத்தில் முழு மையாக ஈடுபடவில்லை. படத்தின் மையப்பாத்திரமான கல்யாணி பாத் திரமேற்று நடிப்பதிலும் அதிக கவ னம் செலுத்தியுள்ளார். இதனால், திரைமொழி படிப்படியாக தொலைந் துவிடும் அவலம் தான் செல்வாக்குப் பெற்றுள்ளது. இது பல்வேறு குளறு படிகளையும் சிறுபிள்ளைத்தனங் களையும் உருவாக்கியுள்ளது. சர்வ தேச கலப்படங்கள் பார்த்துவந்த அனுபவத் திரட்சி ராம் எனும் இயக் குநரின் ஆளுமையில் முழுமையா கச் செல்வாக்குப் பெறவில்லை. ஈரா னிய படங்களின் தாக்கத்தை இயக்கு நர் முழுமையாக உள்வாங்கி இருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தங்கமீன்கள் ஒரு சிறந்தபடமாக உருவாக்கப்பட்டிருக்க முடியும். அதற்கேற்ப கதை திரைக்கதை அமைப்பாக்கத்திலும் ஈடுபாட்டுடன் உழைத்திருக்க முடியும். மொத்தத்தில் இப்படத்தில் சொல்லாமல் தவற விட்ட அம்சங்கள் தான் அதிகம். நாம் இவற்றை ஊகித்துத்தான் கண்டுபிடித்தாக வேண்டும்.

கல்யாணியின் மனைவி கதாப்பாத்திரம் பன்னிரண்டாவது படிக்கையில் கதாநாயகனை நம்பி வந்தவள். அவளுக்கு கல்யாணியின் செயற்பாடுகளின் மேல் எந்த அதிருப்தியும் ஏற்படவில்லை. இயல்பாக வெளிப்படும் மாமியார் வெறுப்புக்கூட அவளுக்கு உருவாகாது. இத்தனைக்கும் மாமியார் கதாப்பாத்திரம் அவளை சீண்டுவதாகத்தான் இருக்கிறது. ஆனால், அதற்கு ஏற்ற எதிர் வினையை அந்த மருமகள் கதாப்பாத்திரம் செய்யாது. தன் மகளின் படத்தைக் கழற்றும்போது கூட மாமியார் விழுந்துவிடாமல் இருக்க மேசையைத் தாங்கிப்பிடிக்கிறாள். அப்படி மிக மிக நல்ல கதாப்பாத்திரம். ஆனால், அவளது இயலாமை வெறுப்பு, எதிர்ப்பு, முதலான உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் அவள் படைக்கப்படவில்லை.

இப்படம் செல்போன் பேசிக்கொள்ளும் காலத்தில் தான் உள்ளது. அதாவது, 2013இல் கதை நகருகிறது எனக் கூறலாம். ஆனால், படத்தில் கல்யாணி பெறும் சம்பளம் 1980 களின் ஆரம்பத்தில் வாங்கிய சம்பளமாகத் தான் உள்ளது. கேரளாவிற்கு சம்பாதிக்கப் போகும் கல்யாணி அங்கேயும் நாலாயிரத்தைத் தாண்டவில்லை. இந்த முரண் ஏனோ உணரப்படவில்லை. எவிடா மிஸ் வீட்டுக்கு கல்யாணி போகும் காட்சி அழகாக உள்ளது. அங்கு மிக நுட்பமாக எவிடா மிஸ்ஸுக்கும் அவர் கணவருக்குமான உறவு பற்றி நமக்கு காட்டும் காட்சி அற்புதம். பின்னர் ஒரு காட்சியில் போனில் பேசும் போது எவிடா மிஸ் அவரது கணவரைப் பார்த்து புன்னகைப்பது ஒரு சிறப்பான அருட்டுணர்வு. இங்குதான் ராம் ஒரு இயக்குநருக்கான முத்திரையைத் தெளிவாகப் பதித்துள்ளார்.

இப்படத்தின் ஒளிப்பதிவு சிறப்பாக அமைந்துள்ளது. வசனங்கள் கூட திருப்தியாக உள்ளது. பின்னணி இசை படுமோசமென்று கூறுவதற்கில்லை. ஆனால், புரியாத புதிர் பாசக்கார தந்தை, ஏன் ஒரு சைக்கோ போல் நடிக்கிறார் என்பது புரியவில்லை. இந்தத் தன்மை கற்றது தமிழ்ப்படத்திலும் ஜீவா கதாப்பாத்திரத்தில் ஏற்பட்ட விபத்துதான். தங்கமீன்கள் படத்திலும் ராம் அதைத் தொடர்வது சகிக்க முடியவில்லை. ஆனால், தமிழில் எவ்வளவோ மோசமான மட்டரகமான படங்களைப்பார்த்து பழகிக்கொண்டிருக்கும் நமக்கு தங்கமீன்கள் படத்தைப் பார்ப்பதில் தவறொன்றும் இல்லை. சமூகப்பிரக்ஞையுடன் சில பிரச்சினைகளைப் பேசுவதற்கு துணிந்த ராம் பாராட்டுக்குரியவர் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக, தனியார் கல்விப் பிரச்சினைகளை நுகர்வு கலாசார வெறித்தனத்தை இப்படம் பேசத் துணிந்தமைக்கு நாம் நிச்சயம் ஆதரவு வழங்க வேண்டும். ■

---

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

பிரச்சினைகள், உலகளாவிய ரீதியாக தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக தமிழகத்தை சார்ந்த சமூகங்கள் அடையாத அனுபவங்களை எதிர் கொண்டதன் காரணமாக, அதன் கலை இலக்கியங்களின் உள்ளடக்கங்கள் தனித்துவமானவையாக அமைந்ததன் காரணமாக உருவங்கள், உள்ளடக்கங்களை வெளிப்படுத்த கையாளப்பட்ட மொழி ஆகியவையும் தனித்துவமாக வெளிப்பட்டன.

அதற்கு பின்வரும் நிலைமைகள் அடிப்படையாக அமைந்தன

1. 1950 தொடக்கம் ஈழத்து தமிழ்ச் சூழலில் தமிழகத்தில் இல்லாத ஒரு நிலைமையாக சாதியப் போராட்டம் மார்க்ஸிய இயக்கத்துடன் இணைந்த ஒன்றாக இருந்தமை.
2. 1980களுக்குப் பின்னான காலகட்டத்தில் ஈழத்து தமிழ் பேசும் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளின் போது ஏற்பட்ட, ஒரே நாட்டுக்குள் போர்ச்சூழல், போர்க் காலச்சூழல், அகதி வாழ்வு, இடப் பெயர்வு போன்ற நிலைமைகள் உருவாகியமை.
3. ஈழத்து தமிழ் மக்கள் புலம் பெயர்வு வாழ்வியல் மூலம் பெற்ற அனுபவங்கள்.

மேற்குறித்த நிலைமைகள் மூலம் ஈழத்து தமிழ் கலை இலக்கியச் சூழலானது, உலகத் தமிழ் இலக்கியம் ஒன்றின் உருவாக்கத்திற்கு வித்திட்ட பொழுதும், மேலைத்தேயத்தில் தோற்றம் பெற்ற சமூக, அரசியல், கலை இலக்கியக் கோட்பாடுகள் (மார்க்ஸியக் கோட்பாடு உட்பட) வேண்டி நின்ற நிலைவரங்களை இயல்பாகவே எதிர்கொண்டதாக இருந்தபோதிலும் அந்தக் கோட்பாடுகள் அறிமுகப்படுத்திய இலக்கிய ஆய்வு-விமர்சன முறைமைகளுடன் நோக்கப்படாமல் விட்டமையால் தான் என்னவோ, தமிழகத்தைச் சார்ந்த தமிழ் கலை இலக்கிய ஆய்வாளர்கள் -விமர்சகர்கள், ஈழத்து தமிழ் இலக்கியம் வளர்ச்சி அடையவில்லை என்றும் அது உலகத் தரத்தில் இல்லை என்றும் சொன்னார்களோ என்று கேட்கத் தோன்றுகிறது.

ஆனால், சமீபத்தில் தமிழகத்தைச் சார்ந்த தமிழ் கலை இலக்கிய ஆய்வாளர்கள் -விமர்சகர்கள் மத்தியில், ஈழத்து தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றிய கருத்தில் மாற்றம் தெரிகிறது. அ.மார்க்ஸ் ஆரம்ப காலம் தொடக்கமே ஈழத்து தமிழ் இலக்கியம் தனித்துவமானது என்று சொல்லி வருபவர்களில் ஒருவர். தமிழவன், ராஜ்கௌதமன், யமுனா ராஜேந்திரன் மற்றும் வெங்கட் சாமிநாதன் ஆகியோர் ஈழத்து தமிழ் இலக்கியமானது தனித்துவமான ஒரு வளர்ச்சிப் போக்கில் நடைபோடுகிறது என்பதை ஒத்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# ஈழத்து தமிழ் கலை இலக்கிய வளர்ச்சி குறித்து...

ஈழத்து நவீன தமிழ் கலை இலக்கிய வளர்ச்சி பற்றி 'பிறரிடம்' எத்தகைய கருத்து நிலவுகிறது என்பதை நாம் தேடி ஆராயவில்லை என்பதே நமது சூழலில் நிலவும் குறையாக இருக்கிறது. 1950களின் தொடக்கத்திலே ஈழத்து நவீன தமிழ் கலை இலக்கிய வளர்ச்சியில் பெரும் மாற்றத்தைக் கண்டிருக்கிறோம். ஆனால் ஈழத்து நவீன தமிழ் கலை இலக்கியம் வளரவில்லை என்ற மாதிரியான குறையினை பிறர் அன்றைய காலம் தொடக்கம் சொல்லி வந்துள்ளனர். பிறர் என்று நாம் குறிப்பிடுவது, அன்றைய காலம் தொடக்கம் தமிழகத்தையும் இன்றைய நிலையில் தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு ஈழத்து தமிழ் இலக்கியங்கள் கிடைக்கப் பெற்றிருக்கும் சிங்கள கலை இலக்கிய உலகத்தினரையும்தான்.



மேமன்கவி

பல வருடங்களுக்கு முன் இங்கு வந்த தமிழக எழுத்தாளர் பகீரதன் பல வருடங்களுக்கு ஈழத்து தமிழ் இலக்கியம் பின்தங்கியுள்ளது என்றொரு குறையினைச் சொல்லிச் சென்றார். அதற்கு நம்மவர்கள் பொங்கி எழுந்து பதில் சொல்லி அவரது கூற்று பிழையானது என நிரூபித்தார்கள்.

ஆனாலும், ஈழத்து தமிழ் இலக்கியம் பற்றி ஏதாவது குறை சொல்லிக் கொள்வது தொடரத்தான் செய்தது. சில வருடங்களுக்கு முன் தமிழகத்தைச் சேர்ந்த கவனத்திற்குரிய விமர்சகர் தமிழவன் புலம் பெயர்ந்த ஈழத்து தமிழர்கள் மத்தியில் உரையாடிய பொழுது, ஈழத்து தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு பேராசிரியர் க.கைலாசபதியின் 'தமிழ் நாவல் இலக்கியம்', 'என்ற நூலே கடு விளைவித்தது என்றொரு அவதூறை முன் வைத்தார். (இந்த நூலைப் பற்றி கருத்தியல் ரீதியான ஒரு விமர்சனத்தை வெங்கட் சாமிநாதன் முன்வைத்தவேளை பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் நீண்டதொரு பதிலை மல்லிகை சஞ்சிகையில் எழுதியமை இங்கு நினைவுக்கு வருகிறது) ஆனால், தமிழவனின் அந்த அவதூறுக்கு எம்மவர்கள் இன்றுவரை எந்த விதமான எதிர்வினையையும் ஆற்றவில்லை என்பது பெரும் குறையாகும்.

இப்படியாக தமிழகத்திலிருந்து ஈழத்து தமிழ் இலக்கியத்தைப் பற்றி குறை சொல்வது இன்று வரை தொடரத்தான் செய்கிறது. அவ்வாறான குறைகளில் ஒன்றாக ஈழத்து தமிழ் இலக்கியம் உலகத் தரத்தில் இல்லை என்ற ஒரு கூற்றும் அடங்கும். உலகத் தரத்திற்கான அளவுகோல் அவர்களால் முன் வைக்கப்படாத நிலையிலும், உலகத்தின் சிறந்த இலக்கியங்களின் பட்டியலில் ஒரு தமிழ் இலக்கியப் படைப்பேனும் சொல்லப் படாத நிலையில்தான் தமிழகத்தைச் சேர்ந்தவர்களால் அவ்வாறான கூற்று முன் வைக்கப்படுகிறது.

அவ்வாறான ஒரு குறை சொல்வதற்கான காரணம் என்னவென்று பார்த்தோமானால், உலக இலக்கியங்கள் மற்றும் உலகளாவிய ரீதியாக செல்வாக்குச் செலுத்திய சமூக, அரசியல், கலை இலக்கியக் கோட்பாடுகள் ஆகியவற்றின் பரிச்சயம் ஆங்கில மொழி வழியாகவும், மொழி பெயர்ப்பு வழியாகவும் அவர்களுக்கு இருந்தமையின் காரணமாக அமைந்தது. ஆனால், ஈழத்தில் உலக இலக்கியங்களின் மற்றும் சமூக, அரசியல், கலை இலக்கியக் கோட்பாடுகளிட்ட ஈழத்து தமிழ் மொழிபெயர்ப்பு முயற்சிகள் மிகக் குறைவாக இருந்தமையும், மேற்குறித்த சமூக, அரசியல், கலை இலக்கியக்கோட்பாடுகள் ஈழத்து தமிழ்ச் சூழலில் செல்வாக்குச் செலுத்த முடியாத ஒரு சூழலும் இங்கு நிலவியது.

1950கள் தொடக்கம் ஈழத்து தமிழ் கலை இலக்கியத் தளத்தில், மேற்குறித்த சமூக அரசியல் கலை இலக்கியக் கோட்பாடுகள் தமக்கு எதிர் நிலைக்கோட்பாடாக நினைத்த மார்க்ஸிய கோட்பாட்டின் நியாயமான செல்வாக்கின் காரணமாக மேற்குறித்த கோட்பாடுகளிட்ட ஈடுபாட்டை, கவனயீர்ப்பை ஈழத்து தமிழ் கலை இலக்கியத் தளத்தில் ஏற்படுத்த முடியவில்லை.


அத்தோடு, 1980களுக்குப் பின்னரான ஈழத்து தமிழ் பேசும் சமூகம் எதிர் கொண்ட

*(65ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org